# பணமும் வங்கித்தொழிலும்

## பண நிரம்பல்

### பொதுவான போக்குகள்


நாணயக் கூட்டுக்களின் வளர்ச்சி வீதத்தில் ஏற்பட்ட மிதமான வீழ்ச்சியே 1992 இல் நாணய அபிவிருத்திகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க பண்பாக விளங்கியது. 1990 இன் நடுப்பகுதியிலிருந்து நிலவிய உயர்ந்த மட்டங்களுக்கு மாறாக, குறுகிய பண நிரம்பலின் ($M_1$) ஆண்டு வளர்ச்சி வீதம் 1992 யூலையிலிருந்து வீழ்ச்சியடைந்து செல்லும் போக்கினைப் பதிவு செய்து ஆண்டினிறுதியில் 7.3 சதவீதத்தினையடைந்தது. இது 1991 இன் இறுதியில் காணப்பட்ட 18 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடத்தக்கதாகும். இம் மெதுவான போக்கினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் $M_1$ இன் மாதாந்த சராசரி அதிகரிப்பும் 1991 இன் 13.6 சதவீதத்திலிருந்து 1992 இல் 12.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதே போக்கினைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் விரிந்த பண நிரம்பலில் ($M_2$) ஏற்பட்ட ஆண்டு அதிகரிப்பு, முன்னைய ஆண்டின் 23.2 சதவீதத்திலிருந்து 1992 இறுதியில் 16.6 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது எனினும், இவ்வீழ்ச்சியின் மத்தியிலும் $M_2$ இன் மாதாந்த சராசரி வளர்ச்சி. 1991 இன் 19 சத வீதத்திலிருந்து 1992 இல் 21.3 சதவீதத்திற்கு உயர்வுற்றது.

நாணய வளர்ச்சியில் ஏற்பட்ட வீழ்ச்சித் தன்மை ஆண்டின் பின்னரைப் பகுதியில் மிகத் தெளிவாகக் காணப்பட்டது. 1991 இறுதியின் 18 சதவீதத்திலிருந்து 1992 ஏப்பிறலில் 17 சதவீதத்திற்கு மிகச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த $M_1$ இன் ஆண்டு வளர்ச்சி அதனைத் தொடர்ந்து வந்த பல மாதங்களில் மிகக் கூடுதலான வீழ்ச்சியைக் காட்டி, 1992 திசெம்பரில் 7.3 சதவீதத்தினை அடைந்தது. அதேவேளை 1991 இறுதியின் 23.2 சதவீதத்திலிருந்து 1992 ஏப்பிறலில் 25.9 சதவீதத்திற்கு உயர்வடைந்த $M_2$ இன் ஆண்டு வளர்ச்சி, அதன் பின்னர் வீழ்ச்சியுற்று 1992 திசெம்பரில் 16.6 சதவீதத்தினை அடைந்தது.

இத்தகைய சாதகமான அபிவிருத்திகள் காணப்பட்டபோதும், தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் மேலும் ஏற்பட்ட முன்னேற்றம், தனியார் துறைக்கான உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட தொடர்ச்சியான உயர் வளர்ச்சி என்பனவற்றின் தாக்கம் காரணமாக இவ்வாண்டில் பண நிரம்பலின் வளர்ச்சி உயர்வாகக் காணப்பட்டது. பொதுவாக, வங்கித்தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 37.3 சதவீதத்தினால் உயர்வடைந்து ஆண்டின் இறுதியில் ரூ. 237,580 இலட்சத்தினை அடைந்த வேளையில் 1991 இல் 20.7 சதவீதத்தினைப் பதிவுசெய்த தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி வீதம் 1992 இறுதியில் 23 சதவீதத்திற்கு விரிவடைந்தது.

நாணயத் தளம் (உயர்வலு நாணயம் அல்லது ஒதுக்கு நாணயம்) 1992 இறுதியில் ரூ. 448,580 இலட்சமாக விளங்கி ரூ. 48,020 இலட்சம் அல்லது 12 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இது முன்னைய ஆண்டில் காணப்பட்ட அளவில் ஏறத்தாழ அரைப் பங்காக இருந்தது. மூலப் பக்கத்தில், மத்திய வங்கியின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களில் (தே.வெ.சொ.) ஏற்பட்ட ரூ. 75,630 இலட்சம் கொண்ட அதிகரிப்பே இவ் விரிவாக்கத்திற்கு முழுமையாக வகை கூறியது. எனினும், திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் பெருமளவு காரணமாக, மத்திய வங்கியின் தேறிய உள்

பண நிரம்பல்
மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

## அட்டவணை 1.57

## நாணயக்கூட்டுக்கள் 1990—1992


(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| கால முடிவில் | குறுகிய பண நிரம்பல் ($M_1$) | | | | | | விரிந்த பண நிரம்பல் ($M_2$) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1990 | 1991 | 1992 | 1989 ஐ விட 1990 இல் சதவீத மாற்றம் | 1990 ஐ விட 1991 இல் சதவீத மாற்றம் | 1991 ஐ விட 1992 இல் சதவீத மாற்றம் | 1990 | 1991 | 1992 | 1989 ஐ விட 1990 இல் சதவீத மாற்றம் | 1990 ஐ விட 1991 இல் சதவீத மாற்றம் | 1991 ஐ விட 1992 இல் சதவீத மாற்றம் |
| சனவரி ... | 35,442 | 39,913 | 44,833 | + 13.5 | + 12.6 | + 12.3 | 76,879 | 90,161 | 112,867 | + 13.1 | + 17.3 | + 24.6 |
| பெப்புருவரி ... | 36,750 | 40,416 | 47,128 | + 15.7 | + 10.0 | + 14.1 | 78,590 | 90,867 | 113,572 | + 15.3 | + 15.6 | + 25.0 |
| மாச்சு ... | 37,402 | 41,876 | 48,312 | + 14.7 | + 12.0 | + 15.4 | 81,169 | 93,814 | 116,193 | + 16.2 | + 15.6 | + 23.8 |
| எப்பிறல் ... | 38,122 | 41,411 | 48,492 | + 16.5 | + 8.6 | + 17.0 | 81,876 | 94,292 | 118,710 | + 16.1 | + 15.2 | + 25.9 |
| மே ... | 36,767 | 41,190 | 47,304 | + 15.4 | + 12.0 | + 14.8 | 80,771 | 95,317 | 118,398 | + 15.8 | + 18.0 | + 24.2 |
| யூன் ... | 36,386 | 41,602 | 47,007 | + 13.6 | + 14.3 | + 13.0 | 81,407 | 96,162 | 117,627 | + 16.8 | + 18.1 | + 22.3 |
| யூலை ... | 36,206 | 40,801 | 46,208 | + 8.2 | + 12.7 | + 13.3 | 81,469 | 96,456 | 117,513 | + 15.0 | + 18.4 | + 21.8 |
| ஓகத்து ... | 36,496 | 41,821 | 46,687 | + 7.3 | + 14.6 | + 11.6 | 82,956 | 98,941 | 119,144 | + 16.3 | + 19.3 | + 20.4 |
| செத்தெம்பர் ... | 37,429 | 43,274 | 47,285 | + 8.4 | + 15.6 | + 9.3 | 85,057 | 101,896 | 120,447 | + 16.6 | + 19.8 | + 18.2 |
| ஒற்றோபர் ... | 36,811 | 43,187 | 46,758 | + 6.6 | + 17.3 | + 8.3 | 85,973 | 105,366 | 122,975 | + 17.2 | + 22.6 | + 16.7 |
| நவெம்பர் ... | 37,490 | 43,157 | 47,107 | + 9.9 | + 15.1 | + 9.2 | 86,659 | 107,976 | 125,090 | + 17.2 | + 24.6 | + 15.8 |
| திசெம்பர் ... | 39,878 | 47,055 | 50,490 | + 12.8 | + 18.0 | + 7.3 | 91,017 | 112,097 | 130,701 | + 19.1 | + 23.2 | + 16 6 |
| மாதாந்த சராசரி ... | 37,098 | 42,142 | 47,218 | + 11.8 | + 13.6 | + 12.1 | 82,819 | 98,612 | 119,395 | + 16.2 | + 19.0 | + 21.3 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## உள்நாட்டுக் கொடுகடன்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

அட்டவணை 1.58

# நாணயக்கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும் 1990–1992

(பத்து இலட்சம் ரூபாய்களில்)


| விடயம் | 1990 திசெம்பர் | 1991 திசெம்பர் | 1992 திசெம்பர் | மாற்றம் 1990/1991 தொகை | மாற்றம் 1990/1991 சதவீதம் | மாற்றம் 1991/1992 தொகை | மாற்றம் 1991/1992 சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| **நாணயக்கூட்டுக்கள்** | | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் ... | 22,120 | 24,852 | 27,280 | + 2,732 | + 12.4 | + 2,428 | + 9.8 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் ... | 17,758 | 22,202 | 23,210 | + 4,444 | + 25.0 | + 1,008 | + 4.5 |
| குறுகிய பண நிரம்பல் (M¹) ... | 39,878 | 47,055 | 50,490 | + 7,177 | + 18.0 | + 3,435 | + 7.3 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | 51,139 | 65,043 | 80,211 | + 13,904 | + 27.2 | + 15,168 | + 23.3 |
| 3.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 927 | 1,743 | 2,714 | + 816 | + 87.9 | + 971 | + 55.7 |
| 3.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 4,664 | 7,509 | 7,391 | + 2,845 | + 61.0 | + 118 | — 1.6 |
| 3.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் (அ) ... | 45,548 | 55,791 | 70,106 | + 10,243 | + 22.5 | + 14,315 | + 25.7 |
| **விரிந்த பணநிரம்பல் (M²)** ... | 91,017 | 112,097 | 130,701 | + 21,080 | + 23.2 | + 18,604 | + 16.6 |
| **ஏதுக்காரணிகள்** | | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் ... | 119,864 | 134,226 | 153,347 | + 14,362 | + 12.0 | + 1,9121 | + 14.2 |
| 1.1 அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் ... | 39,197 | 41,792 | 42,350 | + 2,595 | + 6.6 | + 558 | + 1.3 |
| 1.1.1 அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 52,524 | 59,458 | 54,090 | + 6,934 | + 13.2 | + 5,368 | — 9.0 |
| மத்திய வங்கியால் ... | 38,206 | 45,981 | 40,604 | + 7,775 | + 20.3 | + 5.377 | — 11.7 |
| வர்த்தக வங்கிகளால் ... | 14,318 | 13,477 | 13,486 | — 841 | — 5.9 | + 9 | + 0.1 |
| 1.1.2 அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் ... | — 13,327 | — 17,666 | — 11,740 | — 4,339 | + 32.5 | — 5,926 | — 33.5 |
| 1.2 தனியார்துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 80,667 | 92,434 | 110,997 | + 11,767 | + 14.6 | + 18,563 | + 20.1 |
| 1.2.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 1,596 | 1,757 | 2,021 | + 161 | + 10.0 | + 264 | + 15.0 |
| 1.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 15,636 | 14,077 | 14,750 | — 1,559 | — 10.0 | + 673 | + 4.8 |
| 1 2.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் ... | 63,435 | 76,599 | 94,226 | + 13,164 | + 20.7 | + 17,627 | + 23.0 |
| 2. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) ... | 10,206 | 17,305 | 23,758 | + 7,099 | + 69.6 | + 6,453 | + 37.3 |
| 2.1 மத்திய வங்கி (தேறிய) ... | 4,675 | 13,486 | 21,049 | + 8,811 | + 188.5 | + 7,563 | + 56.1 |
| 2.2 வர்த்தக வங்கிகள் (தேறிய) ... | 5,531 | 3,819 | 2,709 | — 1,712 | — 31.0 | + 1,110 | — 29.1 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) ... | — 39,053 | — 39,434 | — 46,403 | — 381 | — 1.0 | — 6,969 | — 17.7 |
| 3.1 மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 15,039 | — 15,739 | — 19,903 | — 700 | — 4.6 | — 4,164 | — 26.5 |
| 3.2 வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 24,968 | — 23,651 | — 25,317 | + 1,317 | + 5.3 | — 1,666 | — 7.0 |
| 3.3 இடைப்போக்கிலுள்ள விடயங்கட்கான சீராக்கங்கள் ... | 954 | —44 | 1,184 | — 998 | — 104.6 | — 1140 | — 2,590.1 |
| **விரிந்த பண நிரம்பல் (M²)** ... | 91,017 | 112,097 | 130,701 | + 21,080 | + 23.2 | + 18,604 | + 16.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: அடையாளங்கள் M² இன் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.
(அ) வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர.

## வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய)

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி.

நாட்டுச் சொத்துக்கள் (தே.உ.சொ.) ரூ. 27,600 இலட்சத்தினால் குறைவடைந்தமை ஆண்டுப் பகுதியில் ஒதுக்கு நாணயத்தின் வளர்ச்சி வீதத்தினை மிதமாக்கியது. பணப்பெருக்கி—பணநிரம்பலுக்கும் நாணயத்தளத்திற்கும் இடையிலான விகிதம் ஓராண்டிற்கு முன்பிருந்த 2.80 இற்கு எதிராக 1992 திசெம்பரில் 2.91 ஆக அமைந்திருந்தது. இப்பெயர்ச்சி நாணய வைப்பு விகிதம் 1991 இன் 28 சதவீதத்திலிருந்து 1992 இல் 26 சதவீதத்திற்குக் குறைவடைந்தமையின் ஓரளவு பிரதிபலிப்பாகும்.

நாணய மற்றும் கொடுகடன் விரிவாக்கத்தின் உயர் மட்டங்கள் 1992 இல் இறுக்கமான நாணயக் கொள்கையைத் தொடர்ந்தும் வைத்திருப்பதற்கு மத்திய வங்கியை நிர்ப்பந்தித்தன. இதன்படி, வங்கி வீதம் 17 சதவீதத்தில் பேணப்பட்ட வேளையில் மத்திய வங்கியின் மீள் நிதியிடல் வீதங்கள், சந்தை வட்டி வீதங்களுக்கு இணையாக அவற்றைக் கொண்டு வருவதற்காக அவை அடிக்கடி மேல் நோக்கித் திருத்தப்பட்டன. சுறுசுறுப்பான திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் ஊடாக பொருளாதாரத்திலுள்ள மிகையான திரவத் தன்மையை அகற்றும் விதத்தில் நாணயக் கொள்கையும் நெறிப்படுத்தப்பட்டது. அதேவேளை நாணயக் கொள்கையின் திணிப்பு மறைமுகமான கட்டுப்பாடுகளில் கூடுதலாகக் காணப்பட்டதுடன், 1989 யூன் தொடக்கம் இருந்து வந்த நாணயக் கடிதத்தின் மீதான வைப்பு எல்லை அகற்றப்பட்டதைத் தொடர்ந்து நேரடிக் கட்டுப்பாடுகள்மீது தங்கியிருப்பது குறைக்கப்பட்டது. கொடுகடனுக்குக் காணப்பட்ட தொடர்ச்சியான உயர்ந்த கேள்வியின் பின்னணியில், இக்கொள்கை நிலை 1992 முழுவதும் குறுங்கால வட்டி வீதங்களைச் சார்பு ரீதியில் உயர்ந்த மட்டங்களில் பேணுவதற்கு உதவியது.

**பண நிரம்பலும் ஏதுக் காரணிகளும்**

1992 இல், நாணயத்தையும் பொதுமக்கள் வசமிருந்த கேள்வி வைப்புக்களையும் உள்ளடக்கிய குறுகிய பணநிரம்பல் ($M_1$) முன்னைய ஆண்டின் 18 சதவீதம் (ரூ. 71,770 இலட்சம்) கொண்ட மிக உயர்ந்த அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 7.3 சதவீதத்தினால் (ரூ. 34,350 இலட்சம்) உயர்வடைந்தது. இவ்வாண்டில் $M_1$ இல் ஏற்பட்ட வளர்ச்சி 1991 இன் 12 சதவீதத்துடன் (ரூ. 27,320 இலட்சம்) ஒப்பிடுகையில் 10 சதவீதத்தினால் (ரூ. 24,280 இலட்சம்) உயர்வடைந்த நாணயக்கூறில் முக்கியமாகப் பிரதிபலிக்கப்பட்டது. மறுபுறத்தில், கேள்வி வைப்புக்கூறு முன்னைய ஆண்டின் 25 சதவீதம் (ரூ. 44,440 இலட்சம்) கொண்ட மிகக் கூடிய அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டுக் காலத்தில் 5 சதவீதத்தினால் (ரூ. 10,080 இலட்சம்) மிகச் சிறிதளவில் உயர்வடைந்தது. இதன் விளைவாக, $M_1$ இல் நாணயத்தின் பங்கு 1991 இன் 53 சதவீதத்திலிருந்து 1992 இல் 54 சதவீதத்திற்குச் சிறிதளவாக உயர்வடைந்தது.

அதேவேளை பொதுமக்களால் வர்த்தக வங்கிகளில் வைத்திருக்கப்பட்ட தவணை சேமிப்பு வைப்புக்களை உள்ளடக்கிய போலி நாணயம் 1991 இன் மிக உயர்ந்த வளர்ச்சியான 27 சதவீதத்துடன் (ரூ. 139,040 இலட்சம்) ஒப்பிடுகையில் 1992 இல் 23 சதவீதத்தினால் (ரூ. 151,680 இலட்சம்) வளர்ச்சியடைந்தது. போலி நாணயத்தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு இவ்வாண்டில் தனியார் துறைக் கூறுகளின் தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்கள் 26 சதவீதத்தினால் (ரூ. 143,150 இலட்சம்) அதிகரித்தமையே காரணமாகும். முன்னைய ஆண்டில் அத்தகைய வைப்புக்கள் 22 சதவீதத்தினால் (ரூ. 102,430 இலட்சம்)

உயர்வடைந்தன. அதேவேளை இதே காலப் பகுதியில் கூட்டுறவு நிறுவனங்களி னால் வைத்திருக்கப்பட்ட தவணை சேமிப்பு வைப்புக்கள் 56 சதவீதத்தினால் (ரூ. 9,170 இலட்சம்) வளர்ச்சியுற்றன. எனினும், அரச கூட்டுத்தாபனங்களின் அத்தகைய வைப்புக்கள் முன்னைய ஆண்டின் 61 சதவீதம் கொண்ட மிகக் கூடியளவு உயர்விற்கு (ரூ. 28,450 இலட்சம்) மாறாக 1992 இல் 2 சதவீதத் தினால் (ரூ. 1,180 இலட்சம்) சிறிதளவு வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் மூலமாகக் குறிப்பிடத் தக்க திரவத் தன்மை உருவாக்கப்பட்டமையும் உயர்ந்த சாதகமான உண்மை வட்டி வீதங்கள் வழங்கப்பட்டமையும் இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளுடனான தவணை சேமிப்பு வைப்புக்கள் தொடர்ந்தும் உயர்ந்தளவில் வளர்ச்சியுற உதவின. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் $M_1$ இனையும் பொதுமக்கள் வசமிருந்த தவணை சேமிப்பு வைப்புக்களையும் உள்ளடக்கிய விரிந்த பண நிரம்பல் ($M_2$) முன்னைய ஆண்டின் 23 சதவீதம் (ரூ. 210,800 இலட்சம்) கொண்ட வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1992 இல் 16.6 சதவீதத்தினால் (ரூ. 186,040 இலட்சம்) விரிவடைந்தது. மேலும், இவ்விரு ஆண்டுகளுக்கு மிடையில் $M_2$ இல் போலி நாணயத்தின் பங்கு 58 சதவீதத்திலிருந்து 61 சத வீதத்திற்கு உயர்வடைந்தது. நாணயக் கூட்டில் போலி நாணயத்தின் சார்பு ரீதியான பங்கு அதிகரித்தமை பொதுமக்கள் தமது முதலீட்டுச் சொத்துப் பட்டியலில் வட்டி உழைக்கும் சொத்துக்களை வைத்திருப்பதற்கு முன்னுரிமை வழங்கியமையைப் பிரதிபலிப்பதாகவுள்ளது.

உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான விரிவும் தேறிய வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் மேலும் ஒன்று திரண்டமையும் 1992 இல் நாணயக் கூட்டின்மீது குறிப்பிடத்தக்க விரிவாக்க அழுத்தமொன்றை ஏற்படுத்தின. 1991 இல் 12 சதவீத (ரூ. 143,620 இலட்சம்) வளர்ச்சியைப் பதிவு செய்த உள்நாட்டுக் கொடுகடன் 1992 இல் 14 சதவீதத்தினால் (ரூ. 191,210 இலட்சம்) உயர்வடைந்த வேளையில் வங்கித் தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் (தே.வெ.சொ.) 37 சதவீதம் (ரூ. 64,530 இலட்சம்) கொண்ட மேலுமொரு அதிகரிப்பினைப் பதிவு செய்தன. இதனால், முன்னைய ஆண்டினைப் போன்றே 1992 இலும் நாணயக்கூட்டின் மீதான உள்நாட்டுக் கொடுகடனின் விரிவாக்கத் தாக்கம் உயர்வானதாகக் காணப் பட்டது.

ஏனைய தனியார் துறையினால் (உண்மையான தனியார் துறை) கொடு கடன் அதிகரித்த அளவில் பயன்படுத்தப்பட்டமையே 1992 இல் உள்நாட்டுக் கொடுகடனில் ஏற்பட்ட வளர்ச்சிக்குப் பொறுப்பாக இருந்தது. வர்த்தக வங்கி களினால் உயர்ந்த வட்டி வீதங்கள் விதிக்கப்பட்டபோதும் வங்கித் தொழில் முறையிலிருந்து இத்துறைக்குக் கிடைத்த கொடுகடன் முன்னைய ஆண்டின் 21 சதவீதத்துடன் (ரூ. 131,640 இலட்சம்) ஒப்பிடுகையில் 23 சதவீதத்தினால் (ரூ. 176,270 இலட்சம்) அதிகரித்தது. தனியார் துறைக்கான கொடுகடனில் ஏற்பட்ட கணிசமான உயர்விற்குப் புதிதாக நிறுவப்பட்ட ஆடைத் தொழிற் சாலைகளினதும் பெருந்தோட்ட முகாமைக் கூட்டு நிலையங்களினதும் கொடு கடனுக்கான கேள்வி உயர்வடைந்தமையும் ஓரளவிற்குக் காரணமாக இருந்தது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு வங்கித் தொழில் முறையிலிருந்து கிடைத்த மொத்தக் கொடுகடன் 1991 இன் ரூ. 17,580 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 20,210 இலட்சத்திற்கு உயர்வடைந்து, 15 சதவீத அதிகரிப்பினைப் பிரதிபலித்தது.

அரச கூட்டுத்தாபனங்களுக்கான வங்கிக் கொடுகடன் 5 சதவீதத்தினால் (ரூ 6,730 இலட்சம்) உயர்வடைந்ததுடன் இவ்வுயர்வில் பெரும்பங்கினை 1992 இல் நீர்மின் உருவாக்கத்தில் காணப்பட்ட பற்றாக்குறையினை நிவர்த்தி செய்வதற்காக வெப்ப மின்பொறிகளைத் தொழிற்படுத்தியதின் காரணமாக வங்கிக் கொடுகடனில் பெருமளவிற்குத் தங்கியிருந்த இலங்கை மின்சபை கொண்டிருந்தது. மொத்தமாக இவ்வாண்டில் இலங்கை மின்சபைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் ரூ. 21,450 இலட்சத்தினால் உயர்வடைந்தது. அதேவேளை, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கான வங்கிக் கொடுகடன் 1991 இன் ரூ. 26,630 இலட்சம் கொண்ட கணிசமான அதிகரிப்பிற்கு மாறாக 1992 ரூ. 11,830 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு, தெரிந்தெடுக்கப்பட்ட பெற்றோலிய உற்பத்திகளின் விலைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் விளைவாக வருவாய் உயர்வடைந்தமையே முக்கிய காரணமாகும். இவ்வாண்டில் கூட்டுறவு மொத்த விற்பனவு நிறுவனத்தின் கொடுகடன் தேவைகளும் ரூ. 7,840 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியமைக்கு இவ்வாண்டில் தீர்வை நீக்கப்பட்டமையின் மூலம் காசு நிலைமை முன்னேற்றம் கண்டமையே காரணமாகும். இதேவேளை ஆண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்கும் இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குமான வங்கிக் கொடுகடன் முறையே ரூ. 8,650 இலட்சத்தினாலும் ரூ. 6,050 இலட்சத்தினாலும் விரிவடைந்தது. இவ்விரு கூட்டுத்தாபனங்களுக்குமான வங்கிக் கொடுகடன் அரச பெருந்தோட்ட முகாமை தனியார் கூட்டு நிலையங்களுக்குக் கையளிக்கப்பட்ட 1992 யூலை இறுதியில் காணப்பட்ட மட்டங்களில் நிலைப்படுத்தி வைக்கப்பட்டது.

குறைவான வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையை நோக்கி இறைச் சீராக்கங்கள் தொடர்ந்தும் மேற்கொள்ளப்படுவதனால் வரவு செலவுத் திட்டத் தொழிற்பாடுகளுக்காக அரசினால் பயன்படுத்தப்பட்ட வங்கிக் கொடுகடன் 1992 இல் குறைவாகக் காணப்பட்டது. மத்திய வங்கியுடனான அரச வைப்பு நிலுவைகளில் ரூ. 63,620 இலட்சம் கொண்ட குறைப்புக் காணப்பட்டபோதும் அரசிற்கான தேறிய கொடுகடன் ரூ. 9,840 இலட்சத்தினால் மாத்திரம் அதிகரித்தமைக்கு மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடைமைகள் ரூ. 80,590 இலட்சத்தினால் குறைவடைந்தமையே காரணமாகும். எனினும், அனுமதிப் பங்கு அதிகரிப்பிலிருந்து தோன்றிய ப.நா. நிதிய பொறுப்புக்கள் நீங்கலாக, ஆனால் சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்களின் மாற்றங்களை உள்ளடக்கிய மத்திய வங்கியிலிருந்து அரசிற்குக் கிடைத்த தேறிய கொடுகடன் ரூ. 18,960 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தது. இது ஒதுக்கு நாணய முகாமைத்துவத்திற்கான சாதகமானதொரு அபிவிருத்தியாகும். அதேவேளை வர்த்தக வங்கிகளிடமிருந்து அரசிற்குக் கிடைத்த தேறிய கொடுகடனும் ரூ. 4,260 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமைக்கு அரசின் வைப்புக்கள் ரூ. 4,370 இலட்சம் கொண்ட தொகைக்கு அதிகரித்தமையே பெரும்பாலும் முழுக் காரணமாகும்.

வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்கள் (தேறிய) ஆண்டு முழுவதும் தொடர்ந்து அதிகரித்தமைக்குச் சென்மதி நிலுவையின் திரண்ட நிலைமையில் ஏற்பட்ட உறுதியான முன்னேற்றமே காரணமாகும். பொதுவாக, 1992 இல் வங்கித் தொழில் முறையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்கள் 37 சதவீதத்தினால் (ரூ. 64,530 இலட்சம்) அதிகரித்தன. இது மத்திய வங்கியின் அத்தகைய சொத்துக்கள் ரூ. 75,630 இலட்சத்தால் அதிகரித்தமையினதும் வர்த்தக வங்கி

களின் அத்தகைய சொத்துக்கள் ரூ. 11,100 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமையினதும் இணைந்த விளைவாகும். இவ்வாண்டில் மத்திய வங்கியின் வெளிநாட்டு அரச மற்றும் அரசல்லாப் பிணைகளின் உடமைகள் ரூ. 220,980 இலட்சத்தினால் உயர்வடைந்தபோதும் மத்திய வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்கள் தேறிய அடிப்படையில் ரூ. 75,630 இலட்சத்தினால் மாத்திரம் அதிகரித்தமைக்கு திறைசேரி உண்டியல்கள் உட்பட வெளிநாட்டிலுள்ள காசு நிலுவைகளில் ஏற்பட்ட ரூ. 106,580 இலட்சம் கொண்ட வீழ்ச்சியும் பன்னாட்டு அமைப்புக்களினது வைப்புக்களில் ஏற்பட்ட ரூ. 38,710 இலட்சம் கொண்ட அதிகரிப்பும் காரணமாகும்.

அதேவேளை, வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1991 இறுதியின் ரூ. 186,330 இலட்சத்திலிருந்து ஆண்டின் இறுதியில் ரூ. 231,610 இலட்சத்திற்கு உயர்வடைந்து 24 சதவீதம் (ரூ. 45,280 இலட்சம்) கொண்ட அதிகரிப்பினைப் பதிவுசெய்தமைக்கு வெளிநாடுகளிலும், வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளிலுமுள்ள வைப்பு நிலுவைகள் ஒன்று சேர்ந்தமையே பெருமளவிற்குக் காரணமாகும். மறுபுறத்தில், வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்கள் ரூ. 204,520 இலட்சத்திற்கு உயர்வடைந்து ரூ. 56,380 இலட்சம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. இது 1992 இல் 37 சதவீதத்தினால் (ரூ. 49,020 இலட்சம்) உயர்வடைந்த வதியாதோர் வெளிநாட்டு நாணயக் கணக்குகளினூடான வெளிநாட்டு நாணய வைப்புக்களின் பெருமளவு உட்பாய்ச்சலின் விளைவாக ஏற்பட்டது. இவ்வபிவிருத்திகள் 1992 இல் சென்மதி நிலுவையில் சாதகமான திரண்ட நிலைமையினை உறுதிப்படுத்த உதவின.

## வர்த்தக வங்கித் தொழில்

### பொதுவான போக்குகள்

1992 இல் வர்த்தக வங்கித் தொழில் முறை தொடர்ந்தும் திருந்திய திரவ நிலைமையைக் காட்டியது. 1991 இல் ரூ. 85,630 இலட்சத்தினால் உயர்வடைந்த வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துக்கள் 1992 இல் ரூ. 47,490 இலட்சத்தினால் மேலும் அதிகரித்தன. அதேவேளை இவ்வாண்டில், கேள்வி வைப்புக்கள் ரூ. 17,810 இலட்சத்தினால் மட்டும் உயர்வடைந்தன. இதன்படி, கேள்வி வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 1991 இல் 160 சதவீதத்திலிருந்து 1992 இல் 166.6 சதவீதத்திற்கு மேலும் உயர்வடைந்து வர்த்தக வங்கிகளின் திருந்திய திரவத் தன்மை நிலைமையை எடுத்துக் காட்டின. திரவச் சொத்துக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 42,800 இலட்சத்தினால் உயர்வடைந்த வெளிநாட்டு நிலுவைகளில் மிக முனைப்பாகக் காணப்பட்டது. எனினும் 1990 இல் 44.3 சதவீதத்திலிருந்து 1991 இல் 43.6 சதவீதத்திற்கு மிகச் சிறிதளவால் வீழ்ச்சியடைந்த மொத்த வைப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 1992 இல் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து 40 சதவீதத்தினை அடைந்தது.

அட்டவணை 1.59

## வர்த்தக வங்கிகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள் ஆகியவற்றின் தேர்ந்தெடுக்கப்பட்ட விடயங்கள் 1991—1992

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| விடயம் | மாதாந்த எண் தொகைகளின் சராசரி | | காலப்பகுதி முடிவில் | |
|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1991 | 1992 |
| கையிலுள்ள பணமும், மத்திய வங்கியிலுள்ள வைப்புக்களும் (நியதி ஒதுக்குத் தேவைகளும் உட்பட) | 12,263 | 15,457 | 15,421 | 16,289 |
| வெளிநாட்டு நிலுவைகள் ... | 15,299 | 16,095 | 13,833 | 18,113 |
| திறைசேரி உண்டியல்கள் ... | 8,569 | 10,206 | 9,899 | 10,653 |
| கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் ... | 8,175 | 9,424 | 9,499 | 8,346 |
| மொத்தத் திரவச் சொத்துக்கள் ... | 40,780 | 50,897 | 48,652 | 53,401 |
| மொத்த முதலீடுகள் (அ) ... | 1,892 | 2,554 | 2,081 | 2,848 |
| மொத்தக் கடன்களும் மேலதிகப் பற்றுக்களும் ... | 80,617 | 91,333 | 84,752 | 104,288 |
| கேள்வி வைப்புக்கள் (ஆ) ... | 25,787 | 28,647 | 30,310 | 32,063 |
| தவணை வைப்புக்களும் சேமிப்பு வைப்புக்களும் (இ) ... | 70,670 | 88,734 | 81,281 | 101,499 |
| மொத்த வைப்புக்கள் ... | 96,457 | 117,381 | 111,591 | 133,562 |
| | % | % | % | % |
| கேள்வி வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் ... | 47.5 | 53.9 | 50.9 | 50.8 |
| மொத்த வைப்புக்களுக்குப் பணத்தின் விகிதம் .. | 12.7 | 13.2 | 13.8 | 12.2 |
| மொத்த வைப்புக்களுக்கு வெளிநாட்டு நிலுவைகளின் விகிதம் ... | 15.9 | 13.7 | 12.4 | 13.6 |
| மொத்த வைப்புக்களுக்கு திறைசேரி உண்டியல்களின் விகிதம் .. | 8.9 | 8.7 | 8.9 | 8.0 |
| மொத்த வைப்புக்களுக்கு கழிவு செய்யப்பட்ட வர்த்தக உண்டியல்களின் விகிதம் ... | 8.5 | 8.0 | 8.5 | 6.2 |
| கேள்வி வைப்புக்கான திரவச் சொத்துக்களின் விகிதம்... | 158.1 | 177.7 | 160.5 | 166.6 |
| மொத்த வைப்புகளுக்கு திரவச் சொத்துக்களின் விகிதம்... | 42.3 | 43.4 | 43.6 | 40.0 |
| மொத்த வைப்புகளுக்கு முதலீட்டின் விகிதம் ... | 2.0 | 2.2 | 1.9 | 2.1 |
| மொத்த வைப்புக்களுக்குக் கடன்களினதும் மேலதிகப் பற்றுக்களினதும் விகிதம் ... | 83.6 | 77.8 | 75.9 | 78.1 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

(அ) அரச, அரச உத்தரவாதப் பிணைகளும், தனியார் பிணைகளும்.

(ஆ) உள்நாட்டு வங்கிகளிடையே உள்ள வைப்புக்கள் நீங்கலாக.

(இ) சிறப்பு சேமிப்பு திட்டங்களின் கீழ் அரச வங்கிகளினால் 1991ஆம் ஆண்டிலும் 1992ஆம் ஆண்டிலும் நீண்ட தவணை வைப்புக்களாக முறையே திரட்டப்பட்ட பணத்தின் தொகையான ரூ. 23,210 இலட்சத்தையும் ரூ 27,220 இலட்சத்தையும் உள்ளடக்குகின்றது.

குறிப்பு: இங்கு கொடுக்கப்பட்ட எண் தொகைகளுக்கும் இவ்வறிக்கையில் வேறு இடங்களில் கொடுக்கப்பட்ட அதே எண் தொகைகளுக்கும் இடையேயான முரண்பாடுகள் வரைவிலக்கண வேறுபாட்டினால் ஏற்பட்டவையாகும்.

### சொத்துக்கள், பொறுப்புக்களின் அமைப்பு

அண்மைய ஆண்டுகளில் நிலவிய அபிவிருத்திகளை உறுதிப்படுத்துகின்ற விதத்தில், வர்த்தக வங்கிகளின் மூலவளப் பக்கம் 1992 இல் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினைக் காட்டியது. வர்த்தக வங்கிகளின் மொத்தச் சொத்துக்கள்

பொறுப்புக்கள் (எதிரீட்டு விடயங்கள் நீங்கலாக) முன்னைய ஆண்டின் 17 சத வீதம் (ரூ. 229,970 இலட்சம்) கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1992 இல் 19 சதவீதத்தினால் (ரூ. 291,470 இலட்சம்) உயர்வடைந்தன. பொறுப்புக்கள் பக்கத்தில், அனைத்து முக்கிய வகைகளிலும் ஏற்பட்ட மாற்றங்கள் இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளின் மூலவள அடிப்படையை விரிவாக்க உதவின. எனினும், வைப்புக்களில் ஏற்பட்ட 20 சதவீதம் கொண்ட வளர்ச்சி (ரூ. 215,970 இலட்சம்) மூலவளங்கள் அதிகரிக்கப்படுவதற்குத் தொடர்ந்தும் முக்கிய தூண்டு தலை வழங்கியதுடன் இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளின் மொத்த மூலவளங் களில் 75 சதவீதத்திற்கும் வகைகூறியது. இது தவணை சேமிப்பு வைப்புக்கள் அதேபோன்று கேள்வி வைப்புக்கள் இரண்டிலும் பிரதிபலித்ததெனினும் முன் னையதில் ஏற்பட்ட 25 சதவீதம் (ரூ. 198,170 இலட்சம்) கொண்ட பெரும் அதிகரிப்பு மிகப் பெரும் பங்கிற்கு வகை கூறியது. இது சேமிப்பு திரட்டல்களின் மீதான உயர்ந்த வட்டி வீதங்களைக் கொண்ட சாதகமான தாக்கத்தினையும் உயர்வடைந்த வெளிநாட்டு உட்பாய்ச்சல்களினூடான தொடர்ச்சியான திரவ அதிகரிப்பினையும் பிரதிபலித்தன. அதேவேளை ஏனைய பொறுப்புக்கள் 19 சத வீதத்தினால் (ரூ. 55,060 இலட்சம்) மேல்நோக்கி அசைந்த வேளையில் 1992 இல் வங்கிகளுக்கிடையிலான கடன்பாடுகள் (மத்திய வங்கி உட்பட) மற்றும் வெளிநாட்டுக் கடன்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்தக் கடன்பாடு கள் 13 சதவீதம் கொண்ட அதிகரிப்பினை (ரூ. 11,350 இலட்சம்) பதிவு செய்தன.

அதனைத் தொடர்ந்து இவ்வாண்டுக் காலத்தில் வர்த்தக வங்கிகளின் உயர்வடைந்த மூலவளத்தளம் உள்நாட்டுக் கொடுகடனை விரிவாக்குவதற்காகப் பயன்படுத்தப்பட்டது. வர்த்தக வங்கிகளின் சொத்துப் பட்டியலில் காணப்படும் சான்றுகளின்படி கடன்களும் முற்பணங்களும் 1991 இன் 15 சதவீதம் (ரூ. 126,090 இலட்சம்) கொண்ட உயர்வுடன் ஒப்பிடுகையில் 19 சதவீதம் (ரூ. 183,830 இலட்சம்) கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. அத்துடன் மேலதிகப் பற்று வசதிகளின்கீழ் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் 36 சதவீதத் தினால் (ரூ. 104,290 இலட்சம்) அதிகரித்தன. எனினும் சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்கள் 24 சதவீதத்தினால் (ரூ. 10,840 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் கழிவு செய்யப்பட்ட இறக்கு மதி உண்டியல்கள் 32 சதவீதத்தினால் (ரூ. 14,310 இலட்சம்) வீழ்ச்சியடைந்த போதும் 1992 இல் கையிலுள்ள காசு, மத்திய வங்கியுடனான வைப்புக்கள், வெளிநாட்டு நிலுவைகள், திறைசேரி உண்டியல்கள் மற்றும் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் என்பனவற்றை உள்ளடக்கிய மொத்தத் திரவச் சொத்துக்கள் 10 சதவீதத்தினால் (ரூ. 47,490 இலட்சம்) விரிவடைந்தன. இவ்வதிகரிப்பில் திறைசேரி உண்டியல் உடமைகள் ரூ. 7,540 இலட்சத்திற்கும் வெளிநாட்டு நிலுவைகள் ரூ. 42,800 இலட்சத்திற்கும் வகை கூறின. வர்த்தக வங்கிகளின் அதிகரித்த வைப்புப் பொறுப்புக்களுக்கு இணையாக மத்திய வங்கியுடன் வைத் திருக்கப்பட்ட நியதி ஒதுக்குகளும் ரூ. 18,990 இலட்சத்தினால் அதிகரித்தன.

**நிதியங்களின் மூலங்களும் பயன்பாடுகளும்**

1992 இல், உள்நாட்டுத் தனியார் துறையினால் கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் மற்றும் வேறு முறைகள் ஆகிய வழிகளில் பயன்படுத்தப்பட்ட மூலவளங்கள், வர்த்தக வங்கிகளுடன் இத்துறை வைத்திருந்த வைப்புக்களை ரூ. 18,970 இலட்சத்தினால் விஞ்சின. இதனால், கொடுகடனுக்கான உயர்ந்த

## அட்டவணை 1.60

### வர்த்தக வங்கிகளின் மூலவளங்களின் மூலங்களும் பயன்பாடுகளும் 1990 — 1992

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வகை | 1990/1991 இறுதி | | 1991/1992 இறுதி | |
|---|---|---|---|---|
| | மூலங்கள் | பயன் பாடுகள் | மூலங்கள் | பயன் பாடுகள் |
| **1. அரசதுறை** ... | — | **242.3** | 426.0 | — |
| அரச பிணைகளின் உடைமைகள் ... | 1,403.3 | — | — | 922.4 |
| வைப்புக்கள் ... | — | 1,083.6 | 435.5 | — |
| இறக்குமதி உண்டியல்கள் ... | — | 1,011.2 | 380.0 | — |
| குறுந்தவணைக் கொடுகடன் ... | 449.2 | — | 774.3 | — |
| மேலதிகப் பற்றுக்கள் ... | — | — | — | 241.4 |
| **2. மத்திய வங்கி** ... | — | **7,121.2** | — | 880.2 |
| கடன்பாடுகள் ... | — | 1,106.6 | — | 11.9 |
| ஒதுக்குகள் ... | — | 5,123.3 | — | 324.0 |
| மத்திய வங்கிப் பிணைகளிலான முதலீடுகள் ... | — | — | — | — |
| கையிலுள்ள காசு ... | — | 891.3 | — | 544.3 |
| **3. அரச கூட்டுத்தாபனங்கள்** ... | **4,964.8** | — | — | 881.6 |
| வைப்புக்கள் ... | 3,405.7 | — | — | 209.1 |
| முற்பணங்கள் ... | 1,559.1 | — | — | 672.5 |
| **4. கூட்டுறவுகள்** ... | **998.9** | — | 863.4 | — |
| வைப்புக்கள் ... | 1,159.9 | — | 1,127.4 | — |
| முற்பணங்கள் ... | — | 161.0 | — | 264.0 |
| **5. ஏனைய உள்நாட்டு தனியார் துறை** ... | **1,088.3** | — | — | 1,896.5 |
| வைப்புக்கள்* ... | 14,253.0 | — | 15,729.8 | — |
| உள்நாட்டு உண்டியல்கள் ... | 125.3 | — | — | 162.1 |
| இறக்குமதி உண்டியல்கள் ... | — | 1,138.5 | 999.3 | — |
| மேலதிகப் பற்றுக்கள் ... | — | 3,872.6 | — | 7,914.2 |
| கடன்கள் ... | — | 8,172.4 | — | 9,951.0 |
| பிணைகளிலும் முறிகளிலும் முதலீடு ... | — | 106.5 | — | 598.3 |
| **6. வங்கிகளுக்கிடையில் கொடுக்கல் வாங்கல்கள்** ... | 273.5 | — | — | 5.8 |
| உள்நாட்டு வங்கிகளுடனான நிலுவை ... | 434.4 | — | — | 429.7 |
| உள்நாட்டு வங்கிகளுடனான வைப்புக்களும் கடன்பாடுகளும் ... | — | 160.9 | 423.9 | — |
| | | | 1,109.6 | — |
| **7. வெளிநாட்டுத் துறை** ... | **1,712.5** | — | 749.3 | — |
| கடன்பாடுகள் ... | 68.3 | — | | |
| வைப்புக்கள் ... | 3,310.8 | — | 4,888.4 | — |
| வெளிநாட்டு நிலுவைகள்—ஏற்றுமதி உண்டியல்கள் உட்பட ... | — | 1,666.6 | — | 4,528.1 |
| **8. ஏனைய சொத்துக்களும் பொறுப்புக்களும்** | — | **1,674.5** | 1,265.1 | — |
| மூலதனமும் ஒதுக்குகளும் ... | 2,269.3 | — | 908.2 | — |
| நிலையான, ஏனைய சொத்துக்கள் ... | — | 4,824.7 | — | 4,748.6 |
| ஏனைய பொறுப்புக்கள் ... | 880.9 | — | 5,105.5 | — |
| மொத்த தேறிய மூலங்கள்/பயன்பாடுகள் ... | 9,038.0 | | 3,664.1 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

* சிறப்பு சேமிப்புத் திட்டத்தின்கீழ் இரு அரச வங்கிகளாலும் சேகரிக்கப்பட்ட நீண்டகால வைப்புக்களை உள்ளடக்கும்.

குறிப்பு: தடித்த எழுத்திலுள்ள எண்தொகைகள் ஒவ்வொரு துறைக்குமான தேறிய மூலங்களை **அல்லது** தேறிய பயன்பாட்டினை அவை பொருந்துமிடங்களைப் பொறுத்துக் குறிக்கின்றன.

கேள்வியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில், 1992 இல் உள்நாட்டுத் தனியார்துறை, வர்த்தக வங்கிகளினது நிதிகளின் முதன்மைப் பயன்படுத்துநராகத் தோற்றம் பெற்றது. மாறாக, 1991 இல் இத்துறை, ரூ. 10,880 இலட்சத்தினை வர்த்தக வங்கிகளின் நிதிக்கு வழங்கியதன் மூலம் அவற்றின் முக்கிய மூலமாக விளங்கியது. அதேவேளை வைப்பு நிலுவைகளை (ரூ. 2,090 இலட்சம்) எடுப்பனவு செய்ததன் மூலமும் முற்பணங்களை (ரூ. 6,730 இலட்சம்) பயன்படுத்தியதன் மூலமும் அரச கூட்டுத்தாபனங்கள் 1992 இல் ரூ. 8,820 இலட்சம் கொண்ட வங்கி மூலவளங் களைப் பயன்படுத்தின. இது, வர்த்தக வங்கிகளுக்குத் தேறிய அடிப்படையில் அரச கூட்டுத்தாபனங்கள் ரூ. 49,650 இலட்சத்தினை நிதி மூலமாக வழங்கியமையே முன்னைய ஆண்டின் அபிவிருத்திகளுக்கு மாறான இன்னொரு விடயமாகும். அதேவேளை 1992 இல் தேறிய அடிப்படையில் மத்திய வங்கிக்கான மூலவள வெளிப்பாய்ச்சல் ரூ. 8,800 இலட்சமாக விளங்கியமைக்குக் கைப்பண உடமை களிலும் நியதி ஒதுக்குகளிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே முக்கிய காரணமாக இருந்தது.

வங்கிகளுக்கிடையிலான கொடுக்கல் வாங்கல்கள் மூலவளப் பாய்ச்சலின்மீது சமனான தாக்கத்தினைக் கொண்டிருந்தவேளையில், ஏனைய பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புக்களின் மூலமாக வங்கித் தொழில் முறையில் ஏற்பட்ட மூலவள உருவாக்கம் 1992 இல் ரூ. 12,650 இலட்சமாக விளங்கியமைக்கு நிலையான மற்றும் ஏனைய சொத்துக்களின் உயர்வே பெருமளவிற்குக் காரண மாக இருந்தது. முன்னைய ஆண்டினைப் போன்றே, 1992 இலும் வெளிநாட்டுத் துறை, வர்த்தக வங்கிகளின் மூலவள அடிப்படைக்கு ரூ. 11,100 இலட்சத்தினை செலுத்தியமை வெளிநாட்டுத்துறையுடனான வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் உயர்வடைந்தமையைப் பிரதிபலிக்கின்றது. ஆய்விற்குரிய காலப் பகுதியில் கூட் டுறவுத்துறை, அரசதுறை ஆகிய இரண்டும் வைப்புக்களை அதிகரித்தமை மற்றும் கடன்கள், முற்பணங்களைக் குறைத்தமை என்பனவற்றின் மூலமாக வங்கித் தொழில் முறைக்கு மூலவளங்களை வழங்கின. 1992 இல் இவ்விரு துறைகளி னாலும் வர்த்தக வங்கிகளுக்கு வழங்கப்பட்ட மூலவளங்கள் முறையே ரூ. 8,630 இலட்சமாகவும் ரூ. 4,260 இலட்சமாகவும் விளங்கின.

அதேவேளை, பொருளாதாரத்திலுள்ள பல்வேறு துறைகளுக்கும் கடன்கள் மற்றும் மேலதிகப் பற்றுக்கள் வடிவில் வழங்கப்பட்ட கொடுகடன் இவ்வாண்டில் 23 சதவீதத்தினால் (ரூ. 195,360 இலட்சம்) வளர்ச்சியடைந்து முன்னைய ஆண்டின் வளர்ச்சியான 14 சதவீதத்திலிருந்து (ரூ. 104,780 இலட்சம்) குறிப்பிடத்தக்க விரைவினைக் கொண்டிருந்தது. 1992 இல் கடன்கள் மற்றும் மேலதிகப் பற்றுக்களில் ஏற்பட்ட வளர்ச்சி மொத்த வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பினை விஞ்சி 19.7 சதவீதமாக (ரூ. 215,970 இலட்சம்) விளங்கியதன் மூலம் மொத்த வைப்புக்களுக்கான கடன்கள் மற்றும் மேலதிகப் பற்றுக்களின் விகிதம் 1991 இல் 77.6 சதவீதத்திலிருந்து 1992 இல் 79.6 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. அதேவேளை ஏனைய தனியார்துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் 1992 இல் விரைவான உயர்ச்சியைக் காட்டி முன்னைய ஆண்டின் உயர்வான 20.7 சதவீதத்துடன் (ரூ. 131,640 இலட்சம்) ஒப்பிடுகையில் 23 சதவீதம் (ரூ. 176,270 இலட்சம்) கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது.

**தனியார் துறைக்கான வர்த்தக வங்கி முற்பணங்கள்***

*1992 இல் தனியார் துறைக்கான வர்த்தக வங்கிகளின் மொத்தக் கடன்களும் முற்பணங்களும் முன்னைய ஆண்டின் 9 சதவீதம் (ரூ. 74,310 இலட்சம்) கொண்ட உயர்வுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதம் (ரூ. 176,770 இலட்சம்) கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தன. மொத்த முற்பணங்களில் குறுங்கால முற்பணங்கள் 63 சதவீதத்திற்கு (ரூ. 670,200 இலட்சம்) வகைகூறிய வேளையில் நடுத்தரகால (1–5 ஆண்டுகள்) நீண்டகால (5 ஆண்டுகளுக்கு மேலானவை) முற்பணங்களின் தொடர்பான பங்கு முறையே ஏறத்தாழ 20 சதவீதமாகவும் 17 சதவீதமாகவும் விளங்கின.*

*நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வு நியதிகளின்படி, 1992 செத்தெம்பர் இறுதியில் மொத்த முற்பணங்களில் 44 சதவீதம் ஏற்றுமதி, இறக்குமதி மற்றும் உள்நாட்டு வர்த்தகங்களை உள்ளடக்கிய வர்த்தக நடவடிக்கைகள் தொடர்பானதாக இருந்தன. இவ்வகையில் கடன்களும் முற்பணங்களும் முன்னைய ஆண்டின் 8 சதவீதம் (ரூ. 28,810 இலட்சம்) கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 24 சதவீதத்தினால் (ரூ. 90,350 இலட்சம்) உயர்வடைந்தன. அதேவேளை, 1992 இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் வேளாண்மை நோக்கங்களுக்காக (தேயிலை, இறப்பர், தெங்கு, நெல், விலங்கு வளர்ப்பு, பாற்பண்ணை மற்றும் மீன்பிடி என்பன உட்பட) வழங்கப்பட்ட கொடுகடன் 4 சதவீதத்தினால் (ரூ. 5,000 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன. இதன் விளைவாக, மொத்தத்தில் வேளாண்மை முற்பணங்களின் பங்கு 1991 இன் 13 சதவீதத்திலிருந்து 1992 இல் 11 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.*

*கைத்தொழில் நோக்கங்களுக்கான (பொறியியல் மற்றும் கட்டட வர்த்தகம் உட்பட) கொடுகடன் பயன்பாடு 3 சதவீதத்தினால் (ரூ. 6,200 இலட்சம்) அதிகரித்து மொத்த முற்பணங்களில் 17 சதவீதத்திற்கு வகை கூறியது. முன்னைய ஆண்டினைப் போன்றே, கைத்தொழில் நோக்கங்களுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களில் பெரும் பங்கு குறுங்கால வகைகளின் கீழ் காணப்பட்டது. எனினும், மொத்தக் கைத்தொழில் கடன்களில் குறுங்கால கைத்தொழில் முற்பணங்களின் பங்கு 73 சதவீதத்திலிருந்து 70 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. கைத்தொழில் நோக்கங்களுக்காக அரச கூட்டுத்தாபனங்களுக்கு வழங்கப்பட்ட முற்பணங்கள் முன்னைய ஆண்டின் ரூ. 7,730 இலட்சம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1992 இல் ரூ. 16,510 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன. இது முக்கியமாக இரசாயனங்கள், பெற்றோலியமும் நிலக்கரியும், அணியும் ஆடைகள், தோல் கைத்தொழில்கள், அடிப்படை உலோக உற்பத்திகள் ஆகிய துறைகளில் பிரதிபலித்தன. எனினும், தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கைத்தொழில் முற்பணங்கள் முன்னைய ஆண்டின் ரூ. 18,130 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 119,310 இலட்சத்திற்கு ரூ. 18,310 இலட்சத்தினால்அதிகரித்தன. ஆய்விற்குரிய காலப் பகுதியில் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த ஏனைய வகைகளாக உணவு, குடிபானம், புகையிலை (ரூ. 5,830 இலட்சம்), உலோகமல்லாக் கனிப்பொருள் உற்பத்திகள் (ரூ. 630 இலட்சம்), இரசாயனங்கள், பெற்றோலியம் மற்றும் நிலக்கரி (ரூ. 1,760 இலட்சம்), புடவைகள் (ரூ. 2,820 இலட்சம்), அடிப்படை உலோக உற்பத்திகள் (ரூ. 1,440 இலட்சம்) என்பன காணப்பட்டன.*

---

1/ இப்பிரிவிற்கான பகுப்பாய்வு முதல் மூன்று காலாண்டுகளுக்கான தரவினை அடிப்படையாகக் கொண்டது.

அட்டவணை 1.61

## நோக்கங்களின்படியும் முதிர்ச்சிக் காலங்களின்படியும் வர்த்தக வங்கிகளின் முற்பணங்கள்* 1991 — 1992

(பத்து இலட்சம் ரூபாய்களில்)

| வகை | | குறுங்காலம் (1 ஆண்டிற்கு குறைவான) | | நடுத்தரக்காலம் (1 தொடக்கம் 5 ஆண்டுகள் வரை) | | நீண்டகாலம் (5 ஆண்டுகளுக்கு மேல்) | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | (1) | (2) (7) இன் % ஆக (1) | (3) | (4) (7) இன் % ஆக (3) | (5) | (6) (7) இன் % ஆக (5) | (7) | (8) மொத்தத்தின் சதவீதமாக (7) |
| **அ. வர்த்தகம்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1991 | 29,225.8 | 77.1 | 6,240.4 | 16.5 | 2,459.1 | 6.5 | 37,925.3 | 42.5 |
| மாச்சு | 1992 | 30,508.6 | 74.4 | 8,063.8 | 19.7 | 2,432.4 | 5.9 | 41,004.8 | 42.4 |
| யூன் | 1992 | 31,942.8 | 77.5 | 6,904.2 | 16.7 | 2,379.4 | 5.8 | 41,226.4 | 41.0 |
| செத்தெம்பர் | 1992 | 36,792.7 | 78.3 | 8,130.9 | 17.3 | 2,037.2 | 4.3 | 46,960.8 | 44.0 |
| **ஆ. நிதியியல்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1991 | 1,777.9 | 61.5 | 798.5 | 27.6 | 314.9 | 10.9 | 2,891.3 | 3.2 |
| மாச்சு | 1992 | 3,481.3 | 71.4 | 791.7 | 16.2 | 604.3 | 12.4 | 4,877.3 | 5.0 |
| யூன் | 1992 | 2,944.0 | 64.9 | 985.7 | 21.7 | 608.3 | 13.4 | 4,538.0 | 4.5 |
| செத்தெம்பர் | 1992 | 2,829.9 | 63.3 | 1.049.7 | 23.4 | 595.9 | 13.3 | 4,485.5 | 4.2 |
| **இ. வேளாண்மை** | | | | | | | | | |
| திசெம்பர் | 1991 | 5,809.3 | 48.4 | 2,851.1 | 23.7 | 3,351.4 | 27.9 | 12,011.8 | 13.5 |
| மாச்சு | 1992 | 5,924.4 | 57.5 | 2,068.0 | 20.1 | 2,319.8 | 22.5 | 10,312.2 | 10.7 |
| யூன் | 1992 | 6,128.6 | 56.4 | 2,224.4 | 20.5 | 2,522.4 | 23.2 | 10,875.4 | 10.8 |
| செத்தெம்பர் | 1992 | 6,053.0 | 52.4 | 2,645.2 | 23.0 | 2,836.6 | 24.6 | 11,511.8 | 10.8 |
| **ஈ. கைத்தொழில்**** | | | | | | | | | |
| திசெம்பர் | 1991 | 13,248.0 | 73.3 | 2,536.4 | 14.0 | 2,295.7 | 12.7 | 18,080.1 | 20.3 |
| மாச்சு | 1992 | 13,304.8 | 72.7 | 2,570.8 | 14.0 | 2,428.7 | 13.3 | 18,304.3 | 18.9 |
| யூன் | 1992 | 12,947.3 | 67.1 | 4,209.1 | 21.8 | 2,140.2 | 11.1 | 19,296.6 | 19.2 |
| செத்தெம்பர் | 1992 | 13,095.4 | 70.0 | 3,159.9 | 16.9 | 2,444.4 | 13.1 | 18,699.8 | 17.5 |
| **உ. சுற்றுலா** | | | | | | | | | |
| திசெம்பர் | 1991 | 435.4 | 45.2 | 127.0 | 13.2 | 400.5 | 41.6 | 962.9 | 1.1 |
| மாச்சு | 1992 | 534.4 | 20.7 | 257.7 | 10.0 | 1,794.0 | 69.4 | 2,586.1 | 2.7 |
| யூன் | 1992 | 598.4 | 33.9 | 248.8 | 14.1 | 916.9 | 52.0 | 1,764.1 | 1.8 |
| செத்தெம்பர் | 1992 | 627.4 | 28.5 | 264.8 | 12.0 | 1,309.8 | 59.5 | 2,202.0 | 2.1 |
| **ஊ. வீடமைப்பு** | | | | | | | | | |
| திசெம்பர் | 1991 | 2,071.8 | 19.9 | 2,481.4 | 23.9 | 5,839.9 | 56.2 | 10,393.1 | 11.7 |
| மாச்சு | 1992 | 2,120.4 | 19.4 | 2,636.4 | 24.1 | 6,192.0 | 56.6 | 10,948.8 | 11.3 |
| யூன் | 1992 | 2,320.9 | 17.8 | 2,881.0 | 22.1 | 7,856.4 | 60.2 | 13,058.3 | 13.0 |
| செத்தெம்பர் | 1992 | 2,360.3 | 18.6 | 3,188.6 | 25.1 | 7,151.1 | 56.3 | 12,700.0 | 11.9 |
| **எ. நுகர்வு** | | | | | | | | | |
| திசெம்பர் | 1991 | 1,674.6 | 57.0 | 1,018.2 | 34.6 | 245.9 | 8.4 | 2,938.7 | 3.3 |
| மாச்சு | 1992 | 2,239.2 | 59.2 | 1,227.7 | 32.5 | 315.7 | 8.3 | 3,782.6 | 3.9 |
| யூன் | 1992 | 2,196.4 | 52.4 | 1,652.5 | 39.4 | 341.5 | 8.1 | 4,190.4 | 4.2 |
| செத்தெம்பர் | 1992 | 2,637.1 | 60.0 | 1,369.7 | 31.2 | 388.8 | 8.8 | 4,395.[illegible] | 4.1 |
| **ஏ. ஏனைய கடன்கள்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1991 | 1,653.8 | 41.7 | 1,103.2 | 27.8 | 1,207.7 | 30.5 | 3,964.7 | 4.4 |
| மாச்சு | 1992 | 2,073.9 | 43.0 | 1,460.4 | 30.3 | 1,290.0 | 26.7 | 4,824.3 | 5.0 |
| யூன் | 1992 | 2,517.3 | 45.0 | 1,561.9 | 27.9 | 1,519.3 | 27.1 | 5,598.5 | 5.6 |
| செத்தெம்பர் | 1992 | 2,634.0 | 44.7 | 1,629.0 | 27.7 | 1,626.6 | 27.6 | 5,889.6 | 5.5 |
| **ஐ. மொத்தம்** | | | | | | | | | |
| திசெம்பர் | 1991 | 55,896.6 | 62.7 | 17,156.2 | 19.2 | 16,115.1 | 18.1 | 89,167.9 | 100.0 |
| மாச்சு | 1992 | 60,187.0 | 62.3 | 19,076.5 | 19.7 | 17,376.9 | 18.0 | 96,640.4 | 100.0 |
| யூன் | 1992 | 61,595.7 | 61.3 | 20,667.6 | 20.6 | 18,284.4 | 18.2 | 100,547.7 | 100.0 |
| செத்தெம்பர் | 1992 | 67,019.9 | 62.7 | 20,434.8 | 20.1 | 18,390.4 | 17.2 | 106,845.1 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* முற்பணங்கள் சேகரிப்பு நிலையிலுள்ள பண விடயங்களை நீக்கி ஏனைய கடன்கள், மேலதிகப் பற்றுக்கள் கழிவு செய்யப்பட்ட உண்டியல்கள் ஆகியவற்றை உள்ளடக்கும்.

** பொறியியல் கட்டிட வர்த்தகம், சுரங்கம் அகழ்தல், கடற்றொழில் ஆகிய துறைகளுக்கு வழங்கப்பட்ட முற்பணங்களை உள்ளடக்கும்.

அட்டவணை 1.62

## பிணைகளின்படி முற்பணங்கள்*1991 திசெம்பர் — 1992 செத்தெம்பர்

| விடயம் | 1991 திசெம்பர் 31 | | 1992 மாச்சு 31 | | 1992 யூன் 30 | | 1992 செத்தெம்பர் 30 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் % | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் % | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் % | தொகை (ப.இ.ரூ.) | மொத்தத்தின் % |
| 1. ஆவண உண்டியல்கள் ... ... ... | 5,187.4 | 5.8 | 7,271.3 | 7.5 | 6,036.5 | 6.0 | 7,041,6 | 6.6 |
| 2. அரச பிணைகள் ... ... ... | 1,719.5 | 1.9 | 1,841.1 | 1.9 | 2,004.7 | 2.0 | 1,984.2 | 1.9 |
| 3. கூட்டுப் பங்கு நிலையங்களின் பங்குகள், முறிகள், தொகுதிக் கடன்கள், ஆயுட் காப்புறுதியின் காசுப் பெறுமதியை உள்ளடக்கிய பல்வகை விடயங்கள் ... ... | 1,389.2 | 1.6 | 3,994.8 | 4.1 | 4,874.7 | 4.8 | 4,640.9 | 4.3 |
| 4. நிலையான வைப்புக்கள், சேமிப்பு வைப்புக்களும் வைப்புச் சான்றிதழ்களும் ஆயுட் காப்புறுதியின் காசுப் பெறுமதியை உள்ளடக்கிய ஏனைய காசு வைப்புக்களும் ... ... | 11,650.7 | 13.1 | 10,105.7 | 10.5 | 12,153.9 | 12.1 | 12,011.6 | 11.2 |
| 5. வர்த்தக இருப்புக்கள் ... ... ... | 9,581.3 | 10.7 | 10,381.3 | 10.7 | 10,715.6 | 10.7 | 10,495.0 | 9.8 |
| 6. அசைவற்ற சொத்து, பொறித் தொகுதி, பொறி ... | 16,509.1 | 18.5 | 19,730.4 | 20.4 | 20,301.2 | 20.2 | 21,900.3 | 20.5 |
| 7. தனியாள் உத்தரவாதங்கள், வாக்குறுதிப் பத்திரங்கள் ... | 16,273.3 | 18.3 | 12,776.6 | 13.2 | 13,199.7 | 13.1 | 14,343.4 | 13.4 |
| 8. நம்பிக்கைப் பெறுகைகள் ... ... ... | 5,333.8 | 6.0 | 7,360.0 | 7.6 | 6,842.7 | 6.8 | 7,865.4 | 7.4 |
| 9. தவணைக் கொள்வனவு உடன்படிக்கைகள் ... ... | 2,355.7 | 2.6 | 2,273.3 | 2.4 | 2,891.4 | 2.9 | 1,994.0 | 1.9 |
| 10. உழவுப் பொறிகளும்—உந்து ஊர்திகளும் ... ... | 1,615.9 | 1.8 | 1,987.3 | 2.1 | 1,756.4 | 1.7 | 1,632.1 | 1.5 |
| 11. ஏனைய பிணைகள் ... ... ... | 10,058.5 | 11.3 | 11,984.6 | 12.4 | 12,391.7 | 12.3 | 13,179.5 | 12.3 |
| 12. பிணைகளற்றவை ... ... ... | 7,493.6 | 8.4 | 6,934.2 | 7.2 | 7,379.2 | 7.3 | 9,756.6 | 9.1 |
| மொத்தம் ... | 89,168.0 | 100.0 | 96,640.6 | 100.0 | 100,547.7 | 100.0 | 106,844.6 | 100.0 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

* சேகரிப்பு நிலையிலுள்ள காசு விடயங்களையும் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழான கொள்வனவுகளை நிதியிடுவதற்காக வழங்கப்பட்ட முற்பணங்களையும் உள்ளடக்கும்.

முன்னைய ஆண்டினைப் போலவே, முற்பணங்களின் மிக உயர்ந்த செறிவு 20 சதவீத வட்டி வீதத்தில் மாற்றமின்றியிருந்தது. எனினும், 20 சதவீதத்திலான முற்பணங்களின் பங்கு 9 சதவீதத்திலிருந்து 11 சதவீதத்திற்கு அதிகரித்தது. அதேவேளை நிறையேற்றப்பட்ட சராசரி கடன் வழங்கல் வீதம் 1991 இன் 19.2 சதவீதத்திலிருந்து 1992 இல் 19.5 சதவீதத்திற்கு அதிகரித்தது. முற் பணங்களின் பிணை அடிப்படையிலான பகுப்பாய்வின்படி, 1992 இன் முதல் மூன்று காலாண்டுப் பகுதிகளிலும் அசையாச் சொத்துக்கள் (ரூ. 53,910 இலட்சம்) இணைப்பு பங்குக் கூட்டு நிலையங்களின் பங்குகள் (ரூ. 32,520 இலட்சம்), ஏனைய பிணைகள் (ரூ. 31,210 இலட்சம்), நம்பிக்கைப் பெறுகைகள் (ரூ. 25,320 இலட்சம்), ஆவண உண்டியல்கள் (ரூ. 18,540) வர்த்தகத்திலுள்ள இருப்புக்கள் (ரூ. 9,140 இலட்சம்) என்பனவற்றிற்கு எதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் அதிகரிப்புக்களைப் பதிவு செய்த வேளையில் தனிப்பட்ட உத்தரவாதங்கள் மற்றும் வாக்குறுதிச் சான்றிதழ்கள் தவணைக் கொள்வனவு உடன்படிக்கைகள் என்பன வற்றிற்கெதிராக வழங்கப்பட்ட முற்பணங்கள் முறையே ரூ. 19,300 இலட்சத் தினாலும், ரூ. 3,620 இலட்சத்தினாலும், வீழ்ச்சியடைந்தன.

## மத்திய வங்கித் தொழில்

### பொதுவான போக்குகள்

சென்மதி நிலுவை நிலைமையின் திரண்ட நிலுவையில் காணப்பட்ட உறுதியான மிகையின் பின்னணியில், 1992 இல் மத்திய வங்கியின் தேறிய பன்னாட்டு ஒதுக்குகள் ரூ. 210,480 இலட்சத்திற்கு ரூ. 75,620 இலட்சத்தினால் உயர்வடைந்தன. மறுபுறத்தில், அதிகரித்த பன்னாட்டு ஒதுக்குகளின் திரவத் தன்மையின் மிகையில் ஏற்பட்ட தாக்கத்தினைச் சமப்படுத்தும் நோக்கில் மத்திய வங்கி அதன் தேறிய உள்நாட்டுச் சொத்துக்களை 1991 இன் ரூ. 265,700 இலட்சத்திலிருந்து 1992 இறுதியில் ரூ. 238,100 இலட்சத்திற்கு குறைத்துக் கொண்டது. பொறுப்புக்கள் பக்கத்தில் நாணயச் சுற்றோட்டம் அதேபோன்று மத்திய வங்கியுடனான வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் இரண்டிலும் திரவத் தன்மையின் வளர்ச்சி காணப்பட்டது. நாணயச் சுற்றோட்டத்தில் ஏற்பட்ட 11 சதவீத அதிகரிப்பினையும் (ரூ. 29,730 இலட்சம்), வர்த்தக வங்கி வைப்புக் களில் ஏற்பட்ட 15 சதவீத (ரூ. 19,000 இலட்சம்) வளர்ச்சியையும் பிரதி பலிக்கின்ற விதத்தில் நாணய அடிப்படை (ஒதுக்குப் பணம் அல்லது உயர்வலு நாணயம்) ரூ. 448,580 இலட்சமாக விளங்கி இவ்வாண்டில் 12 சதவீதம் கொண்ட வளர்ச்சியைப் பதிவு செய்தது.

### சொத்துக்களினதும் பொறுப்புக்களினதும் அமைப்பு

1992 இறுதியில் மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் ரூ. 1,012,540 இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் 24 சதவீதம் கொண்ட (ரூ. 183,730 இலட்சம்) உயர்வுடன் ஒப்பிடுகையில் 6 சதவீதம் (ரூ. 54,190 இலட்சம்) கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. 1992 இல் இவ்வதிகரிப்பு முழுவதும் 40 சதவீதத்தினால் (ரூ. 114,330 இலட்சம்) உயர்வடைந்த வங்கியின் வெளிநாட்டுச் சொத்துக்களில் பிரதிபலித்தது. மாறாக உள்நாட்டுச் சொத்துக்கள் 9 சதவீதத்தினால் (ரூ. 60,140 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சி, இவ்வாண்டில் ரூ. 220,980 இலட்சம் தொகைக்கு உயர்வடைந்த வெளிநாட்டு அரச திறைசேரி உண்டியல்கள்

மற்றும் பிணைகளைக் கொண்ட வங்கியின் உடமைகளில் முழுமையாகப் பிரதி பலித்தது. வெளிநாட்டு அரச திறைசேரி உண்டியல்கள் மற்றும் பிணைகளைக் கொள்வனவு செய்வதற்காக மாற்றல் செய்யப்பட்ட இந்நிதியுடன் 1992 இல் வெளிநாட்டிலுள்ள காசு நிலுவைகள் ரூ. 106,580 இலட்சத்தினால் வீழ்ச்சி யடைந்தன. இவ்வாண்டில் வெளிநாட்டு முதலீடுகள் மீது உழைக்கப்பட்ட வட்டி முன்னைய ஆண்டின் ரூ. 31,630 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 71,510 இலட்சமாக விளங்கியது.

1992 இல் மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் முன்னைய ஆண்டின் 10 சதவீதம் (ரூ. 58,160 இலட்சம்) கொண்ட அதிகரிப்புக்கு மாறாக 9 சதவீதத்தினால் (ரூ. 60,140 இலட்சம்) வீழ்ச்சியடைந்தன. உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கான முக்கிய அடிப்படைக் காரணிகளாக ரூ. 80,620 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்த அரச, அரச பிணைகளைக் கொண்ட உடமைகளும் ரூ. 10,560 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்த ஏனைய சொத்துக்கள் கணக்குகளும் விளங்கின. அரசிற்கான கடன்களும் முற்பணங்களும் ரூ. 26,850 இலட்சத்தினால் அதிகரித்த போதிலும் இது இவ்வாண்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட ப.நா. நிதியத்தின் அனுமதிப் பங்கில் ஏற்பட்ட அதிகரிப்பினால் முற்றாக ஏற்பட்டது. குறுங்கால மீள் நிதியிடலில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்ட போதும் வர்த்தக வங்கிகளுக்கும் ஏனைய நிதி நிறுவனங்களுக்குமான கடன்களும் முற்பணங்களும் ரூ. 4,190 இலட்சத்தினால் உயர்வடைந்தமைக்கு 1992 இல் நிதிக்கூட்டு நிலையங்களுக்கான மீள்நிதியிடல் கொடுகடனின் தொடர்ச்சியான பாய்ச்சலே காரணமாகும்.

பொறுப்புக்கள் பக்கத்தில், 1992 இல் மத்திய வங்கியின் உள்நாட்டுப் பொறுப்புக்கள் ரூ. 15,480 இலட்சத்தினால் உயர்வடைந்த வேளையில் வெளி நாட்டுப் பொறுப்புக்கள் ரூ. 38,710 இலட்சத்தினால் அதிகரித்தன. உள்நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட விரிவாக்கம் ரூ. 29,740 இலட்சத்தினால் உயர் வடைந்த நாணயச் சுற்றோட்டத்தில் பெருமளவிற்குப் பிரதிபலித்தது. ஒதுக்குத் தேவை நோக்கத்திற்காக வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்களையும் உள்ளடக்கலாம் என்ற தீர்மானத்தினைத் தொடர்ந்து வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் உயர்வடைந்தமையினால் வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்களும் அதிகரித்தன. அதேவேளை, நடைபெற்றுக் கொண்டிருக்கும் சீராக்க நிகழ்ச்சித் திட்டத்திற்கான உதவியின் பொருட்டு யப்பான் அரசினால் பகிர்ந்தளிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டக் கடன்களின் காரணமாகக் கடந்த ஆண்டின் இறுதியில் வலுவாக்க காணப்பட்ட அரசின் வைப்பு நிலுவைகள் 1992 இல் ரூ. 63,620 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன. அதேவேளை இவ்வாண்டுக் காலத்தில் வெளிநாட்டு வங்கிக் கடன்பாடுகள் காணப்படாததனால் வெளிநாட்டுப் பொறுப்புக்களில் ஏற்பட்ட வளர்ச்சி பன்னாட்டு அமைப்புக்களின் வைப்புக்கள் ரூ. 38.710 இலட்சமளவிற்கு மேலும் அதிகரிக்கப்பட்டமையில் முழுமையாகப் பிரதிபலித்தது. முன்னைய ஆண்டில் அத்தகைய அமைப்புக்களின் வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 37,470 இலட்சமாக இருந்தது.

**நாணயக் கொள்கை**

உயர்ந்த உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கம் மற்றும் தேறிய வெளி நாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட மேலதிக முன்னேற்றம் என்பனவற்றின் காரணமாக நாணயக் கூட்டுக்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான உயர்ந்த வளர்ச்சி யைத் தொடர்ந்து 1992 இல் மத்திய வங்கி அதன் நாணயக் கொள்கையை மேலும் இறுக்கமாக்கியது. எனினும் கடந்த காலத்தினைப் போலன்றி நாணய முகாமைத்துவத்திற்கு வங்கி, சந்தையை அடிப்படையாகக் கொண்ட மறைமுகக் கொள்கைக் கருவிகளில் முழுமையாகத் தங்கியிருந்தது. இவ்வாண்டில் 1989 மே, தொடக்கம் இருந்து வந்த நேரடிக் கொடுகடன் கட்டுப்பாட்டு வழிமுறைகள் ஒழிக்கப்பட்டன. இதன்படி, 1992 இல் நாணயக் கொள்கையின் முக்கிய திணிப்பாக இருந்தது யாதெனில் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளும் நியதி ஒதுக்குத் தேவைகளுமேயாகும்.

வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வளர்ச்சியின் விளைவாக திரவத் தன்மையில் தோன்றிய உறுதியான விரிவாக்கம், நியதி ஒதுக்குத் தேவைகளைக் கூடியளவிற்குத் தாக்கம் மிக்கதாக்குவதற்கான ஒழுங்குமயப்படுத்தலை உள்ளடக் கிய செறிவான கொள்கை நடவடிக்கைகளை வேண்டி நின்றது. இவ்வாண்டில் நாணயத் தொழிற்பாட்டுப் பிரிவினூடாக ஒதுக்கு நாணய முகாமைத்துவத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றிணைந்த அண்மைய அனுபவங்கள் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேலும் செறிவாக்கின. இதன்படி, திறைசேரி உண்டியல்களின் வாராந்த ஏல விற்பனை, அரசின் காசுத் தேவைகள், மீள் நிதியிடல் கொடுகடனின் மட்டம், வெளிநாட்டுச் சொத்துக்களின் மாற்றங்கள், நாணய அடிப்படையின் கூறில் ஏற்பட்ட மாற்றங்கள் என்பனவற்றைக் கவனத் திற் கொண்டே தீர்மானிக்கப்பட்டன. மத்திய வங்கி அதன் ஒதுக்கு இலக்கினைப் பேணும் பொருட்டுத் தேவையான அளவு திறைசேரி உண்டியல்களைப் பொது மக்களுக்கு விற்பதற்கு முதலாந்தர, இரண்டாந்தரச் சந்தைகள் இரண்டையும் பயன்படுத்தியது. இதனால் திறைசேரி உண்டியல் மீதான வருவாய் பொருளாதா ரத்தில் திரவ நிலையைக் கட்டுப்படுத்துவதற்கான தேவைப்பாட்டைப் பிரதி பலித்தது.

இதேவேளை, திறைசேரி உண்டியல் சந்தையை வலுப்படுத்துவதற்கான பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. முதலாவதாக, திறைசேரி உண்டியல் களுக்கான சந்தை நிலையங்களை விரிவாக்குவதற்காக 1992 யூனில் வர்த்தக வங்கிகள், தெரிந்தெடுக்கப்பட்ட நிதி நிறுவனங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய முதலாந்தர வணிகர்கள் நியமிக்கப்பட்டனர். இரண்டாவதாக, முதிர்ச்சிகளில் விரிவான தோற்றப்பாடுகளை வழங்கும் நோக்குடன் நீண்டகால முதிர்ச்சிகளைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் இவ்வாண்டில் வழங்கப்பட்டன. மூன்றாவ தாக, பொது மக்களுக்குத் தேவையான தகவல்களை வழங்கும் பொருட்டு ஒவ்வொரு ஏல விற்பனையிலும் முதிர்ச்சியடையும் தொகை, பொது மக்களுக்குக் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகை என்பன விளம்பரப்படுத்தப்பட்டன. நான் காவதாக, திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாந்தரச் சந்தையை முன் னேற்றும் பொருட்டுக் கழிவு வீதத்திற்கும் மீள் கழிவு வீதத்திற்கும் இடையிலான சிறு இடைவெளி 2 சதவீதப் புள்ளியிலிருந்து 1 சதவீதப் புள்ளிக்கு மேலும் குறுக்கப்பட்டது.

திறைசேரி உண்டியல் சந்தையில் வங்கியல்லாத்துறையின் அதிகரித்த பங்கேற்பினை 1992 ஆம் ஆண்டு காட்டியது. இதன் காரணமாக வங்கியல்லாத் துறையின் திறைசேரி உண்டியல் உடைமைகள் இவ்வாண்டில் ரூ. 436,180 இலட்சத்திற்கு ரூ. 184,960 இலட்சத்தினால் அதிகரித்தன. மறுபுறத்தில், திறைசேரி உண்டியல்களின் புதிய வழங்கல்கள் ரூ. 141,280 இலட்சமளவில் காணப்பட்டபோதும் மத்திய வங்கியினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல் உடைமைகள் 1991 இறுதியில் ரூ. 298,540 இலட்சத்திலிருந்து 1992 இறுதியில் ரூ. 217,950 இலட்சங்களுக்குக் குறைவடைந்து ரூ. 80,590 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. வங்கியல்லாத் துறையினால் வைத்திருக்கப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பங்கு 1991 இன் இறுதியில் காணப்பட்ட மொத்த வெளிநின்ற தொகையின் 38.7 சதவீதத்திலிருந்து 1992 இறுதியில் 57.3 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இது, பொது மக்கள் தமது சொத்துப் பட்டியலில் திறைசேரி உண்டியல்களுக்கான விருப்புரிமையை அதிகரித்துக் கொண்டமையைப் பிரதிபலித்தது.

இவ்வாண்டுக் காலத்தில் நியதி ஒதுக்குத் தேவைகளின் பயன்பாடு ஒழுங்கமைக்கப்பட்டு வலிதாக்கப்பட்டது. இதனால் மொத்த வைப்புப் பொறுப்புக்களில் 2 சதவீதத்திற்குக் கூடுதலாக இருக்கும் வர்த்தக வங்கிகளின் காப்பறை காசு உடைமைகளை 1992 சனவரியிலிருந்து தேவைப்பட்ட ஒதுக்குகளாகக் கணித்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்பட்டன. வர்த்தக வங்கிகள் தமது கிளையமைப்புக்கள் மற்றும் சிறப்பு பொது மக்கள் பொறுப்பு என்பனவற்றின் பேரில் சைப் பணத்தை மிகையாக வைத்திருக்க வேண்டிய சுமையைக் குறைக்கும் நோக்கில் இச்சலுகை வழங்கப்பட்டது. எனினும், இச்சலுகைகளின் காரணமாக வர்த்தக வங்கிகளில் தோன்றும் சாத்தியமான கொடுகடன் விரிவாக்கத்தினை எதிரீடு செய்யும் பொருட்டு ஒதுக்கு விகிதம் ஒரு சதவீதப் புள்ளியினால் 14 சதவீதத்திற்கு மேல்நோக்கித் திருத்தப்பட்டது. எனினும், வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புப் பொறுப்புக்கள் ஒதுக்குத் தேவையிலிருந்தும் நீக்கப்பட்டிருந்தமை, அத்தகைய வைப்புக்கள் அண்மைய ஆண்டுகளில் குறிப்பிடத்தக்களவிற்கு உயர்ந்துவரும் பின்னணியில், நாணயக் கொள்கைக் கருவியாக இருந்துவரும் நியதி ஒதுக்குத் தேவையின் தாக்கத்தினைத் தொடர்ந்தும் பலவீனப்படுத்தவே செய்யும். இதன்படி 1992 செத்தெம்பர் 4 ஆம் நாளிலிருந்து ஒரு நாணயக் கொள்கைக் கருவியாக நியதி ஒதுக்குத்தேவையின் தாக்கம் வலுப்பெறும் வகையில் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் உட்பட வர்த்தக வங்கிகளின் அனைத்து வைப்புப் பொறுப்புக்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் ஒதுக்குத்தேவை விரிவாக்கப்பட்டது.

அண்மைய ஆண்டுகளில் திரவத் தன்மை வளர்ச்சியின் முக்கிய மூலமாக இருந்து வருகின்ற மீள் நிதியிடல் கொடுகடனைக் கட்டுப்படுத்துவதற்காக மத்திய வங்கி ஒழுங்கமைக்கும் வழிமுறைகளை மேலும் அறிமுகப்படுத்தியது. இவை குறுங்கால மீள் நிதியிடல் வசதிகளைப் பெருமளவில் குறைத்தமை, நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் நிதிய மீள் நிதிபிடலை இடைநிறுத்தியமை ஆகியவற்றினை உள்ளடக்கியிருந்ததுடன் வட்டி வீதங்களைச் சந்தை வீதங்களுக்கு நெருக்கமாகக் கொண்டுவரும் பொருட்டுப் பல மீள் நிதியிடல் வசதிகளின் மீதான வட்டி வீதங்களை உயர்த்தி அதன் மூலம் வட்டிவீத அமைப்பில் காணப்பட்ட திரிபுகளைக் குறைத்துக் கொண்டது. இதனால் குறுங்கால மீள் நிதியிடல் வசதிகள் அதேபோன்று நடுத்தர நீண்ட காலக் கொடுகடன் நிதியம் என்பனவற்றின் மீள் நிதிபிடல் வீதங்கள் இவ்வாண்டுக் காலத்தில் ஒன்றிலிருந்து மூன்று சதவீதப் புள்ளிகளினால் மேல்நோக்கிச் சீராக்கப்பட்டன.

1992 இறுதியில் மீள் நிதியிடலின் வெளிநின்ற மட்டம் ரூ. 56,630 இலட்சமாக விளங்கி 8 சதவீதம் (ரூ. 4,190 இலட்சம்) கொண்ட மிதமான அதிகரிப்பினைக் காட்டியது. எனினும், குறுங்கால மீள் நிதியிடல் கொடுகடன், 1991 இறுதியில் ரூ. 13,940 இலட்சத்திலிருந்து 1992 இறுதியில் ரூ. 9,230 இலட்சத்திற்குக் கணிசமான வீழ்ச்சியொன்றைக் காட்டியது. குறுங்கால வசதிகளுள் பெரும்பாலும் அனைத்துத் தர வகைகளின் கீழுமான வெளி நின்ற மட்டங்கள் வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன. அதேவேளை, நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியத்தின் கீழான மீள் நிதியிடல் வசதிகள் இடைநிறுத்தப்பட்டமையுடன் வகை I—III இன் கீழான வெளிநின்ற நிலுவைகள் இவ்வாண்டில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தன. எனினும், இடர்நிலையிலுள்ள நிதிக்கூட்டு நிலையங்களிலிருந்துவரும் மீள் நிதியிடல் வேண்டுகோள்களுக்கு மத்திய வங்கி தொடர்ந்தும் இடமளித்து வருவதனால் ந.நீ. கால கொடுகடன் நிதியத்தின் வகை IV இன் கீழான வெளிநின்ற நிலுவைகள் ரூ. 21,860 இலட்சத்திலிருந்து ரூ. 30,360 இலட்சத்திற்கு உயர்வடைந்தன. இவ்வாண்டுக் காலத்தில் நிதிக் கூட்டு நிலையங்களின் பேரிலான மீள் நிதியிடல் கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்பு ரூ. 9,460 இலட்சமாக விளங்கியது. இவ்வேண்டுகோள்களுக்கு இடமளிக்கும் பொருட்டு ந.நீ. கொடுகடன் நிதியம் ரூ. 9,250 இலட்சத்தினால் உயர்த்தப்பட்டமை இந் நிதியத்தில் கிடைக்கத்தக்கதாக இருந்த மூலவளங்களை ரூ. 49,250 இலட்சத்திற்கு உயர்த்தியது.

நேரடியான நாணயக் கட்டுப்பாட்டுக் கருவிகளிலிருந்து மறைமுக நாணயக் கட்டுப்பாடுகளுக்கு நகர்வதையும் நாணயக் கொள்கையை நெறிப்படுத்த சந்தை விசைகளை அனுமதிப்பதனையும் நோக்கமாகக் கொண்டு தெரிந்தெடுக்கப்பட்ட இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகளுக்கெதிரான நாணயக் கடிதங்களின் மீது 1989 தொடக்கம் இருந்துவந்த 100 சதவீத வைப்பு வரையறையை மத்திய வங்கி அகற்றிவிட்டது. அதேபோன்று தெரிந்தெடுக்கப்பட்ட முன்னுரிமையல்லாத் துறைகளுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன்களின் மீது தொழிற்பட்டுக் கொண்டிருந்த கொடுகடன் உச்ச எல்லையும் அகற்றப்பட்டது. இதன் விளைவாக 1992 இல் நாணயக் கொள்கை சந்தை சார்ந்த கட்டமைப்பிற்குள் முழுமையாக வைத்திருக்கப்பட்டது.

**வட்டி வீதங்கள்**

கொடுகடனுக்கான உறுதியான உயர்ந்த கேள்வி மற்றும் ஒன்று திரண்ட வெளிநாட்டுச் சொத்துக்களின் காரணமாக ஏற்பட்ட மிகையான திரவத்தன்மையை அகற்றிக் கொள்வதற்காகத் தீவிரமான சிறந்த சந்தைத் தொழிற்பாடுகளுக்கான தேவை என்பவற்றின் பின்னணியில், குறுங்கால வட்டி வீதங்கள் 1992 இல் மிக உயர்வாக இருந்தன. இறுக்கமான நாணயக் கொள்கை நிலையினைத் தொடரும் விதத்தில் மத்திய வங்கியும் 17 சதவீதத்தில் பேணப்பட்ட வங்கி வீதத்தினை நோக்கி மீள் நிதியிடல் வீதங்களையும் உயர்த்தியது. வங்கிகளின் அனைத்து வைப்புப் பொறுப்புக்களையும் உள்ளடக்கத்தக்கதாக நியதி ஒதுக்குத் தேவை விரிவாக்கப்பட்டமையும் குறுங்கால வட்டி வீதங்கள் உயர்ந்த வீதத்தில் நிலைபெறத் தூண்டின. அதேவேளை குறுங்கால உயர் வட்டி வீதங்களின் தாக்கத்தின்கீழ், நடுத்தர நீண்டகால வட்டி வீதங்களும் இவ்வாண்டில் உயர்வாக விளங்க வழியேற்பட்டது.

**குறுங்கால வீதங்கள்**


உயர்ந்து செல்லும் வெளிநாட்டுச் சொத்துக்கள், திறைசேரி உண்டியல் களினூடான அரசின் கடன்பாடுகள் என்பனவற்றிலிருந்தும் உருவான மிகையான திரவத் தன்மையை வறிதாக்கும் மத்திய வங்கியின் தொடர்ச்சியான முயற்சி களின் நோக்கில் திறைசேரி உண்டியல் சந்தையின் வட்டி வீதங்கள் குறிப்பாக 1992 இன் முதல் மூன்று காலாண்டுகளிலும் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. இதன்படி, 3 மாத முதிர்ச்சியைக் கொண்ட திறைசேரி உண்டியல்களின் மீதான கணிக்கப்பட்ட சராசரி விளைவு 1991 இறுதியில் ஆண்டொன்றிற்கு 16.33 சதவீதத்திலிருந்து, ஆண்டின் இறுதியில் 17.70 சதவீதத்திற்கு வீழ்ச்சியுறமுன்னர், 1992 ஒற்றோபரில் ஆண்டிற்கு 18.33 சதவீதத்திற்கு உயர்வடைந்தது. இதே போன்று 6 மாத, 12 மாத முதிர்ச்சிக் காலங்களைக் கொண்ட திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவும் 1991 இறுதியில் ஆண்டிற்கு 16.38—17.43 சதவீத வீச்சிலிருந்து 1992 இறுதியில் ஆண்டிற்கு 18.05—19.00 சதவீத வீச்சிற்கு உயர்வடைந்தது. இவ்வபிவிருத்திகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 1992 இல் இரண்டாந்தரச் சந்தையின் கழிவு மற்றும் மீள் கழிவு வீதங்களும் அதிகரித்தன. இதன்படி கழிவு வீதங்கள் 1991 இறுதியில் ஆண்டிற்கு 15.05—17.30 சதவீத வீச்சிலிருந்து 1992 இறுதியில் ஆண்டிற்கு 17.26—18.06 சத வீதத்திற்கு அதிகரித்தவேளையில் மீள் கழிவு வீதங்கள் இதே காலப் பகுதியில் ஆண்டிற்கு 17.21—20.12 சதவீதத்திலிருந்து ஆண்டிற்கு 18.85—21.95சத வீச்சிற்கு வேறுபட்டன.

அழைப்புப் பணச் சந்தையில் வட்டி வீதங்கள் 1992 ஓகத்தில் ஒரு குறுங் காலம் நீங்கலாக தொடர்ந்தும் பரந்தளவு தளம்பலுக்குட்பட்டிருந்தன. இதனால் 1991 இறுதியில் ஆண்டிற்கு 13–27 சதவீதத்திற்கு வேறுபட்டிருந்த அழைப்புப் பண வீதங்கள் ஆண்டின் இறுதியில் ஆண்டிற்கு 10–32 சதவீத வீச்சிற்குப் பரந்தளவில் வேறுபடுவதற்கு முன்னதாக 1992 ஓகத்தில் 15–19 சதவீதத்திற்குக் குறுகிக் காணப்பட்டது. உயர்ந்த திறைசேரி உண்டியல் வீதங் களுக்கு இணையாக, 12–24 மாத முதிர்ச்சிகளைக் கொண்ட வைப்புக்களுக்கு வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட ஆகக்கூடிய வைப்பு வீதங்கள் ஆண்டிற்கு 20—21 சதவீத வீச்சில் நிலைபெறுவதற்கு வழியமைக்கப்பட்டது. அதேவேளை, குறுங்கால வைப்புக்கள் மீதான ஆகக்கூடிய வீதங்கள் 1992 இல் ஆண்டிற்கு 18.0 சதவீதத்திற்கும் 18.5 சதவீதத்திற்குமிடையில் வேறுபட்டன.

தேசிய சேமிப்பு வங்கி தனது வைப்பு வீதங்களை முன்னைய ஆண்டின் மட்டத்தில் பேணியது. இதனால் சேமிப்பு வைப்புக்களுக்கு வழங்கப்பட்ட வீதங்கள் இவ்வாண்டில் 14 சதவீதத்தில் பேணப்பட்டவேளையில் 12 மாத, 24 மாத வைப்புக்களுக்கு வழங்கப்பட்ட வீதங்களும் எவ்வித மாற்றமுமின்றி முறையே 17.0 சதவீதமாகவும் 18.5 சதவீதமாகவும் விளங்கின. வர்த்தக வங்கிகளினாலும், நிதிக் கூட்டு நிலையங்களினாலும் வைப்புச் சான்றிதழ்களின் மீது வழங்கப்பட்ட வட்டி வீதங்களில் எவ்வித மாற்றமும் இருந்ததாகத் தெரிய வில்லை. வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட வீதங்கள் 9.0–22.0 சதவீத வீச்சிற்கிடையில் வேறுபட்டன. நிதிக் கூட்டு நிலையங்களின் வைப்பு வீதங்கள் மீதான உச்ச எல்லை தொடர்ந்தும் 24 சதவீதமாக இருந்தமையுடன், நிதிக் கூட்டு நிலையங்களினால் வழங்கப்பட்ட வட்டி வீதங்கள் ஆண்டிற்கு 12.0–22.0 சதவீத வீச்சிற்கிடையில் வேறுபட்டன. வட்டிவீத அமைப்பு திரிபடை வதனைக் குறைக்கும் பொருட்டு, குறுங்கால, நடுத்தர நீண்டகாலக் கொடுகடன்

# வட்டி வீதங்கள்

காலாண்டு இறுதி எண்தொகைகள்




இலங்கை மத்திய வங்கி.

வசதிகளுக்குப் பொருந்தத்தக்க மத்திய வங்கியின் மீள் நிதியிடல் விகிதமும் பொருளாதாரத்தில் உயர்ந்த பொதுவான வட்டி வீதங்களைப் பிரதிபலிக்கும் விதத்தில் சந்தை வீதங்களுக்கு இணையாக மேல் நோக்கித் திருத்தப்பட்டன. அதேவேளை வர்த்தக வங்கிகளின் கணிக்கப்பட்ட சராசரி முதன்மைக் கடன் வழங்கல் வீதமும் முன்னைய ஆண்டின் ஆண்டிற்கு 19.6 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1992 இறுதியில் ஆண்டிற்கு 20.2 சதவீதத்திற்கு அதிகரித்தது.

**நீண்டகால வீதங்கள்**

1992 இல் ஆண்டொன்றிற்கு 17–15 சதவீத வட்டி வீதங்களைக் கொண்டிருந்த 2 மற்றும் 4 ஆண்டு முதிர்ச்சிக் காலங்களைக் கொண்ட அரச பிணைகளுடன் நீண்டகால வீதங்கள் தொடர்ந்தும் உயர்வாகவே இருந்தன. ஆய்விற்குரிய ஆண்டில் 2 மற்றும் 4 ஆண்டுகள் முதிர்ச்சியைக் கொண்ட அரச பிணைகளின் 7 தொடர்கள் வழங்கப்பட்டன. சனவரியிலும் பெப்புருவரியிலும் வழங்கப்பட்ட இரண்டு மற்றும் நான்கு ஆண்டுகளைக் கொண்ட பிணைகள் முறையே 16 சதவீத, 15 சதவீத வட்டி வீதங்களைக் கொண்டிருந்தன. எனினும் நடுத்தர, நீண்டகால நிதியங்களுக்கான சந்தை நிலைமைகளைப் பிரதிபலிக்கும் பொருட்டு மாச்சில் இவ்வீதங்கள் 1 சதவீதப் புள்ளியினால் முறையே 17 சதவீதத்திற்கும் 16 சதவீதத்திற்கும் உயர்த்தப்பட்டன. 1992 ஒற்றோபர் தொடக்கம் மத்திய வங்கியும் 2 ஆண்டு முதிர்ச்சிக் காலத்தைக் கொண்ட திறைசேரி உண்டியல்களை ஏலமிடத் தொடங்கியது. இத் திறைசேரி உண்டியல்கள் மீதான விளைவு ஆண்டிற்கு 19.75–20.18 சதவீத வீச்சில் வேறுபட்டது.

அதேவேளை தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மைச் சபை 1 ஆண்டின் பின்னர் மீட்புச் செய்யக்கூடிய தொகுதிக் கடன்களை 18 சதவீத வட்டியில் வழங்கியது. வட்டிவீத அமைப்பிலுள்ள சமமற்ற தன்மையைக் குறைக்கும் பொருட்டு நடுத்தர, நீண்டகால மீள் நிதியிடல் வீதங்கள் 2 சதவீதப் புள்ளியினால் மேல்நோக்கித் திருத்தப்பட்டன. முன்னைய ஆண்டினைப் போன்றே, தேசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வழங்கல் வீதமும் தொடர்ந்தும் சந்தை நிலைமைகளைப் பிரதிபலிப்பதாக இருந்தது. இதனால் சிறிய, நடுத்தரக் காலக் கைத்தொழில்களின் (சி.ந.கை. IV) கீழான மீள் நிதியிடல் வீதங்கள் வர்த்தக வங்கிகளின் சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதங்களின் அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்டதுடன் இது 1991 இன் 14.1 சதவீதத்திலிருந்து 1992 இல் 13.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. அதேவேளை இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் கடன் வழங்கல் வீதம் ஆண்டிற்கு 17.5–23.5 சதவீத வீச்சில் காணப்பட்டன. கருவிகளுக்கான நிதியிடல், வர்த்தகக் கட்டடங்களின் கட்டுமானம் போன்றவற்றிற்கான தவணைக் கடன்கள் தொடர்பாகத் தேசிய அபிவிருத்தி வங்கியின் கடன் வழங்கல் வீதம் ஆண்டிற்கு 19.0–20.5 சதவீத வீச்சிற்கிடைப்பட்டிருந்தது.

1991 திசெம்பரில் தனது வீதங்களை 20.5 சதவீதத்திற்கு ஒருமுகப்படுத்திய அரச ஈட்டு முதலீட்டு வங்கி 1992 இலும் இதே வீதத்தினையே தொடர்ந்தும் விதித்தது. அதேவேளை தேசிய சேமிப்பு வங்கி வீடமைப்பு மற்றும் சொத்து அபிவிருத்தி செயற்றிட்டங்களுக்கான கடன்களை ஆண்டிற்கு 18–23 சதவீத வீச்சினைக் கொண்ட வீதத்தில் தொடர்ந்தும் வழங்கியது.

## வங்கித் தொழில் அபிவிருத்தி

### கிளை விரிவாக்கம்

நாட்டில் தொழிற்படும் வர்த்தக வங்கிகளின் மொத்த எண்ணிக்கை 1992 இறுதியில் 23 ஆகக் காணப்பட்டது. புதிய மலேசிய வங்கியான பப்பிளிக் பாங் பேர்காட் 1992 மாச்சில் கொழும்பில் கிளையொன்றை நிறுவியிருந்த போதும் 1992 சனவரியில் வரையறுக்கப்பட்ட பாங் ஒவ் கிறடிட் அன்ட் கொமர்ஸ் இன்ரனசனல் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியினால் பொறுப் பேற்கப்பட்டமையின் காரணமாக, இலங்கையிலுள்ள வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை 17 ஆகியது.

அதேவேளை, ஆய்விற்குரிய ஆண்டிலும் நாடு முழுவதும் வங்கித் தொழில் கிளையமைப்பின் விரிவாக்கம் தொடர்ந்தும் நடைபெற்றது. 1992 இல் உள்நாட்டு வர்த்தக வங்கிகள் முன்னைய ஆண்டில் திறக்கப்பட்ட 19 கிளை களுடன் ஒப்பிடுகையில் 41 புதிய கிளைகளை நிறுவின. வெளிநாட்டு வர்த்தக வங்கிகளினால் திறக்கப்பட்ட கிளைகளின் மொத்த எண்ணிக்கை 7 ஆகும். இதனால் வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1991 இறுதியின் 762 இலிருந்து 1992 இறுதியில் 810 இற்கு உயர்வடைந்தது. தேசிய சேமிப்பு வங்கியின் கிளையமைப்பு 3 இனாலும், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் கிளையமைப்பு 32 இனாலும் அதிகரித்தமையினால் வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1,050 இற்கு உயர்வடைந்தது. இதனால் வங்கித் தொழில் அடர்த்தி ஒவ்வொரு 10,000 குடித்தொகைக்கும் வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 1991 இல் 0.5622 இலிருந்து 1992 இல் 0.6034 இற்கு அதிகரித் தது.

நாட்டின் முன்னணி வர்த்தக வங்கியான இலங்கை வங்கி கொக்கலவில் கிளையொன்றைத் திறந்ததுடன் வெள்ளவாயா வேளாண்மைப் பணி நிலையக் கிளையை முழுமையான கிளையாகத் தரமுயர்த்தியது. இலங்கை வங்கி நான்கு விரிவாக்க அலுவலகங்களைக் கொழும்பிலுள்ள உலக வர்த்தக நிலையம், கொழும்பு 13 இலுள்ள இலங்கைச் சுங்க றைகோ விரிவாக்க அலுவலகம், வெல்லம்பிட்டியாவிலுள்ள வரையறுக்கப்பட்ட லக்சிறி சேவாவிலுள்ள சுங்க விரிவாக்க அலுவலகம், சப்பிரகமுவா மாகாணத்திலுள்ள பம்பகினை இணைந்த பல்கலைக்கழகக் கல்லூரி ஆகிய இடங்களில் நிறுவியது. இவ்வபிவிருத்திகளைத் தொடர்ந்து இலங்கை வங்கியின் முதன்மைக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை 250 இலிருந்து 252 இற்கு உயர்ந்த வேளையில் விரிவாக்க அலுவலகங்களின் மொத்த எண்ணிக்கை 1991 இன் 13 இலிருந்து 1992 இறுதியில் 17 இற்கு உயர்வடைந்தது. எனினும் ஆய்விற்குரிய காலப் பகுதியில் வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் மற்றும் கச்சேரிக் கிளைகளின் எண்ணிக்கை 36 இலிருந்து 35 இற்கு வீழ்ச்சியடைந்தது. 1992 இல் மக்கள் வங்கி 5 கிளைகளைக் கெஸ்பாவ, கொட்டாவை, கொழும்பு 11, கொக்கல, லக்கி பிளாசா (கொழும்பு 3) ஆகிய இடங்களில் திறந்தமையின் மூலம் அதன் கிளைகளினது வலையமைப்பு ஆண்டின் இறுதியில் 313 ஆகியது.

உள்நாட்டு தனியார் வர்த்தக வங்கிகளும் அவற்றின் கிளையமைப்பினைக் குறிப்பாகக் கிராமியப் பிரதேசங்களில் விரிவாக்கிக் கொண்டன. வரையறுக்கப் பட்ட செலான் வங்கி 9 புதிய கிளைகளை ஜா—எல, கடவத்தை, தெகியத்த கண்டிய, களுத்துறை, திஸ்ஸமாராம, கொழும்பு 7, அட்டன், மாத்தளை,

அட்டவணை 1.63

வங்கிக் கிளைகளின் பரம்பல் 1990—1992

| வகை | | 1990 | 1991 | 1992 |
|---|---|---|---|---|
| 1. நிறுவனங்களின் எண்ணிக்கை | ... | 36 | 38 | 39 |
| 1. 1. வர்த்தக வங்கிகளின் எண்ணிக்கை | ... | 24 | 23 | 23 |
| 1. 1. 1. உள்நாட்டு வங்கிகளின் எண்ணிக்கை | ... | 6 | 6 | 6 |
| 1. 1. 2. வெளிநாட்டு வங்கிகளின் எண்ணிக்கை | ... | 18 | 17 | 17 |
| 1. 2. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளின் எண்ணிக்கை (அ) | ... | 12 | 15 | 16 |
| 2. கிளைகளின் எண்ணிக்கை (ஆ) | ... | 918 | 967 | 1,050 |
| 2. 1. வர்த்தக வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | ... | 741 | 762 | 810 |
| 2. 1. 1. உள்நாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை (இ) | ... | 718 | 737 | 781 |
| 2. 1. 1. 1. வேளாண்மைப் பணி நிலையக் கிளைகளின் எண்ணிக்கை | ... | 38 | 36 | 35 |
| 2. 1 2. வெளிநாட்டு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | ... | 23 | 25 | 29 |
| 2. 2. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக்கிளைகளின் எண்ணிக்கை | | 101 | 124 | 156 |
| 2. 3. தேசிய சேமிப்பு வங்கிக் கிளைகளின் எண்ணிக்கை | ... | 76 | 81 | 84 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

(அ) 1985இன் எண் 15 கொண்ட பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிச் சட்டத்தின்கீழ் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் நிறுவப்பட்டன.

(ஆ) தலைமை அலுவலகங்கள் உட்பட.

(இ) விரிவாக்க அலுவலகங்கள், கச்சேரிக் கிளைகள், கொடுப்பனவு அலுவலகங்கள், வெளிநாட்டுக் கிளைகள் உட்பட. ஆனால், தலைமையலுவலக கிளைகளின் விரிவாக்க அலுவலகத்தில் இயங்கும் வேளாண்மைப் பணி நிலையக் கிளைகள் நீங்கலாக.

கோமாகம ஆகிய இடங்களில் திறந்த வேளையில் யக்கல, கொட்டாவ, சறிக்க முல்ல, பொரலஸ்கமுவ, அத்திட்டிய, களுபோவில ஆகிய இடங்களிலிருந்த 6 நடமாடும் கிளைகளை முழு அளவிலான கிளைகளாகத் தரமுயர்த்தியது. இதனால் வரையறுக்கப்பட்ட செலான் வங்கியினது மொத்தக் கிளைகளின் எண்ணிக்கை ஆண்டிறுதியில் 44 ஆகக் காணப்பட்டது. இதேவேளை வரை யறுக்கப்பட்ட செலான் வங்கியும் 4 நடமாடும் கிளைகளை மன்னம்பிட்டி, வெலிவேரிய, பொகவந்தலாவை, கொட்டகலை ஆகிய இடங்களில் திறந்தது. வரையறுக்கப்பட்ட வர்த்தக வங்கியும் 7 புதிய கிளைகளைப் புறக்கோட்டை, வென்னப்புவ, காலி மாநகரம், கொக்கலை, பத்தரமுல்லை, முகத்துவாரம், எம்பிலிப்பிட்டி ஆகிய இடங்களில் திறந்தமையின் மூலம் அதன் கிளைகளின் கிளையமைப்பினை விரிவாக்கிக் கொண்டது. இதன்படி இலங்கை வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை ஆண்டின் இறுதியில் 28 இற்கு உயர்ந்தது. வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி 6 கிளைகளைக் கிருலப் பனை, பொலநறுவை, அம்பலாந்தோட்டை, விமான சரக்குக் கிராமம்—கட்டுநாயக்கா, எம்பிலிப்பிட்டி, பியகம முதலீட்டு ஊக்குவிப்பு வலயம் ஆகிய இடங்களில் நிறுவியதுடன் ஆண்டின் இறுதியில் 47 கிளைகளைத் தொழிற் படுத்தியது. அத்துடன், இதுவும் 3 நடமாடும் கிளைகளைப் பன்னாட்டு நீர்ப் பாசன முகாமை நிறுவனம்—பத்தரமுல்லை, சிறி ஜயவர்த்தனபுர வைத்திய சாலைக் கட்டடம்—நுகேகொடை, பொகவந்தலாவை ஆகிய இடங்களில் திறந்

தது. அதேவேளை, வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கி 3 புதிய கிளைகளை மகரகம, தெனியாய, மொரவக்க ஆகிய இடங்களில் திறந்தமையின் மூலம் அதன் கிளையமைப்பு 16 இற்கு உயர்வடைந்தது.

1992 இல் வெளிநாட்டு வங்கிகளும் நாட்டில் அவற்றின் கிளையமைப்பினை விரிவாக்குவதில் தீவிர பங்காற்றின. வரையறுக்கப்பட்ட கொங்கொங் அன்ட் சங்காய் வங்கிக் கூட்டுத்தாபனம் (கொங்கொங் வங்கி) முதல் வெளியூர்க் கிளையைக் கண்டியிலும், இரண்டு துணைக் கிளைகளை வெள்ளவத்தை, நுகே கொடை ஆகிய இடங்களிலும் நிறுவியதன் மூலம் அதனது கிளைகளின் மொத்த எண்ணிக்கை 4 ஆகியது. அதேவேளை வரையறுக்கப்பட்ட ஸ்ரான்டட் சார்ட் டட் வங்கி இரண்டு கிளைகளை வெள்ளவத்தையிலும், கிரிபத்கொடையிலும் திறந்ததுடன், ஏ. என். இசட். கிறின்லேஸ் வங்கி கிருலப்பனையில் புதிய கிளை யொன்றைத் திறந்தது.

ஆய்விற்குரிய காலப் பகுதியில் நாட்டின் முதன்மைச் சேகரிப்பு நிறுவனமான தேசிய சேமிப்பு வங்கி மூன்று புதிய கிளைகளை மகபாகே, பிலிமத்தலாவை, வத்தளை ஆகிய இடங்களில் திறந்தது. இதன்படி இதன் தொழிற்படு கிளைகளின் எண்ணிக்கை 1992 இறுதியில் 84 ஆகியது.

வங்கித் தொழில் துறையின் அபிவிருத்தியுடன் இணைந்து செல்லும் விதத்தில் கிராமிய வங்கித் தொழில் வலை அமைப்பும் ஆய்விற்குரிய ஆண்டில் தொடர்ந்தும் விரிவடைந்தது. 1992 பெப்புருவரியில் அம்பாறை மாவட்டத்தில் புதிய பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கி நிறுவப்பட்டதுடன் பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கியின் மொத்த எண்ணிக்கை 16 இற்கு உயர்வடைந்தது. பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் அம்பாறை, பதுளை, காலி, நுவரெலியா, பொலநறுவை, கண்டி, களுத்துறை, இரத்தினபுரி, குருநாகல், புத்தளம், கேகாலை, அநுராதபுரம், மாத்தளை, அம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங் களில் 32 கிளைகளைத் திறந்ததன்மூலம் அவற்றின் கிளையமைப்பினை விரி வாக்கிக் கொண்டன. இதன்படி பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிக் கிளை வலையமைப்பின் மொத்த எண்ணிக்கை 1992 இறுதியில் 156 ஆக விளங்கியது.

**முகவர் வங்கித் தொழில்**

இலங்கை வங்கியும் மக்கள் வங்கியும் 1988 ஒற்றோபரில் அறிமுகப்படுத்தப் பட்ட மக்கள் கடன் முன்னோடித் திட்டத்தின்கீழ் தொடர்ந்தும் அவற்றின் நடவடிக்கைகளை மேற்கொண்டன. இதன்படி இலங்கை வங்கி 154 கடன் முன்னோடிகளை நியமித்ததன் மூலம் அதன் கடன் முன்னோடிகளின் மொத்த எண்ணிக்கை 1992 இறுதியில் 3,589 இனை அடைந்தது. மக்கள் வங்கியும் 82 கடன் முன்னோடிகளைச் சேர்த்துக் கொண்டதன் மூலம் அதன் கடன் முன்னோடிகளின் மொத்த எண்ணிக்கை 1992 இறுதியில் 6,905 ஆகியது. கடன் முன்னோடிகள் திட்டத்தின் கீழ் இலங்கை வங்கியினாலும் மக்கள் வங்கியினாலும் வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள் முறையே ரூ. 156 இலட்சமாகவும், ரூ. 150 இலட்சமாகவும் விளங்கிய வேளையில் 1992 இறுதியில் வெளிநின்ற மொத்தக் கடன்கள் முறையே ரூ. 3,005 இலட்சமாகவும், ரூ. 2,164 இலட்சமாகவும் விளங்கின.

கிராமியத் துறையில் வசதிகளை மேலும் முன்னேற்றும் பொருட்டு மக்கள் கடன் முன்னோடித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தினை இலங்கை வங்கி மேற் கொண்டது. இத் திட்டத்தின் கீழ் கடன் முன்னோடிகள் இலங்கை வங்கியிலிருந்து ஆண்டிற்கு 21 சதவீத வட்டியில் ரூ. 10,000 வரையில்

மேலதிகப் பற்று வசதிகளைப் பெற்றுக்கொள்ள முடியும். அதனைச் சிறிய கடன் பெறுநர்களுக்கு ஆண்டிற்கு 36 சதவீத வட்டியில் மீள் கடனாக வழங்கலாம். இத்தொகை, மக்கள் கடன் முன்னோடிகளின் திருப்திகரமான செயலாற்றத்தின் அடிப்படையில் ரூ. 50,000 வரைக்கும் உயர்த்தப்படலாம்.

அதேவேளை சம்பத் தொழில் வழங்குநர்கள் திட்டத்தின்கீழ் வரையறுக்கப் பட்ட சம்பத் வங்கி ரூ. 19 இலட்சம் கொண்ட மேலதிகப் பற்றுக்களுக்கு ஒப்புதலளித்தவேளையில் 1992 இறுதியில் வெளிநின்ற தொகை ரூ. 129 இலட்சமாக விளங்கியது. வரையறுக்கப்பட்ட சம்பத் வங்கியினால் நியமிக்கப் பட்ட சம்பத் தொழில் வழங்குநர்களின் மொத்த எண்ணிக்கை 1992 திசெம்பர் இறுதியில் 76 ஆக இருந்தது.

**பணி வசதிகள்**

ஆய்விற்குரிய ஆண்டில், புதிய சேமிப்புத் திட்டங்கள், சிக்கன மற்றும் கடன் திட்டங்கள், கொடுகடன் அட்டைகள், தன்னியக்க ரெலர் பொறிகள், வெளிநாட்டுச் செலாவணி வங்கித் தொழில் வசதிகள், திறைசேரி உண்டியல் களுக்கான முதலாந்தர வணிகர் வசதிகள் என்பனவற்றினூடாக வர்த்தக வங்கி கள் தமது பணி வசதிகளை விரிவாக்கிக் கொண்டன.

இலங்கை வங்கியானது வேலை செய்யும் பெண்களின் தொழில்துறை சார்ந்தோர், சனசக்தி பெறுவோர், பெருந்தோட்ட வேலையாட்கள் போன் றோரிடையே வங்கித் தொழிலை மேம்படுத்தும் பொருட்டுப் புதிய சிக்கனத் திட்டமான ''காந்தா ரண் கினும்'' இனைத் தொடங்கியது. மக்கள் வங்கி, மத்திய கிழக்கில் தொழில் பார்ப்பதற்காக நாட்டைவிட்டுச் செல்லும் இலங்கை யர்களுக்கும் வெளிநாடுகளில் தொழிலிழந்து இலங்கை திரும்புபவர்களுக்கும் உத வும் முகமாகப் புதிய சிறப்புக் கடன் திட்டங்களைத் தொடங்கியது. அதற்குப் புறம்பாக, இலங்கை கடற்படை ஆளணியினர் தளபாடங்கள் மற்றும் கருவி களைக் கொள்வனவு செய்வதற்கான புதிய கடன் திட்டங்களைத் தொடங்கிய துடன் இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் சார்பில் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கான அனுமதிப் பத்திரங்களை வழங்கும் பணியையும் பொறுப் பேற்றுக் கொண்டது.

வரையறுக்கப்பட்ட அட்டன் நஷனல் வங்கி, வெளிநாட்டு நாணயங்களுக் கெதிராகத் தீர்வையற்ற தங்கத்தினை விற்பனை செய்வதற்காகக் கொழும்பு பன்னாட்டு வானூர்தி நிலையத்தில் இரண்டு கடைகளை உள்வரும், வெளிச் செல்லும் கூடங்களில் நிறுவியது. வங்கி வாடிக்கையாளர்களினால் பயன் படுத்தப்பட்ட மின்வலு மற்றும் பணிகளுக்கான கட்டணங்களுக்கான கொடுப் பனவில் வசதி செய்யும் பொருட்டு ''வீட்டு நலன்'' என்ற புதிய கடன் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. 1992 யூனில் வரையறுக்கப்பட்ட செலான் வங்கி வாடிக்கையாளர்களுக்கான உயர் வட்டி சேமிப்புக் கணக்குகளின் கீழ் ''குறைந்த வருவாய் பெறுவோர் வீடமைப்புக் கடன் திட்டம்'' என்ற புதிய திட்டத்தினைத் தொடங்கியது. இத் திட்டத்தின்கீழ் 12 மாத காலத்திற்கு உயர் வட்டி சேமிப்பு கணக்குகளைப் பேணும் வாடிக்கையாளர்கள் ஆகக் கூடியது ரூ. 100,000 கொண்ட வீடமைப்புக் கடனுக்குத் தகைமையுடையவர்களாவர். வரையறுக்கப்பட்ட செலான் வங்கி ''செலான் சேமிப்புச் சான்றிதழ்'' மற்றும் சிறுவர் சேமிப்புக் கணக்குகள்—''ரிக்கிரி'' ஆகிய பெயர்களில் இரு புதிய வைப்புத் திட்டங்களை அறிமுகப்படுத்தியது. வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி ''கொம் பாங் கடன் அட்டை'' என்றழைக்கப்படும் கொடுகடன் அட்டையை

யும், வட்டி முன்பே செலுத்தப்பட்ட ரூ. 500, ரூ. 1,000, ரூ. 5,000, ரூ. 10,000 இனங்களைக் கொண்ட சேமிப்புச் சான்றிதழ்களையும் தொடங்கியது.

ஆய்விற்குரிய காலப் பகுதியில், வரையறுக்கப்பட்ட மத்திய கிழக்கு வங்கி அதன் வாடிக்கையாளர்கள் நாணயக் கடிதங்களைத் திறப்பதற்கு முழுமையாகக் கணனிமயப்படுத்தப்பட்ட பணிகளை அறிமுகப்படுத்தியது. ஸ்ரான்டர்ட் சார்ட்டட் வங்கி ஓராண்டுக் காலத்திற்கு மேலாகச் சராசரி நிலுவையாக ரூ. 5,000 இனைப் பேணும் சேமிப்புக் கணக்குகளை வைத்திருப்போருக்கு ''சேமிப்புக் கணக்குச் சீட்டிழுப்பு'' என்ற புதிய சேமிப்பு வைப்புத் திட்டத்தினைத் தொடங்கியது. அத்துடன் 1992 இல் சிற்றி பாங் என்.ஏ. கொழும்பு சிற்றிகோப் உலகளாவிய பிணைகள் பணிகளின் உறுப்பினராக ஒப்புதலளிக்கப்பட்டது. உலக சந்தையில் தொழிற்படுகின்ற நிதி முகாமையாளர்கள் இவ்வலையமைப்பினூடாக கொழும்பிலுள்ள பாதுகாப்புச் சார்ந்த பணிகளைப் பெற்றுக் கொள்ள முடியும். அதேவேளை வரையறுக்கப்பட்ட கொங்கொங் அன்ட் சங்காய் வங்கிக் கூட்டுத்தாபனம் அதன் வாடிக்கையாளருக்கு ''கெக்ஷாகொன்'' என்றழைக்கப்படும் உலகளாவிய மின்னியல் நிதியியல் பணி வழங்கல் முறைக்கான வசதியினை வழங்கியது. வரையறுக்கப்பட்ட கபீப் வங்கி லிபேர்ட்டி பிளாசாவில் சேமிப்புப் பீடமொன்றினையும் தெரிந்தெடுக்கப்பட்ட இடங்களில் பணம் மாற்றும் பீடங்களையும் திறந்தது.

வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட தன்னியக்க ரெலர் பொறிமுறை 1992 இல் மேலும் விரிவாக்கப்பட்டது. இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளினால் 16 புதிய தன்னியக்க ரெலர் பொறிகள் நிறுவப்பட்டதுடன் 1992 இறுதியில் நாட்டில் தொழிற்பட்ட தன்னியக்க ரெலர் பொறிகளின் மொத்த எண்ணிக்கை 66 ஆக விளங்கியது. கொங்கொங் வங்கி அதன் மின்னியல் ரெல்லர் அட்டையை வைத்திருப்போர் உலகம் முழுவதும் அணுகும் வசதியை மேற்கொண்டது. இது கொங்கொங் வங்கியின் இலங்கைக் கிளைகளின் மின்னியல் ரெலர் அட்டைப் பொறியினை 55 நாடுகளிலுள்ள 150,000 இற்கு மேற்பட்ட கிளையமைப்புக்களுடன் இணைக்கின்றது.

**இலங்கை கொடுகடன் தகவல் பணியகம்**

இலங்கைக் கொடுகடன் தகவல் பணியகம் பங்குடைமையாளர்களுக்கும், கொடுகடன் நிறுவனங்களுக்கும் கொடுகடன் தகவல்களை வழங்கும் அதன் பணிகளை 1992 காலப் பகுதியிலும் தொடர்ந்தும் வழங்கியது. ஒழுங்கற்ற கடன் கணக்குகள் (ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட தவணைக் கொடுப்பனவுகள் நிலுவையாகவுள்ள அல்லது ஏனைய காரணங்களுக்காகக் கொடுகடன் நிறுவனங்களினால் ஒழுங்கற்ற கடன் கணக்குகளாக வகைப்படுத்தப்பட்டவை என வரைவிலக்கணப்படுத்தப்பட்டுள்ளது) மீதான தரவு அடிப்படையின் அளவு முன்னைய ஆண்டின் மட்டத்தில் அதாவது ரூ. 100,000 இல் மாற்றமின்றியிருந்தவேளையில் ஒழுங்கான கடன் கணக்குகளின் மீதான தரவு அடிப்படை ரூ. 1,000,000 இலிருந்து ரூ. 500,000 இற்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் விரிவாக்கப்பட்டது. தரவுகளைப் பூரணப்படுத்தும் கால இடைவெளி ஒவ்வொரு அரையாண்டுகளாக இருந்தபோதும் கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்தான தரவுகளின் உட்பாய்ச்சல் மிகத் துரிதமாக இருந்ததனால் ஒவ்வொரு வரவு பூரணப்படுத்தலையும் பணியகம் மிகவும் விரைவாகச் செய்யக் கூடியதாக இருந்தது. 1992 இறுதியில் பணியகத்தின் தரவு அடிப்படை ஏறத்தாழ 44,200 கடன் பெறுநர்கள் மீதான தகவல்களைக் கொண்டிருந்தது.

*1991* இல் உறுப்புரிமை அனுமதிக்கப்பட்ட *24* பதிவு செய்யப்பட்ட நிதிக் கூட்டு நிலையங்களுக்கான பங்கு ஒதுக்கீடுகள் *1992* இல் பூர்த்தியாக்கப் பட்டன. *1992* ஆம் ஆண்டுப் பகுதியில் இரண்டு மேலதிக நிதிக் கூட்டு நிலை யங்களினதும் புதியதொரு வர்த்தக வங்கியினதும் அனுமதியின் மூலம் பங் குடைமை உறுப்புரிமை அதிகரித்தது. *1992* இறுதியில் *54* பங்குடைமையாளர்கள் காணப்பட்டதுடன் இவை இலங்கை மத்திய வங்கி உரிமம் பெற்ற *23* வர்த்தக வங்கிகள், *26* பதிவு செய்யப்பட்ட நிதிக் கூட்டு நிலையங்கள், தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், அரச ஈட்டு முதலீட்டு வங்கி, தேசிய சேமிப்பு வங்கி என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன.

பங்குடைமைக் கடன் வழங்கல் நிறுவனங்களினால் பணியகத்தின் தகவல் பணியினை அதிசளவில் நாடும் போக்கு *1992* இல் மேலும் வலுவடைந்தது. வழங்கப்பட்ட கொடுகடன் அறிக்கைகள் தனிப்பட்டவர்களின், கூட்டு நிலை யங்களின் மற்றும் பங்குடைமையாளர்களின் நேரடிக் கடன்பாடுகளை மட்டுமன்றி உத்தரவாதங்களும் ஏற்றுக்கொள்ளல்களும் பணிப்பாளர் மற்றும் இணைந்த கூட்டு நிலையங்களின் கடன்பாடுகள் ஆகிய தொடர்புபட்ட தகவல்கள் போன்ற எதிர்பாராத பொறுப்புக்களின் மறைமுகக் தன்மைகளுடன் தொடர்பான ஏனைய தகவல்களையும் உள்ளடக்கியிருந்தன. மேலதிக தகவல்கள் கடன் வழங்கல் நிறுவனங்களின் கொடுகடனை மதிப்பீடு செய்வதற்கு மிகவும் உதவியாக இருந் தன என்பதனை அந் நிறுவனங்களே உறுதி செய்துள்ளன.

**கிராமிய வங்கித்தொழிலும் கொடுகடனும்**

கிராமிய அபிவிருத்தி தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்ததன் காரண மாக, கிராமியத் துறையின் பல்வேறுபட்ட பொருளாதார நடவடிக்கைகளுக்கு மான கடன் பகிர்ந்தளிப்புக்கள் *1992* இல் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. கிராமியத் துறைக்கான கொடுகடன் பாய்ச்சல் முக்கியமாகப் புதிய அனைத்தை யும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம், நடுத்தர, நீண்டகாலக் கொடுகடன் நிதியம், கிருண்டி ஓயா நீர்ப்பாசனக் குடியேற்றச் செயற்றிட்டம், நீண்டகாலப் பயிர் அபிவிருத்தி செயற்றிட்டம், சிறு உடைமையாளர் தேயிலை அபிவிருத்திச் செயற்றிட்டம் மற்றும் வேளாண்மை புத்தாக்கச் செயற்றிட்டம் என்பனவற்றின் கீழ் ஏற்பட்டன. இத் திட்டங்களின் கீழான கொடுகடன் பகிர்ந்தளிப்புக்கள் அதிகரித்தமைக்கு இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப் பட்ட மீள் நிதியிடல் வசதிகளே முக்கிய காரணமாகும்.

**புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமியக் கொடுகடன் திட்டம்**

மேற்குறிப்பிட்ட திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டமையை *1992* ஆம் ஆண்டு காட்டியது. *1992* இல் பு.அ.உ.கி.கொ. திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள் ரூ. *8,650* இலட்சமாக விளங்கி முன்னைய ஆண்டின் எண்தொகையான ரூ. *10,520* இலட்சத்தினைவிட *18* சதவீதம் கொண்ட வீழ்ச்சியைப் பிரதிபலித்தது. *1992* இல் பகிர்ந்தளிக்கப் பட்ட கடனின் பெறுமதி வீழ்ச்சியுற்றமைக்கு முக்கிய பயிர்ச்செய்கைப் பிரதேசங் களில் நிலவிய வரட்சியின் பாதகமான தாக்கமும் முக்கிய காரணமாக இருந்தது. வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதியில் ஏற்பட்ட வீழ்ச்சி, வழங்கப்பட்ட கடன் கள் தொடர்பான எண்ணிக்கை *1991* இன் *83,001* இலிருந்து *1992* இல் *62,355* இற்குக் குறைவடைந்தமையிலும் பிரதிபலித்தது. இது 25 சதவீதமான தொரு வீழ்ச்சியாகும். பு.அ.உ.கி.கொ. திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட கடன்

**புதிய அனைத்தையும் உள்ளடக்கிய கிராமிய கொடுகடன்**

*(31.12.1992 இல்*

| போகம் | மக்கள் வங்கி | | | இலங்கை வங்கி | | | அட்டன் நசனல் வங்கி | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் |
| **1989/90 பெரும் போகம்** | 76.4 | 17.5 | 93.9 | 92.2 | 59.5 | 151.7 | 13.7 | 2.9 | 16.6 |
| **1990 சிறு போகம்** | 54.1 | 47.9 | 102.0 | 71.4 | 41.1 | 112.5 | 1.5 | 8.2 | 9.7 |
| **பயிர்ச்செய்கை ஆண்டு 1990** | 130.5 | 65.4 | 195.9 | 163.6 | 100.6 | 264.2 | 15.2 | 11.1 | 26.3 |
| **1990/91 பெரும்போகம் ...** | 165.3 | 20.4 | 185.7 | 228.4 | 52.2 | 280.6 | 13.0 | 3.9 | 16.9 |
| 1991 சிறு போகம் ... | 66.3 | 88.8 | 155.1 | 103.9 | 57.4 | 161.3 | 3.1 | 12.9 | 16.0 |
| **பயிர்ச்செய்கை ஆண்டு 1991 ...** | 231.6 | 109.2 | 340.8 | 332.3 | 109.6 | 441.9 | 16.1 | 16.8 | 32.9 |
| 1991/92 பெரும்போகம் ... | 185.4 | 28.7 | 214.1 | 179.7 | 65.0 | 244.7 | 18.0 | 5.4 | 23.4 |
| 1992 சிறு போகம் ... | 38.6 | 31.8 | 70.4 | 57.0 | 24.8 | 81.7 | 0.9 | 3.9 | 4.8 |
| பயிர்ச்செய்கை ஆண்டு 1992... | 224.0 | 60.5 | 284.5 | 236.7 | 89.8 | 326.4 | 18.9 | 9.4 | 28.2 |

அட்டவணை 1.64

## திட்டத்தின் கீழ் பயிர்ச்செய்கைக்கு வழங்கப்பட்ட கடன்கள்

உள்ளவாறு)

(ப. இ. ரூபாய்களில்)

| பிரதேசக் கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | | வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி | | | இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் | | | பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் | | | மொத்தக் கடன்கள் | | பு.அ.உ.இ. கொ.தி கீழ் மொத்தக் கடன்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | மொத்தம் | நெல் | துணை உணவுப் பயிர்கள் | |
| 23.2 | 13.9 | 37.1 | — | — | — | — | — | — | — | — | — | 205.5 | 93.8 | 299.3 |
| 28.1 | 29.1 | 57.2 | — | 0.1 | 0.1 | — | 0.1 | 0.1 | — | — | — | 155.1 | 127.4 | 282.5 |
| 51.3 | 43.0 | 94.3 | — | 0.1 | 0.1 | — | 0.1 | 0.1 | — | — | — | 360.6 | 221.2 | 581.8 |
| 105.0 | 27.6 | 132.6 | 0.2 | 0.1 | 0.3 | — | — | — | — | — | — | 511.9 | 104.2 | 616.1 |
| 49.1 | 53.9 | 103.0 | — | 0.5 | 0.5 | — | — | — | — | — | — | 222.4 | 213.5 | 435.9 |
| 154.1 | 81.5 | 235.6 | 0.2 | 0.6 | 0.8 | — | — | — | — | — | — | 734.3 | 317.7 | 1,052.0 |
| 100.3 | 49.3 | 149.6 | — | — | — | — | — | — | 0.4 | 0.1 | 0.5 | 483.8 | 148.5 | 632.2 |
| 37.6 | 37.7 | 75.3 | — | 0.3 | 0.3 | — | — | — | — | — | — | 134.0 | 98.5 | 232.5 |
| 137.9 | 87.0 | 224.9 | — | 0.3 | 0.3 | — | — | — | 0.4 | 0.1 | 0.5 | 617.8 | 246.9 | 864.7 |

மூலங்கள்: மக்கள் வங்கி.
இலங்கை வங்கி.
வரையறுக்கப்பட்ட அட்டன் நசனல் வங்கி·
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.
வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கி
இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

## அட்டவணை 1.65

### வைப்புக்களும் முற்பணங்களும்—கிராமியத்துறை*

(ரூ. '000)

| | கூட்டுறவு கிராமிய வங்கிகள் | | வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கியின் துணை அலுவலகங்கள் | | பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் | | சிக்கன, கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1991 | 1992 | 1991 | 1992 | 1991 | 1992 |
| 1. மொத்தச் சேமிப்புகள் ... ... | 3,448,488 | 4,333,051 | 220,120 | 287,255 | 437,533 | 666,561 | 588,012 | 696,829 |
| 1.1 சேமிப்புகள் ... ... | 3,133,556 | 3,930,578 | 181,219 | 222,747 | 387,806 | 586,943 | 469,570 | 553,437 |
| 1.2 சிறப்புச் சேமிப்புகள் ... ... | — | — | 12,434 | 21,590 | — | — | 78,264 | 90,458 |
| 1.3 நிலையான வைப்புக்கள் ... | 314,932 | 402,473 | 26,467 | 42,917 | 49,727 | 79,618 | 40,178 | 52,934 |
| 2. வழங்கப்பட்ட மொத்தக் கடன்கள்** ... | 583,730 | 595,579 | 208,822 | 134,216 | 595,399 | 703,235 | 608,601 | 715,120 |
| 2.1 வேளாண்மை ... ... | 64,489 | 77,769 | வி.கி. | 50,793 | 340,615 | 321,054 | 175,123 | 188,465 |
| 2.2 விலங்கு வளர்ப்பு ... ... | 45,946 | 38,764 | வி.கி. | 1,106 | 24,336 | 32,800 | 64,026 | 45,972 |
| 2.3 மீன்பிடி ... ... | — | — | — | 6 | 7,967 | 12,925 | — | — |
| 2.4 சிறு கைத்தொழில்கள் ... | 39,310 | 34,916 | வி.கி. | 1,178 | 58,987 | 81,517 | 92,937 | 91,986 |
| 2.5 வீடமைப்பு, மின்னூட்டல் நீர் வழங்கல் ... | 236,920 | 256,360 | வி.கி. | 6,243 | — | — | 152,753 | 249,210 |
| 2.6 செயற்றிட்ட/வர்த்தகம் ... | 111,055 | 102,551 | வி.கி. | 49,638 | 80,010 | 113,023 | 62,482 | 34,326 |
| 2.7 ஏனையவை ... ... | 86,010 | 85,219 | வி.கி. | 25,250 | 83,484 | 141,916 | 61,280 | 105,161 |

* கிராமியப் பகுதிகளிலுள்ள மக்கள் வங்கியினதும் இலங்கை வங்கியினதும் கிளைகள் மீதான நிலைமைகள் நீங்கலாக.

** இவ்வாண்டில் வழங்கப்பட்ட கடன்களின் மொத்தப் பெறுமதி,

மூலங்கள்: மக்கள் வங்கி.
இலங்கை வங்கி.
பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள்.
சிக்கன, கொடுகடன் கூட்டுறவுச் சங்கங்கள்

களில் பெரும் பங்கு நெற் செய்கைக்கானதாக இருந்ததுடன் இது மொத்தத்தில் ஏறத்தாழ 71 சதவீதத்திற்கும் வகை கூறியது. மிகுதித் தொகை துணைப் பயிர்களின் பயிர்ச்செய்கைக்காக வழங்கப்பட்டது.

1992 இல் பு.அ.உ.கி.கொ. திட்டத்தின்கீழ் செலுத்தத் தவறிய கொடுகடன் தொடர்பாக மத்திய வங்கியினால் செலுத்தப்பட்ட இழப்பீடு ஏறத்தாழ ரூ. 110 இலட்சமாக விளங்கி 1992 திசெம்பர் 31 வரை செலுத்தப்பட்ட மொத்த இழப்பீட்டுத் தொகையை ரூ. 630 இலட்சத்திற்குக் கொண்டு வந்தது. மத்திய வங்கியினால் செலுத்தப்பட்ட அத்தகைய இழப்பீடு இத் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட கடன்களின் பேரில் வங்கிகளுக்கு ஏற்பட்ட இழப்புக்களில் 50 சத வீதத்திற்கு வகை கூறியது.

**வேளாண்மைக் காப்புறுதிச் சபை (வே. கா. ச.)**

1992 இல் வே.கா. சபையினால் காப்புறுதி செய்யப்பட்ட நெற் செய்கைப் பிரதேசம் 45,651 எக்டேயர்களாக விளங்கி முன்னைய ஆண்டின் பரப்பளவுடன் ஒப்பிடுகையில் 13 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது. காப்புறுதி செய்யப்பட்ட பரப்பளவு தொடர்பாகச் சேகரிக்கப்பட்ட கட்டணம் 1991 இன் ரூ. 150 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 130 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1992 இல் செலுத்தப்பட்ட இழப்பீடு ரூ. 78 இலட்சமாக விளங்கி 1991 இன் இழப்பீடான ரூ. 90 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 13 சதவீதம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டியது.

**நடுத்தர நீண்டகாலக் கொடுகடன் (ந. நீ. கொ. நிதியம்) வகை 1**

பணவீக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு வங்கியின் கட்டுப்பாடான நாணயக் கொள்கையின் ஒரு பகுதியாக, 1991 திசெம்பர் 23 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் ந.நீ.கொ.க. நிதியத்தின் கீழான மீள் நிதியிடல் ஏற்பாடுகளை மத்திய வங்கி இடைநிறுத்தியமையின் காரணமாக ந.நீ.கொ. நிதியத்தின் கீழான கொடுகடன் திட்டங்கள் எதுவும் 1992 காலப் பகுதியில் தொழிற்பாட்டில் இருக்கவில்லை.

எனினும், மீளாய்விற்குரிய ஆண்டில், தீவு முழுவதற்குமான சுயவேலை வாய்ப்புக் கொடுகடன் திட்டம், தீவு முழுவதற்குமான பண்ணைப்பொறி கடன் திட்டம், தீவு முழுவதற்குமான பாற்பண்ணை அபிவிருத்திக் கொடுகடன் திட்டம், மற்றும் இலங்கை/ஆ.அ. வங்கி விலங்கு வளர்ப்பு அபிவிருத்திச் செயற்றிட்டக் கொடுகடன் திட்டம் என்பனவற்றின் கீழ் வேளாண்மை, வேளாண்மைக் கருவிகளின் கொள்வனவு, விலங்கு வளர்ப்பு, குடிசைக் கைத்தொழில்கள், சிறிய அளவுக் கைத்தொழில்கள் மற்றும் பணிகள் போன்ற சிறியளவு சுயதொழில் வாய்ப்பு செயற்றிட்டங்களுக்காக பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகளுக்கு வரையறுக்கப்பட்ட அளவில் மீள் நிதியிடல் கிடைக்கச் செய்யப்பட்டது. இக் கொடுகடன் திட்டத்தின் கீழ் 1992 இல் வழங்கப்பட்ட மீள் நிதியிடல் மீதான மொத்தத் தொகை ரூ. 570 இலட்சமாக விளங்கியது.

ந.நீ.கொ. நிதியத்தின் கீழான மீள் நிதியிடல் கடன்களின் மீது விதிக்கப்பட்ட வட்டி வீதமானது, சந்தை வட்டி வீதங்களைப் பிரதிபலிக்கும் விதத்தில் 1992 திசெம்பர் 15 ஆம் நாளிலிருந்து பயனுறும் வகையில் ஆண்டிற்கு 11 சத வீதத்திலிருந்து ஆண்டிற்கு 13 சதவீதத்திற்கு மேல்நோக்கித் திருத்தப்பட்டது அதே சமயம் பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்களுக்கு அனுமதிக்கப்பட்ட இலாபத்தினை ஆண்டொன்றுக்கு 5 சதவீதத்திற்குக் குறைக்கும் விதத்தில் கடன் வழங்கல் வீதம் ஆண்டிற்கு 18 சதவீதத்தில் நிர்ணயிக்கப்பட்டது.

**கூட்டுறவு கிராமிய வங்கிகளின் கொடுகடன் வசதிகள் (கூ.கி. வங்கிகள்)**

1992 இல் கூ.கி. வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் ரூ. 5,960 இலட்சமாக அமைந்து முன்னைய ஆண்டின் எண் தொகையான ரூ. 5,840 இலட்சத்தினைவிட 2 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தது. வழங்கப்பட்ட கடனில் பெரும் பங்கு வீடமைப்பு நோக்கங்களுக்கானதாக இருந்தது. இதற்கு அடுத்த இடத்தில் வியாபாரம், செயற்றிட்டங்கள், விலங்கு வளர்ப்பு என்பனவற்றிற்கு வழங்கப்பட்ட கடன்கள் காணப்பட்டன.

**கிராமிய சேமிப்புக்களைத் திரட்டல்**

கிராமியத்துறையின் சேமிப்புக்கள் முக்கியமாக வேளாண்மைப் பணி நிலையங்களிலுள்ள இலங்கை வங்கித் துணை அலுவலகங்கள், கூட்டுறவுக் கிராமிய வங்கிகள், பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள், சிக்கனக் கடன் கூட்டுறவுச் சங்கங்கள் என்பனவற்றினால் திரட்டப்பட்டன. 1992 இல் கிராமியத்துறையில் திரட்டப்பட்ட மொத்தச் சேமிப்புக்கள் 1991 இன் ரூ. 46,940 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் ரூ. 59,840 இலட்சமாக விளங்கி 27 சதவீதம் கொண்ட அதிகரிப்பினைப் பிரதிபலித்தன. கூட்டுறவு கிராமிய வங்கிகளின் பங்களிப்பினைத் தொடர்ந்து (ரூ. 43,330 இலட்சம்)சிக்கனக் கொடுகடன் கூட்டுறவுச் சபைகள் (ரூ. 6,970 இலட்சம்), பிரதேச கிராமிய அபிவிருத்தி வங்கிகள் (ரூ. 6,670 இலட்சம்), வேளாண்மைப் பணி நிலையங்கள் (ரூ 2,870 இலட்சம்) என்பன விளங்கின.

**ஏனைய நிதி நிறுவனங்கள்**

**சேமிப்பு நிறுவனங்கள்**

தேசிய சேமிப்பு வங்கி அதன் மொத்த வைப்புக்களை 1991 இறுதியின் ரூ. 278,150 இலட்சத்திலிருந்து 1992 இறுதியில் ரூ. 328,770 இலட்சத்திற்கு உயர்த்தியது. இது முன்னைய ஆண்டின் உயர்வான 20 சதவீதத்துடன் (ரூ. 47,110 இலட்சம்) ஒப்பிடுகையில் 18.2 சதவீதம் (ரூ. 50,620 இலட்சம்) கொண்டதொரு அதிகரிப்பாகும். நிலையான வைப்புக்கள் மீதான உயர்ந்த வட்டி வீதங்களுக்கு இசைவாக வைப்புக்களின் அதிகரிப்பு ஆய்விற்குரிய ஆண்டில் 28.6 சதவீதத்தினால் (ரூ. 44,480 இலட்சம்) உயர்வடைந்த நிலையான வைப்புக்களுக்கே பெருமளவிற்கு கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அதேவேளை ஆண்டிற்கு 14 சதவீத வட்டியை வழங்குகின்ற புத்தக சேமிப்புத் திட்டத்தின் மூலம் திரட்டப்பட்ட மொத்தச் சேமிப்புக்கள் முன்னைய ஆண்டின் 22 சதவீத (ரூ. 21,110 இலட்சம்)த்துடன் ஒப்பிடுகையில் 5 சதவீதத்தினால் (ரூ. 5,860 இலட்சம்) உயர்வடைந்தன.

1992 இல் தேசிய சேமிப்பு வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த முதலீடு ரூ. 103,580 இலட்சமாக விளங்கியது. திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடு ரூ. 78,770 இலட்சமாக அமைந்து 1992 இன் மொத்த முதலீட்டில் ஏறத்தாழ 75 சதவீதத்திற்கு வகை கூறியது. இதனால் 1992 இறுதியில் தேசிய சேமிப்பு வங்கியின் மொத்தத் திறைசேரி உண்டியல் உடமைகள் ரூ. 166,450 இலட்சமாக விளங்கின. ஆண்டின் இறுதியில் ரூபாப் பிணைகளில் செய்யப்பட்ட மொத்த முதலீடுகள் ரூ. 128,540 இலட்சமாக விளங்கி ரூ. 51,340 இலட்சம் கொண்ட வீழ்ச்சியைக் காட்டின. 1992 இல் தேசிய சேமிப்பு வங்கி ரூபாக் கடன் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உதவுதொகை எதையும் செலுத்தவில்லை. எனினும் 1992 இல் தேசிய சேமிப்பு வங்கியிலிருந்து நிருவாக ஒழுங்குகளினூடான அரசின் கடன்பாடுகள் ரூ. 18,450 இலட்சமாக விளங்கின.

ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் நடவடிக்கைகள் 1992 இல் தொடர்ந்தும் விரிவடைந்தன. 1992 இல் நிதியத்தினால் பெறப்பட்ட மொத்த உதவுதொகைகள் ரூ. 750 இலட்சத்தினால் உயர்வடைந்த வேளையில் வெளிநின்ற உறுப்பினர் நிலுவைகள் (பங்கிலாபங்களும் வட்டியும் உட்பட) ரூ. 62,780 இலட்சத்திற்கு அதிகரித்தன.

இவ்வாண்டுக் காலத்தில் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் முதலீடுகள், ரூ. 11,810 இலட்சமாக அமைந்ததுடன் மொத்தம் 1992 இறுதியில் ரூ. 66,910 இலட்சமாக விளங்கியது. இம் முதலீடுகள் முக்கியமாகத் திறைசேரி உண்டியல்கள் மற்றும் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் தொகுதிக் கடன்கள் வடிவில் காணப்பட்டன. 1992 இறுதியில் திறைசேரி உண்டியல்கள் மீதான முதலீடு ரூ. 37,160 இலட்சமாக விளங்கிய வேளையில் அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் தொகுதிக் கடன்களின் மீதான முதலீடு ரூ. 6,050 இலட்சமாக விளங்கியது.

## நீண்டகாலக் கடன் வழங்கல் நிறுவனங்கள்

இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் கடன் வழங்கல் நடவடிக்கைகள் 1992 இல் குறிப்பிடத்தக்க அதிகரிப்புக்களைப் பதிவு செய்தன. வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி காணப்பட்டபோதும், இவ்வாண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட கடன்களின் அளவு முறையே ரூ. 28,930 இலட்சத்தினாலும் ரூ. 16,420 இலட்சத்தினாலும் அதிகரித்தன. அதேவேளை 1992 திசெம்பர் இறுதியில் வெளிநின்ற கடன்கள் ரூ. 11,490 இலட்சத்தினால் ரூ. 47,000 இலட்சத்திற்கு அதிகரித்தன.

1992 இல் இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தின் கடன் வழங்கல் நடவடிக்கையின் குறிப்பிடத்தக்க பண்பாக நடுத்தர காலக் கடன்களின் மிக உயர்ந்த பகிர்ந்தளிப்பு விளங்கியதுடன் இது 1991 இறுதியின் ரூ. 12,190 இலட்சத்திலிருந்து 1992 இறுதியில் ரூ. 31,630 இலட்சத்திற்கு அதிகரித்தது. இதனால் மொத்தக் கடன் பட்டியலில் நடுத்தர காலக் கடன்களின் பங்கு 1991 இன் 34 சதவீதத்திலிருந்து 67 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

## நீண்டகால கொடுகடன் நிறுவனங்களினால் ஒப்புதலளிக்கப்பட்டதும்

| நோக்கம் | இ. அ. நி. கூ | | தே. சே. வ. | | அ. ஈ. மு. வ. | |
|---|---|---|---|---|---|---|
| | 1991 | 1992 | 1991 | 1992 | 1991 | 1992 |
| 1. வேளாண்மை ... | 41 | 54 | 166 | — | — | — |
| (i) பெருந்தோட்டம் ... | 41 | 54 | — | — | — | — |
| (ii) உள்நாடு ... | — | — | 166 | — | — | — |
| (iii) கால் நடையும் பாற் பண்ணையும் ... | — | — | — | — | — | — |
| (iv) மீன்பிடி ... | — | — | — | — | — | — |
| (v) வேளாண்மை நோக்கங் களுக்கான நிலங்களின் கொள்வனவு ... | — | — | — | — | — | — |
| 2. கைத்தொழில் ... | 1,767 | 2,506 | — | — | — | — |
| (i) பெருந்தோட்டப் பயிர் களின் பொறி முறைப் பதப்படுத்தல் ... | — | — | — | — | — | — |
| (ii) வேளாண்மைப் பயிர்களின் பொறி முறைப் பதப்படுத்தல் ... | — | — | — | — | — | — |
| (iii) பொறியியலும் கட்டட வர்த்தகமும் ... | 11 | 36 | — | — | — | — |
| (iv) சுரங்கமகழ்தல் ... | 19 | 14 | — | — | — | — |
| (v) உணவு, குடிபானங்கள், புகையிலை ... | 571 | 492 | — | — | — | — |
| (vi) புடவைகள்அணியும் ஆடைகள் தோல் உற்பத்திகள் ... | 264 | 1,095 | - | — | — | — |
| (vii) இறப்பரும் பிளாத்திக் உற்பத்திகளும் .. | 272 | 156 | — | — | — | — |
| (viii) உலோகங்கள இரசாயனங் கள் பொறியியல் ... | 355 | 241 | — | — | — | — |
| (ix) ஏனைய தயாரிப்புகள் ... | 275 | 472 | — | — | — | — |
| 3. சுற்றுலா ... | 144 | 123 | — | — | — | — |
| 4. வர்த்தகம் ... | — | — | — | — | — | — |
| 5. நிதி ... | 137 | 39 | 2 | 550 | — | — |
| (i) நிதி நிறுவனங்களுக்கான கடன்கள் ... | 137 | 39 | 2 | 550 | — | — |
| (ii) முதலீட்டுக் கடன்கள் ... | — | — | — | — | — | — |
| (iii) ஏனையவைகள் ... | — | — | — | — | — | — |
| 6. வீடமைப்பு ... | — | — | 66 | 105 | 252 | 322 |
| (i) வீடுகளின் கொள்வனவு ... | — | — | 66 | 34 | 59 | 85 |
| (ii) கட்டடவாக்கம் ... | — | — | — | 71 | 193 | 237 |
| 7. கடன் மீட்பு ... | — | — | — | — | — | 4 |
| 8. ஏனைய கடன்கள் ... | 126 | 171 | 734 | 1,052 | — | 11 |
| மொத்தம் (ஒப்புதலளிக்கப் பட்டவை) ... | 2,215 | 2,893 | 968 | 1,707 | 252 | 337 |
| வழங்கப்பட்ட கடன்கள் (1) ... | 1,261 | 1,642 | 965 | 1,700 | 196 | 302 |
| ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த கடன்களில் வழங்கப்பட்ட கடனின் % ... | 57 | 57 | 100 | 100 | 78 | 90 |

குறிப்பு (1) முன்னைய ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்டு மீளாய்விற்குரிய ஆண்டில் வழங்கப்பட்ட கடன்களை உள்ளடக்கும்.

அட்டவணை 1.66

**வழங்கப்பட்டதுமான கடன்களின் நோக்க அடிப்படையிலான பகுப்பாய்வு**

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்

| வீ.அ.நி. கூ. | | தே.அ. வ. | | தே.வீ. அ.மே. | | மொத்தம் | | ஒப்புதலளிக்கப் பட்ட மொத்தக் கடனின் சதவீதமாக | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1991 | 1992 | 1991 | 1992 | 1991 | 1992 | 1991 | 1992 | 1991 | 1992 |
| — | — | 72 | 269 | — | — | 279 | 323 | 4.1 | 3.4 |
| — | — | — | — | — | — | 41 | 54 | 0.6 | 0.6 |
| — | — | 72 | 269 | — | — | 238 | 269 | 3.5 | 2.8 |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | 1,574 | 2,455 | — | — | 3,341 | 4,961 | 48.6 | 52.5 |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | — | — | — | — | 11 | 36 | 0.2 | 0.4 |
| — | — | — | — | — | — | 19 | 14 | 0.3 | 0.1 |
| — | — | 538 | 417 | — | — | 1,109 | 909 | 16.1 | 9.6 |
| — | — | 377 | 1,183 | — | — | 641 | 2,278 | 9.3 | 24.1 |
| — | — | 193 | 184 | — | — | 465 | 340 | 6.8 | 3.6 |
| — | — | 443 | 607 | — | — | 798 | 848 | 11.6 | 9.0 |
| — | — | 23 | 64 | — | — | 298 | 536 | 4.3 | 5.7 |
| — | — | 135 | 433 | — | — | 279 | 556 | 4.1 | 5.9 |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | 33 | — | — | — | 172 | 589 | 2.5 | 6.2 |
| — | — | 25 | — | — | — | 164 | 589 | 2.4 | 6.2 |
| — | — | — | — | — | — | — | — | — | — |
| — | — | 8 | — | — | — | 8 | — | 0.1 | — |
| 52 | 108 | — | — | 617 | 391 | 987 | 926 | 14.4 | 9.8 |
| 15 | 26 | — | — | — | — | 140 | 145 | 2.0 | 1.5 |
| 37 | 82 | — | — | 617 | 391 | 847 | 781 | 12.3 | 8.3 |
| — | — | — | — | — | — | — | 4 | — | — |
| — | — | 957 | 850 | — | — | 1,817 | 2,084 | 26.4 | 22.1 |
| 52 | 108 | 2,771 | 4,007 | 617 | 391 | 6,875 | 9,443 | 100.0 | 100.0 |
| 26 | 108 | 1,300 | 3,589 | 555 | 297 | 4,303 | 7,638 | | |
| 50 | 100 | 47 | 90 | 90 | 76 | 63 | 81 | | |

மூலங்கள்: இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (இ. அ. நி. கூ)
தேசிய சேமிப்பு வங்கி (தே. சே. வ)
அரச ஈட்டு முதலீட்டு வங்கி (அ. ஈ. மு. வ)
வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் (வீ. அ. நி. கூ)
தேசிய அபிவிருத்தி வங்கி (தே. அ. வ)
தேசிய வீடமைப்பு அபிவிருத்தி மேலாண்மை (தே. வீ. அ. மே)

1992 இல் கைத்தொழில் துறைக்கான கடன் வழங்கல்கள் ரூ. 25,060 இலட்சமாக விளங்கின. மேலும் ரூ. 1,230 இலட்சம், ரூ. 1,020 இலட்சம் கொண்ட தொகைகள் முறையே சுற்றுலா மற்றும் போக்குவரத்துத் துறைகளுக்கு வழங்கப்பட்டன. இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனத்தினால் வழங்கப்பட்ட பெரும்பாலான கடன்கள் ரூ. 10 இலட்சத்திற்கும் கூடுதலாகவே இருந்தன. இ.அ.நி. கூட்டுத்தாபனத்திற்குப் பல்வேறு மூலவளங்களிலிருந்தும் உட்பாய்ந்த மூலவளங்கள் தொடர்ந்தும் சாதகமாகவே இருந்தன. மொத்த மூலவளங்களில் 37 சதவீதத்திற்கு வகைகூறிய வாடிக்கையாளர்களின் கடன் மீள் கொடுப்பனவுகள் ரூ. 1,490 இலட்சம் கொண்ட கணிசமான அதிகரிப்பினைக் காட்டியமைக்குக் கடன் மீளளிப்புக்களில் காணப்பட்ட முன்னேற்றமே காரணமாகும். அதேவேளை தொகுதிக் கடன் வழங்கல் மூலமாகப் பெறப்பட்ட மூலவளங்களும் ரூ. 3,140 இலட்சத்திலிருந்து ரூ. 6,180 இலட்சத்திற்கு உயர்வடைந்தன.

1992 இல் தேசிய அபிவிருத்தி வங்கி 1991 இன் ரூ. 27,710 இலட்சம் கொண்ட 213 கடன்களுடன் ஒப்பிடுகையில் ரூ. 40,070 இலட்சம் கொண்ட 312 கடன்களுக்கு ஒப்புதலளித்தது. கடந்த காலப் போக்கின் தொடர்ச்சியாக, 1992 இல் பெரும்பாலான கடன் ஒப்புதல்கள் கைத்தொழில் நோக்கங்கள் தொடர்பானதாக இருந்ததுடன் இது மொத்தக் கடன்களில் 61 சதவீதத்திற்கும் வகை கூறியது. 1992 இல் கடனைப் பெற்ற முதன்மைக் கைத்தொழில்துறைகளாகப் புடவைகள் (ரூ. 11,830 இலட்சம்), அடிப்படை உலோக உற்பத்திகள், (ரூ. 6,070 இலட்சம்), உணவு, குடிபானம், புகையிலை (ரூ. 4,170 இலட்சம்) என்பன விளங்கின. அதேவேளை வேளாண்மை, சுற்றுலா மற்றும் ஏனைய பணிகள் போன்ற ஏனைய நோக்கங்களுக்காக ஒப்புதலளிக்கப்பட்ட கடன்கள் ரூ. 15,520 இலட்சமாக விளங்கின. தேசிய அபிவிருத்தி வங்கியினால் நேரடியாக நிதியிடப்பட்ட செயற்றிட்டங்கள் நடுத்தர மற்றும் பெரிய அளவிலான தன்மையைப் பெரும்பாலும் கொண்டிருந்ததுடன் இவை ரூ. 100 இலட்சத்திற்கும் ரூ. 4,000 இலட்சத்திற்கும் இடைப்பட்ட வீச்சில் அமைந்திருந்தன. இக் கடன்கள் மீது கொடுபடத்தக்க வட்டி வீதம் சராசரியாக ஆண்டிற்கு 19.5 சதவீதமாக இருந்தது. 1992 இல் தேசிய அபிவிருத்தி வங்கியினால் பெறப்பட்ட நிதி ரூ. 56,230 இலட்சமாக விளங்கியது. இவை வெளிநாட்டுக் கடன்பாடுகளையும் (ரூ. 20,610 இலட்சம்), அரச கடன்பாடுகளையும் (ரூ. 19,750 இலட்சம்), கடன் மீள் கொடுப்பனவுகளையும் (ரூ. 15,550 இலட்சம்) உள்ளடக்கியிருந்தன.

1992 இல் அரச ஈட்டு முதலீட்டு வங்கி வீடமைப்புக் கட்டுமானம், வீடுகளின் கொள்வனவு, கட்டட நிலங்களின் கொள்வனவு போன்றவற்றிற்கு நிதியினை வழங்கியதன் மூலம் நாட்டில் வீடமைப்பு நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்குக் கடன் வழங்கல் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டது. வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட மொத்தக் கடன் ரூ. 3,370 இலட்சமாகவும் மொத்தப் பகிர்ந்தளிப்புக்கள் ரூ. 3,020 இலட்சமாகவும் விளங்கின. வழங்கப்பட்ட கடன்களில் பெரும்பாலானவை ஆண்டிற்கு 20.5 சதவீத வட்டியில் ரூ. 100,000 – ரூ. 1,000,000 வரையான வீச்சுக்களுக்கிடையில் இருந்தன. 1992 இல் அரச ஈட்டு முதலீட்டு வங்கியினால் திரட்டப்பட்ட மொத்த மூலவளங்கள் ரூ. 4,790 இலட்சமாக விளங்கியதுடன் இதில் கடன் மீள் கொடுப்பனவுகள் ரூ. 2,570 இலட்சமாகக் காணப்பட்டன.

**நிதிக்கூட்டு நிலையங்கள்**

மத்திய வங்கியுடன் பதிவு செய்துகொண்ட 27 நிதிக் கூட்டு நிலையங்களின் மொத்தச் சொத்துக்கள் / பொறுப்புக்கள் 1992 செத்தெம்பர் இறுதியில் ரூ. 103,000 இலட்சமாக விளங்கின. இது முன்னைய ஆண்டினைவிட 8 சத வீதம் (ரூ. 7,230 இலட்சம்) கொண்டதொரு அதிகரிப்பாகும். பொறுப்புக்கள் பக்கத்தில், நிதிக் கூட்டு நிலையங்களின் மொத்த வைப்புப் பொறுப்புக்கள் 1991 இறுதியின் ரூ. 56,250 இலட்சத்திலிருந்து 1992 திசெம்பர் இறுதியில் ரூ. 56,420 இலட்சத்திற்குச் சிறிதளவில் வீழ்ச்சியடைந்த வேளையில் ஏனைய சொத்துக்கள் இதே காலப் பகுதியில் ரூ. 9,180 இலட்சத்திலிருந்து ரூ. 8,110 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தன. அதேவேளை, கடன்களின் பேரிலான நிதிக் கூட்டு நிலையங்களின் பொறுப்புக்கள் 1991 இறுதியின் ரூ. 19,530 இலட்சத்திலிருந்து 1992 திசெம்பர் இறுதியில் ரூ. 32,740 இலட்சத்திற்கு உயர்வடைந்தன.

சொத்துக்கள் பக்கத்தில், வெளிநின்ற கடன்கள் ரூ. 3,680 இலட்சத்தினால் ரூ. 30,550 இலட்சத்திற்கும் முதலீடுகள் ரூ. 2,860 இலட்சத்தினால் ரூ. 12,940 இலட்சத்திற்கும் உயர்வடைந்தன. அதேவேளை மொத்தச் சொத்துக்களில் 18 சத வீதத்திற்கு வகைகூறிய குத்தகை இவ்வாண்டில் 68 சதவீதத்தினால் (ரூ. 7,400 இலட்சம்) விரிவடைந்தது. நிதிக்கூட்டு நிலையங்களினது சொத்துப் பட்டியலில் மிக முக்கிய பண்பாக இருந்தது யாதெனில் வாடகைக் கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூ. 34,080 இலட்சத்திலிருந்து ரூ. 28,190 இலட்சத்திற்கு மேலும் குறைவடைந்தமையேயாகும். மேலும் 1992 இல் பதிவு செய்யப்பட்ட நிதிக் கூட்டு நிலையங்களின் பொதுவான திரவத் தன்மை நிலைமை முன்னேற்றம் கண்டது. இதனால், வைப்புப் பொறுப்புக்களுக்கான திரவச் சொத்துக்களின் விகிதம் 1991 இறுதியின் 15.9 சதவீதத்திலிருந்து 1992 திசெம்பரில் 18.8 சதவீதத்திற்கு உயர்வடைந்தது.

மத்திய வங்கியினால் பொறுப்பேற்கப்பட்ட நிதிக் கூட்டு நிலையங்களின் எண்ணிக்கை, வரையறுக்கப்பட்ட சாரபூமி இன்ஸ்வெஸ்ட்மண்ட் (பிறைவெட்) கூட்டு நிலையம் ஒழிக்கப்பட்டதன் காரணமாக 1991 இறுதியின் 10 இலிருந்து 1992 இறுதியில் 9 இற்குக் குறைவடைந்தது. இடர்ப்பாட்டிலுள்ள நிதிக் கூட்டு நிலையங்களுக்கு மத்திய வங்கி தொடர்ந்தும், மத்திய வங்கியின் நடுத்தர நீண்ட காலக் கொடுகடன் நிதியிலிருந்தும் மீள் நிதியிடல் வசதிகளின் வடிவில் உதவிகளை வழங்கியது. நிதிக் கூட்டு நிலையங்களுக்கு வழங்கப்பட்ட அத்தகைய மீள் நிதியிடல் கொடுகடனின் அளவு 1992 இல் ரூ. 9,460 இலட்சமாக விளங்கி ஆண்டினிறுதியில் வெளிநின்ற அத்தகைய மீள் நிதியிடலின் மட்டத்தினை ரூ. 18,100 இலட்சத்திற்கு அதிகரித்தது. நிதியிடல் ஆற்றலை வலுப்படுத்தும் நோக்குடன்மத்திய வங்கியினால் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டவாறு 1992 மாச்சு 31 இல் முடிவடைகின்ற நிதியாண்டில் உருவாக்கப்பட்ட இலாபத்திலிருந்து எந்த வீத பங்கிலாபங்களையும் வெளிப்படுத்தப்பட முன்னர் அறவிடமுடியா மற்றும் ஐயத்திற்கிடமான படுகடன்களின் பொருட்டு அதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென அனைத்து நிதிக் கூட்டு நிலையங்களும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

அட்டவணை 1.67

### நிதிக்கூட்டு நிலையங்களின் மூலவளங்களின் மூலங்களும் பயன்பாடும்

(தொகை ரூபா பத்து இலட்சங்களில்)

| விடயம் | 1991 திசெப்பர் 31இல் உள்ளவாறு | 1992 மாச்சு 31இல் உள்ளவாறு | 1992 யூன் 30இல் உள்ளவாறு | 1992 செத்தெம்பர் 30இல் உள்ளவாறு | 1992 திசெம்பர் 31இல் உள்ளவாறு |
|---|---|---|---|---|---|
| மூலங்கள் | | | | | |
| 1. மூலதனக்கணக்கு ... ... | 1,082.0 | 1,107.7 | 1,115.3 | 1,077.8 | 574.0 |
| 2. வைப்புக்கள் ... ... | 5,625.1 | 5,502.4 | 5,470.6 | 5,409.5 | 5 641.8 |
| 3. கடன்பாடுகள் ... ... | 1,952.6 | 2,653.9 | 2,966.1 | 3,040.8 | 3,273.8 |
| 4. ஏனைய பொறுப்புக்கள் ... | 917.8 | 588.4 | 603.8 | 658.5 | 810.8 |
| மொத்தம் ... ... | 9,577.5 | 9,852.4 | 10,155.8 | 10,186.6 | 10,300.4 |
| பயன்பாடு | | | | | |
| 1. வாடகைக் கொள்வனவு வியாபாரம் ... | 3,407.9 | 3,368.0 | 3,293.4 | 3,264.1 | 2,819.0 |
| 2. வெளிநிற்கும் கடன்கள் ... | 2,687.0 | 2,587.7 | 2,678.5 | 2,794.6 | 3,054.7 |
| 3. முதலீடுகள் ... ... | 1,007.7 | 1,133.6 | 1,228.7 | 1,259.2 | 1,293.6 |
| 4. ஏனைய சொத்துக்கள் ... | 2,474.9 | 2,763.1 | 2,955.4 | 2,868.7 | 3,133.1 |
| மொத்தம் ... ... | 9,577.5 | 9,852.4 | 10,155.8 | 10,186.6 | 10,300.4 |
| மத்திய வங்கிக்கு அறிக்கையிட்ட நிதிக் கூட்டு நிலையங்கள் ... | 24 | 27 | 26 | 26 | 27 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

## சிறப்பான நிதியியல் நிறுவனங்கள்

### வணிக வங்கித் தொழில்

*1992* இல் வணிக வங்கித்தொழில் வியாபாரத்தில் இரண்டு புதிய கூட்டு நிலையங்கள் புகுந்தமையுடன் வணிக வங்கித் தொழில் நடவடிக்கைகள் தொடர்ந்தும் விரிவடைந்தன. இதன்படி வரையறுக்கப்பட்ட செலான் வணிக வங்கி *1992* ஒற்றோபரில் தொழிற்பாடுகளைத் தொடங்கியதுடன் வனிக் இன்ங் *1992* நவெம்பரில் கூட்டிணைக்கப்பட்டது. எனினும், வரையறுக்கப்பட்ட மோர்க்கன் டைல் வங்கி இவ்வாண்டில் எவ்வித தொழிற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை. அதேவேளை வணிக வங்கிகள் *1992* பெப்புருவரி *28* திகதியிடப்பட்ட எண் *703/18* கொண்ட அதி சிறப்பு அரச செய்தி மடலின் மூலம் மத்திய வங்கியின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டன.

வர்த்தக உண்டியல்களைக் கழிவு செய்தல் குத்தகை போன்ற நிதியடிப்படையிலான நடவடிக்கைகள் மேலும் விரிவடைவதனைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் வணிக வங்கிகளின் மொத்த வியாபாரம் ரூ. *2,967* இலட்சமாக அமைந்து இவ்வாண்டில் *40* சதவீதம் (ரூ. *845* இலட்சம்) கொண்ட அதிகரிப்பினைப்

பதிவு செய்தது. குத்தகையின் மீதான மொத்த வருமானம் 1991 இன் மொத்த வியாபாரத்தின் 23 சதவீதத்திலிருந்து 1992 இல் 32 சதவீதத்திற்கு உயர் வடைந்தது. கழிவு வர்த்தக உண்டியல்களிலிருந்த வருவாய் 20 சதவீதத்தினால் உயர்வடைந்தபோதும் மொத்தத்தில் அத்தகைய வருமானத்தின் பங்கு முன்னைய ஆண்டின் 51 சதவீதத்திலிருந்து 1992 இல் 44 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

அட்டவணை 1.68

**வணிக வங்கிகளின் நடவடிக்கைகளின் முன்னேற்றம் (1991—1992)**

(ப.இ. ரூபாயகளில்)

| | 1991 | 1992* |
|---|---|---|
| 1. குத்தகையில் உழைத்த வருமானம் ... ... ... | 49.2 | 94.4 |
| 2. வர்த்தக உண்டியல் கழிவின் மீதான வட்டி ... ... | 108.6 | 130.7 |
| 3. கணனி வேலைகளிலிருந்தான வருவாய்... ... ... | 0.8 | 0.7 |
| 4. நிதியியல், சந்தை ஆலோசனை ... ... | 1.5 | 10.5 |
| 5. கீழ்வரைதல் தரகு ... ... ... | 0.8 | 1.8 |
| 6. காப்புறுதித் தரகு ... ... ... | 1.3 | 1.7 |
| 7. ஏனைய வருமானம் ... ... ... | 49.9 | 56.9 |
| மொத்தம் ... ... ... | 212.2 | 296.7 |

* தற்காலிகமானவை

மூலங்கள்: வரையறுக்கப்பட்ட இலங்கை வணிக வங்கி.
வரையறுக்கப்பட்ட மக்கள் வணிக வங்கி.
வரையறுக்கப்பட்ட செலான் வணிக வங்கி.

**குத்தகைக் கூட்டு நிலையங்கள்**

நாட்டில் தொழிற்படுகின்ற பதிவு செய்யப்பட்ட குத்தகைக் கூட்டு நிலையங்களின் எண்ணிக்கை முன்னைய ஆண்டினைப் போன்று மூன்றாகவே இருக்கிறது. இம் மூன்று கூட்டு நிலையங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட குத்தகைகளின் மொத்தப் பெறுமதி 1991 இன் ரூ. 8,930 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 10,650 இலட்சத்திற்கு அதிகரித்து 19 சதவீத (ரூ. 1,720 இலட்சம்) வளர்ச்சியைப் பதிவு செய்தது. கைத்தொழில், பணிகள் மற்றும் ஏனைய துறைகளின் குத்தகை நடவடிக்கைகளில் ஏற்பட்ட மெதுவான போக்கு, வர்த்தகம், கட்டுமானம், போக்குவரத்துத் துறைகளின் குத்தகை நடவடிக்கைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினால் மிகக் கூடுதலாக எதிரீடு செய்யப்பட்டன. வர்த்தகத்துறை ரூ. 1,380 இலட்சம் அல்லது 42 சதவீதம் கொண்ட மிக உயர்ந்த வளர்ச்சியை நிறுவியது. வர்த்தக ஊர்திகளுக்கான மொத்தக் குத்தகை நிதியிடல் ரூ. 5,000 இலட்சமாக அமைந்து 1991 இன் 47 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இது 11 சதவீதம் கொண்ட அதிகரிப்பாக இருந்தது.

**காப்புறுதி**

ஆயுள் மற்றும் பொது வகைகள் ஆகிய இரு காப்புறுதி வியாபாரமும் 1992 இல் குறிப்பிடத்தக்களவில் விரிவடைந்தன. காப்புறுதிப் பத்திரங்களின் எண்ணிக்கை 1991 இன் 279,069 இலிருந்து 1992 இல் 354,881 இற்கு

விரிவடைந்ததுடன் ஆயுள் காப்புறுதி வியாபாரம் பலமாக விரிவடைந்தது. இதன் விளைவாக ஆயுள் காப்புறுதிக் கட்டண வருவாய் ரூ. 11,040 இலட்சத்திற்கு ரூ. 2,070 இலட்சத்தினால் அதிகரித்தது. இவ்வாண்டில் பொதுக் காப்புறுதி வியாபாரமும் விரிவடைந்தது. தற்காலிகத் தரவுகளின் அடிப்படையில் பொது வியாபாரத்தின் மொத்தத்தேறிய கட்டண வருமானம் ரூ. 3,410 இலட்சத்தினால் ரூ. 13,450 இலட்சத்திற்கு அதிகரித்தது. முன்னைய ஆண்டுகளைப் போன்றே உந்து ஊர்தி காப்புறுதிக் கட்டண வருவாய் கட்டண வருவாயில் மிக முக்கிய பங்கிற்குத் தொடர்ந்தும் வகை கூறியது.

**பணச்சந்தை**

**பொதுவான போக்குகள்**

உயர்ந்த திரவத் தன்மை, திறைசேரி உண்டியல்களின் நடத்தை மேலும் சந்தை சார்ந்திருந்தமை ஆகியவற்றின் பின்னணிக்கு எதிராக, பணச் சந்தை 1992 இல் சுறுசுறுப்படைந்து காணப்பட்டது. வங்கியல்லா பொது மக்களின் பங்கேற்பு தீவிரமாகக் காணப்பட்ட திறைசேரி உண்டியல் சந்தை பணச் சந்தையில் குறுங்கால வட்டி வீதங்களை நிர்ணயிப்பதில் மிக முக்கிய பங்கினைக் கொண்டிருந்தது. அதேவேளை வர்த்தக வங்கிகளின் முன்னேற்றமடைந்த திரவத் தன்மை நிலைமைகள் அழைப்புப் பணத்திற்கு மிகையான கேள்வியை ஏற்படுத்தி வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையின் மொத்தச் சுழல்வில் குறைவினை ஏற்படுத்தியது. அவ்வாறிருந்தும்கூட இறுக்கமான நாணயக் கொள்கை நிலை, திறைசேரி உண்டியல் வீதங்களில் பிரதிபலிக்கப்பட்டவாறு பணச் சந்தையில் உயர்ந்த வீதங்கள் உறுதியடைய உதவியுள்ளது.

**வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச்சந்தை**

1992 இல் வங்கிகளுக்கிடையிலான அழைப்புப் பணச் சந்தையின் நடவடிக்கைகள் ஒரு சுருக்கத் தன்மையைக் காட்டியதுடன் மொத்தச் சுழல்வு முன்னைய ஆண்டின் 4 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு (ரூ. 95,490 இலட்சம்) மாறாக 8 சதவீதத்தினால் (ரூ. 176,950 இலட்சம்) வீழ்ச்சியடைந்தது. வர்த்தக வங்கிகளின் முன்னேற்றமடைந்த திரவத் தன்மை நிலைமை இவ்வாண்டில் அழைப்புப் பணத்திற்கான கேள்வி பொதுவாகக் குறைவடைந்தமைக்குத் தூண்டுதலாக அமைந்திருந்தது. எனினும் 1992 செத்தெம்பரில் வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வைப்புக்களையும் உள்ளடக்கத்தக்க விதத்தில் ஒதுக்குத் தேவைகள் விரிவாக்கப்பட்டமையின் காரணமாக உருவாக்கப்பட்ட திரவத்தன்மைக் கட்டுப்பாடுகளைத் தொடர்ந்து நான்காம் காலாண்டுப் பகுதியில் அழைப்புப் பணத்திற்கான கேள்வி உயர்வடைந்தது. இதனால் 1991 இறுதியில் 13–27 சதவீத வீச்சிலிருந்து 1992 ஓகத்தில் 15–19 சதவீத வீச்சிற்கு குறுக்கமடைந்த அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் ஆண்டின் இறுதியில் 10–32 சதவீத வீச்சிற்கு மீண்டும் விரிவடைந்தன.

**திறைசேரி உண்டியல் சந்தை**

**(அ) முதலாந்தர திறைசேரி உண்டியல் சந்தை**

திறைசேரி உண்டியல்களின் வர்த்தகத்திற்கு முதலாந்தர வணிகர்கள் நியமிக்கப்பட்டமையும் ஓராண்டிற்குக் கூடுதலான முதிர்ச்சிகளில் திறைசேரி உண்டியல்கள் வழங்கப்பட்டமையும் 1992 இன் திறைசேரி உண்டியல்கள் சந்தையின்

அபிவிருத்தியில் காணப்பட்ட அடிப்படைப் பண்புகளாக இருந்தன. இவ்வாண்டில் முதலாம் தரச் சந்தையில் திறைசேரி உண்டியல்களுக்கு விலை கோருவதற்காக 13 வர்த்தக வங்கிகள் 4 பணத் தரகர்கள் 1 கூறு நம்பிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய 18 அங்கீகரிக்கப்பட்ட முதலாந்தர வணிகர்களை மத்திய வங்கி நியமித்தது. இது திறைசேரி உண்மைச் சந்தை விலையமைப்பின் விரிவுபடுத்துவதனை நோக்க மாகக் கொண்டிருந்தது. இவ்வபிவிருத்திகளுடன், பொது மக்கள் தற்பொழுது திறைசேரி உண்டியல்களைப் போட்டி விலைகளில் கொள்வனவு செய்யக்கூடிய தாகவும் மீள் கழிவு செய்யக் கூடியதாயும் சந்தை வலை அமைப்பு விரிவடைந் துள்ளது. அரச ஆவணங்களுக்கான நீண்ட காலச் சந்தையினை மேம்படுத்தும் பொருட்டு மத்திய வங்கியும் 1992 ஒற்றோபரில் ஈராண்டு திறைசேரி உண்டியல் களை வழங்கத் தொடங்கியது. 1992 ஒற்றோபர்—திசெம்பர் காலப் பகுதியில் வழங்கப்பட்ட ஈராண்டு திறைசேரி உண்டியல்களின் பெறுமதி ரூ. 21,000 இலட்சமாக விளங்கியது.

1992 இல் முதலாந்தரச் சந்தைக்கு விடப்பட்ட திறைசேரி உண்டியல்களின் பெறுமதி முன்னைய ஆண்டின் ரூ. 131.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் 1992 இல் ரூ. 193.8 பில்லியனாக விளங்கியது. வரவு செலவுத்திட்ட நோக்கங்களுக் காக இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட புதிய வழங்கல்கள் முன்னைய ஆண்டின் தொகையான ரூ. 5.0 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 14.1 பில்லியனாக விளங்கியது. இதன்படி வெளிநின்ற திறைசேரி உண்டியல்களின் மொத்தத் தொகை 1991 இறுதியின் ரூ. 72.9 பில்லியனிலிருந்து 1992 இறுதியில் ரூ. 87.1 பில்லியனுக்கு அதிகரித்தது. இவ்வபிவிருத்திகள் காணப்பட்டபோதும் மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடமைகள் இவ்வாண்டில் ரூ. 8.1 பில்லியனால் வீழ்ச்சியடைந்தமைக்கு வங்கியல்லாப் பொதுமக்கள் திறைசேரி உண்டியல் சந்தை யில் அதிகரித்தளவில் பங்கேற்றமையே காரணமாகும். வங்கியல்லாத் துறையின் திறைசேரி உண்டியல் உடமைகள் 1991 இறுதியின் ரூ. 25.1 பில்லியனிலிருந்து 1992 இறுதியில் ரூ. 43.6 பில்லியனுக்கு உயர்வடைந்தன. இதன் விளைவாக மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல் உடமைகள் இரு ஆண்டுகளுக்குமிடையில் ரூ. 29.9 பில்லியனிலிருந்து ரூ. 21.8 பில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது. வங்கி யல்லாத் துறையிலிருந்தான திறைசேரி உண்டியல்களின் முக்கிய முதலீட்டாளர் கள் தேசிய சேமிப்பு வங்கி (ரூ. 16.5 பிலியன்) ஒப்புதலளிக்கப்பட்ட சேம நிதியங்கள் (ரூ. 5.8 பில்லியன்) அரச கூட்டுத்தாபனங்கள் (ரூ. 5.1 பில்லியன்) என்பனவற்றை உள்ளடக்கியிருந்தன. அதேவேளை வர்த்தக வங்கிகளின் திறை சேரி உண்டியல் உடமைகளும் 1991 இன் ரூ. 9.9 பில்லியனிலிருந்து 1992 இல் ரூ.10.7 பில்லியனுக்கு உயர்வடைந்தன.

**(ஆ) இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தை**

வர்த்தக வங்கிகளின் தற்காலிக மிகை நிதியங்களை இடுவதற்கானதொரு இடமாகத் திறைசேரி உண்டியல்களுக்கான இரண்டாந்தரச் சந்தை தொடர்ந்தும் தொழிற்பட்டது. மேலும், கழிவு மற்றும் மீள் கழிவு வீதங்கள் குறுக்கமடைந்தமை இரண்டாந்தரச் சந்தை நடவடிக்கைகளுக்கு மேலதிக தூண்டுதலை வழங்கியது, இதன்படி மத்திய வங்கியிலிருந்தான விற்பனைகள் (கழிவு செய்தல்) 1991 இன் ரூ. 80.4 பில்லியன் கொண்ட விற்பனைகளுடன் ஒப்பிடுகையில் ரூ. 119.4 பில்லியன்களாக விளங்கின. அதேவேளை கொள்வனவுகள் (மீள் கழிவு செய்தல்) 1991 இன் ரூ. 36.7 பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூ. 49.6 பில்லியனாக விளங்கியது. முதலாந்தரச் சந்தையின் அசைவுகளைப் பிரதிபலிக்கின்ற விதத்தில்

இரண்டாந்தரச் சந்தையில் 3 மாத உண்டியல்களுக்கான வருவாய் வீதங்கள் 1991 இன் 15.05 சதவீதத்திலிருந்து 1992 இல் 17.26 சதவீதத்திற்கு உயர்வடைந்தன. இதே போன்று, மீள் கழிவு வருவாயும் இதே காலப் பகுதியில் 17.21 சதவீதத்திலிருந்து 18.85 சதவீதத்திற்கு அதிகரித்தது. 6 மாத, 12 மாதங்களுக்கான கழிவு, மீள் கழிவு வீதங்களும் 15.92 மற்றும் 20.12 சதவீதங்களிலிருந்து 17.45 இற்கும் 21.95 சதவீத வீச்சுக்களுக்கு அதிகரித்தன.

**உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தை**

வர்த்தக வங்கிகளுடனான கொடுக்கல் வாங்கல்களுக்காக மத்திய வங்கியினால் முன் கூட்டியே தீர்மானிக்கப்பட்ட வீதங்களில் இலங்கை ரூபாவிற்கெதிராக ஐ.அ. டொலர்களின் உடன் கொள்வனவு விற்பனை என்பனவற்றினூடாக உள்நாட்டில் வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையினை மத்திய வங்கி தொடர்ந்தும் தொழிற்படுத்தியது. சந்தையை மேலும் தீவிரமாக்கும் பொருட்டு இவ்வாண்டில் உடன் வாங்கல், விற்றல் வீதங்களுக்கிடையிலான இடைவெளி விரிவாக்கப்பட்டது. 1992 இறுதியில் உடன் வாங்கும் வீதம் ரூ. 45.77 ஆக இருந்த வேளையில் விற்கும் வீதம் ரூ. 46.23 ஆக விளங்கியது. முன்னைய ஆண்டின் தொடர்பான வீதங்கள் முறையே ரூ. 42.56/ஐ.அ. டொலர் ஆகவும் ரூ. 42.59/ஐ.அ. டொலர் ஆகவும் இருந்தன. அதேவேளை உடன் நடு வீதம் சராசரியாக முன்னைய ஆண்டின் ரூ. 42.58/ஐ.அ. டொலர் உடன் ஒப்பிடுகையில் 1992 இன் ரூ. 46.00/ஐ.அ. டொலர் ஆகக் காணப்பட்டது.

மத்திய வங்கியின் உடன் கொள்வனவுகள் ஐ.அ. டொலர் 4,580 இலட்சமாக அமைந்து 17 சதவீத (ஐ.அ. டொலர் 960 இலட்சம்) வீழ்ச்சியைப் பதிவு செய்த வேளையில் இவ்வாண்டில் உடன் விற்பனைகள் ஐ.அ. டொலர் 840 இலட்சமாக அமைந்து 71 சதவீத (ஐ.அ. டொலர் 2,090 இலட்சம்) வீழ்ச்சியைக் கொண்டிருந்தது. அதேவேளை முன் மாற்றுச் சந்தையில் மத்திய வங்கியின் பங்கேற்பு முன் மாற்றுக் கொள்வனவுகளுக்கு மட்டுப்படுத்திக் கொண்டது.

**கரைகடந்த சந்தை**

கடந்த காலத்தில் அவதானிக்கப்பட்ட போக்கிற்கு இசைவாக, வர்த்தக வங்கிகளின் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் கரைகடந்த வங்கித் தொழில் நடவடிக்கைகள் 1992 இல் தொடர்ந்தும் விரிவடைந்தன. தொழிற்பாட்டிலிருந்த 23 வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் மொத்தச் சொத்துக்கள்/பொறுப்புக்கள் 1992 இறுதியில் ரூ. 539,280 இலட்சத்தினை (ஐ.அ. டொலர் 11,724 இலட்சம்) அடைந்து 37 சதவீதம் (ரூ. 145,630 இலட்சம்) கொண்ட குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பதிவு செய்தன. கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு முயற்சிகளுக்கான கடன்களும் முற்பணங்களும் 111 சதவீதத்தினாலும் (ரூ. 64,860 இலட்சம்) வதியாதோருக்கான அத்தகைய கடன்களும் முற்பணங்களும் 35 சதவீதத்தினாலும் (ரூ. 64,100 இலட்சம்) குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமை வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் மொத்தச் சொத்துக்களில் ஏற்பட்ட இவ்விரிவிற்கு உதவின. 1992 இல் ஏற்றுமதியாளர்களுக்கு வழங்கப்பட்ட, ரூ. 12,370 இலட்சம் கொண்ட கடன்களாலும் முற்பணங்களாலும் வெ.நா.வ.தொ. பிரிவுகளின் மொத்தச் சொத்துக்களின் நிலைமை உயர்வடைந்தது பொறுப்புக்கள் பக்கத்தில். இவ்வதிகரிப்புக்கள் இவ்வாண்டில் வதிவற்றோர் வைப்

## அட்டவணை 1.69

### பணச் சந்தைத் தொழிற்பாடுகள் (1990—1992)

(ப. இ. ரூபாய்களில்)

| காலம் | | அழைப்புப்பணச் சந்தை | | முதலாந்தரத் திறைச்சேரிச் சந்தை | | | | | | இரண்டாந்தரத் திறைசேரி சந்தை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | ஏற்றுக்கொள்ளப்பட்ட (கொள்வனவுகள்) தொகை | | | | | | |
| | | மொத்தக் கடன் வழங்கல்/ கடன்பாடு | கால முடிவில் வெளி நின்றவை (அ) | மொத்த வெளி நின்றவை | வழங்கப் பட்ட தொகை | மத்திய வங்கி | வர்த்தக வங்கிகள் | ஏனையவை | மொத்தம் | மொத்த விற்பனை | மொத்த கொள்வனவு | கால முடிவில் வெளிநின்ற நிலை |
| 1990 | 1ம் காலாண்டு ... | 41,170 | 877 | 58,967.7 | 31,332.7 | 17,964.1 | 4,915.9 | 8,452.6 | 31,332.7 | 20,290 | 5,006 | 1,175 |
| | 2ம் காலாண்டு ... | 49,012 | 1,188 | 61,967.7 | 30,451.9 | 15,109.6 | 5,569.4 | 9,772.6 | 30,451.7 | 15,296 | 5,184 | 425 |
| | 3ம் காலாண்டு ... | 60,273 | 1,201 | 62,967.7 | 28,431.9 | 11,227.5 | 7,714.4 | 9,490.0 | 28,431.9 | 17,306 | 4,556 | 1,126 |
| | 4ம் காலாண்டு ... | 64,856 | 1,988 | 67,967.7 | 29,621.4 | 16,686.0 | 7,300.6 | 5,634.9 | 29,621.4 | 14,817 | 6,351 | 1,964 |
| 1991 | 1ம் காலாண்டு ... | 50,194 | 1,304 | 68,967.7 | 36,953.2 | 20,370.4 | 7,834.1 | 8,748.6 | 36,953.2 | 25,472 | 8,716 | 2,073 |
| | 2ம் காலாண்டு ... | 54,114 | 2,167 | 70,467.7 | 34,137.2 | 14,953.8 | 4,625.5 | 14,557.9 | 34,137.2 | 16,768 | 8,584 | 1,674 |
| | 3ம் காலாண்டு ... | 65,612 | 798 | 70,467.7 | 28,968.6 | 14,965.3 | 4,265.3 | 9,738.0 | 28,968.6 | 20,069 | 8,489 | 3,040 |
| | 4ம் காலாண்டு ... | 54,940 | 1,592 | 72,967.7 | 31,509.1 | 18,150.4 | 5,237.5 | 8,121.2 | 31,509.1 | 81,078 | 10,898 | 1,453 |
| 1992 | 1ம் காலாண்டு ... | 40,912 | 580 | 73,722.4 | 42,723.3 | 21,652.8 | 4,245.7 | 17,824.8 | 43,723.3 | 32,158 | 12,520 | 2,103 |
| | 2ம் காலாண்டு ... | 58,123 | 1,265 | 76,967.7 | 65,821.3 | 38,341.5 | 8,591.3 | 18,888.5 | 65,821.3 | 41,328 | 10,832 | 1,927 |
| | 3ம் காலாண்டு ... | 45,823 | 1,288 | 82,295.7 | 47,115.7 | 28,346.2 | 8,351.4 | 10,418.0 | 47,115.6 | 24,345 | 11,234 | 3,869 |
| | 4ம் காலாண்டு ... | 62,307 | 1,458 | 87,095.7 | 38,147.9 | 20,851.9 | 12,722.0 | 4,574.0 | 38,147.9 | 21,535 | 15,026 | 3,696 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

(அ) ஒவ்வொரு காலாண்டிலும் இறுதிக் கிழமையில் வெளி நிற்கும் தொகை

புப் பொறுப்புக்கள் 60 சதவீதத்தினாலும் (ரூ. 109,930 இலட்சம்) கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழுவின் தொழில் முயற்சிகளினது வைப்புப் பொறுப்புக்கள் 70 சதவீதத்தினாலும் (ரூ. 12,620 இலட்சம்) அதிகரித்தமையை பிரதிபலித்தன.

**பணச்சந்தைக் கருவிகள்**

வைப்புச் சான்றிதழ்களும் திறைசேரி உண்டியல்களும் 1992 இல் பணச் சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட முக்கிய கருவிகளாகத் தொடர்ந்து விளங்கின. வர்த்தக வங்கிகளாலும் நிதிக் கூட்டு நிலையங்களாலும் வழங்கப்பட்ட வைப்புச் சான்றிதழ்களின் வெளிநின்ற பெறுமதி 1992 இறுதியில் ரூ. 41,300 இலட்சமாக விளங்கி ரூ. 10,790 இலட்சம் கொண்ட அதிகரிப்பினைப் பதிவு செய்தது. இதேவேளை வர்த்தக வங்கிகளினால் வழங்கப்பட்ட வீதங்கள் சிறிதளவு வீழ்ச்சியைக் காட்டி 1991 இன் ஆண்டுக்கு 9–22.5 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 9—22 சதவீத வீச்சிற்கிடையே தளம்பலுற்ற வேளையில் நிதிக் கூட்டு நிலையங்களால் வழங்கப்பட்ட வீதங்கள் 1991 இன் ஆண்டுக்கு 12–24 சதவீத வீச்சுடன் ஒப்பிடுகையில் 12–22 சதவீத வீச்சிற்குள் வேறுபட்டன.

**மூலதனச் சந்தை**

பங்குச் சந்தையானது முந்திய இரு ஆண்டுகளிலும் காணப்பட்ட மேலெழுச்சி கொண்ட நடவடிக்கைகளைத் தொடர்ந்து 1992 இல் மந்த நிலையை அனுபவித்தது. சந்தைக் குறிகாட்டிகளின் கீழ் நோக்கிய போக்கு பல காரணிகளின் செல்வாக்கிற்கு உட்பட்டிருந்தது. 'முதலாவதாக, பெருந்தொகையான புதிய கூட்டு நிலையங்கள் மக்கள் மயப்படுத்தப்பட்டமையால் இரண்டாந்தரச் சந்தையிலிருந்து நிதிகள் முதலாந்தரச் சந்தைக்கு நகர்ந்தன. இரண்டாவதாக, மந்தமான சந்தை நிலைமைகள் காரணமாகக் கூறு நம்பிக்கைகள் முதலீடுகளில் அவதானமாக இருந்தமையினால் பங்குச் சந்தையில் அவற்றின் முதலீடுகள் அவற்றினால் திரட்டப்பட்ட நிதிகளைவிடக் கணிசமான அளவு குறைவாக விளங்கின. மூன்றாவதாக, மூலதனச் சந்தையின் கரடி மனப்பாங்கின் பின்னணியில் பணச் சந்தைக் கருவிகளுக்கான உயர்ந்த வட்டி வீதங்கள் மாற்று முதலீட்டு வழிகளை வழங்கின. நான்காவதாக, பங்கு வர்த்தகம் மீதான மூலதன இலாப வரியினை ஒழித்தல், இலங்கையரல்லாதோரின் பங்கு உடைமை மீதான கட்டுப்பாடுகளைத் தளர்த்துதல் என்பன மூலம் வழங்கப்பட்ட மேலதிக ஊக்குவிப்புக்களின் மத்தியிலும் அதிகமான பங்கேற்போரின் ''பொறுத்திருந்து பார்க்கும்'' கொள்கை காரணமாகப் பங்கு வர்த்தகத்தின் பங்கேற்பு அடங்கலானதாகவே தொடர்ந்தும் விளங்கியது.

பங்குச் சந்தையின் மந்த நிலை பெரும்பாலும் எல்லாச் சந்தைக் குறிகாட்டிகளிலும் பிரதிபலிக்கப்பட்டது. கொ.ப.ப இன் எல்லாப் பங்கு விலைச் சுட்டெண்ணும் (1985=100) 1992 இறுதியில் 605 இற்கு 28 சதவீதத்தால் (233 புள்ளிகள்) வீழ்ச்சியடைந்த வேளையில் அடிக்கடி மாறும் விலைச் சுட்டெண் (1985=100) 31 சதவீதத்தினால் (372 புள்ளிகள்) 827 இற்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளை கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையின் சந்தை மூலதன

அட்டவணை 1.70

## பங்குச்சந்தைக் குறிகாட்டிகள் 1987—1992

| | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 |
|---|---|---|---|---|---|---|
| 1. சந்தை மூலதனவாக்கம் (ப.இ.ரூ.) ... | 18,460 | 15,694 | 17,087 | 36,880 | 81,084 | 64,655 |
| 2. புதிய வழங்கல்களின் எண்ணிக்கை(எண்) | 5 | 10 | 2 | 1 | 5 | 12 |
| 3. வழங்கப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கை (ப.இ.) ... | 819 | 919 | 1,048 | 1,099 | 1,209 | 1,615 |
| 4. பங்கு வழங்கல்களின் பெறுமதி (ப.இ.ரூ.) | 8,196 | 9,190 | 10,404 | 10,908 | 11,640 | 14,660 |
| 5. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (ப.இ.) ... | 17 | 13 | 12 | 42 | 79 | 88 |
| 6. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் பெறுமதி (ப.இ.ரூ.) ... | 334 | 379 | 255 | 1,563 | 4,304 | 4,969 |
| 7. விலைக்குறிகாட்டிகள்—கொ.ப.ப. இன் முழுவதும் திசெ. 31இல் உள்ளவாறு ... | 217.97 | 172.44 | 179.49 | 384.39 | 837.79 | 605.31 |
| கொ. ப. ப. வின் மாறுபடும் சுட்டெண் திசெ. 31இல் உள்ளவாறு ... | 384.12 | 309.56 | 341.74 | 680.30 | 1,198.60 | 826.57 |

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

அட்டவணை 1.71

## முதலீட்டு வகை அடிப்படையில் வழங்கப்பட்ட புதிய பங்குகளின் எண்ணிக்கை 1987—1992

| முதலீட்டு வகை | 1987 | 1988 | 1989 | 1990 | 1991 | 1992 |
|---|---|---|---|---|---|---|
| வங்கி, நிதி, காப்புறுதி ... ... | 2 | 4 | 1 | — | 1 | 1 |
| குளிர்பானங்கள், உணவு, புகையிலை ... | — | — | — | — | — | 2 |
| இரசாயனமும். மருந்தாக்கல்களும் ... | — | — | — | — | — | — |
| கட்டடவாக்கமும் பொறியியலும் ... | — | — | — | — | — | — |
| காலணிகளும், புடவைகளும்... ... | — | — | — | — | 1 | — |
| உணவகங்களும், பயணங்களும் ... | — | — | — | — | 1 | 2 |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை ... | — | — | — | — | — | — |
| காணியும் சொத்தும் ... ... | 1 | 5 | — | — | — | — |
| தயாரிப்பு ... ... | 2 | 1 | — | 1 | 1 | 3 |
| உந்திகள் ... ... | — | — | 1 | — | — | — |
| ஒயில் பாம் ... ... | — | — | — | — | — | — |
| பணிகள் ... ... | — | — | — | — | — | 1 |
| களஞ்சியங்களும் நிரம்பலர்களும் ... | — | — | — | — | — | — |
| வர்த்தகம் ... ... | — | — | — | — | 1 | 3 |
| மொத்தம் ... ... | 5 | 10 | 2 | 1 | 5 | 12 |
| கோரப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (ப.இ.) | 20.59 | 20.15 | 14.0 | 7.0 | 12.1 | 78.2 |
| கோரப்பட்ட பங்குகளின் பெறுமதி (ரூ.ப.இ.) | 205.9 | 201.5 | 140.0 | 70.0 | 121.5 | 1,474.5 |

மூலம்: கொழும்பு பங்கு பரிவர்த்தனை

வாக்கம் 1992 இல் 20 சதவீதத்தினால் (ரூ. 164,300 இலட்சம்) ரூ. 646,550 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்தது. எனினும் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் மொத்தப் புரள்வு 1991 இல் ரூ. 43,040 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 49,690 இலட்சத்திற்கு அதிகரித்த வேளையில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை 790 இலட்சத்திலிருந்து 880 இலட்சத்திற்கு விரிவடைந்தது.

**முதலாந்தரப் பங்குச் சந்தை**

1992 ஆம் ஆண்டுக் காலத்தில் நிலவிய மந்தமான சந்தை நிலைமையின் மத்தியிலும் முதலாந்தரப் பங்குச் சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்ந்து விரிவடைந்தன. 1991 இல் காணப்பட்ட 5 புதிய வழங்கல்களுடன் ஒப்பிடுகையில் 1992 இன் 12 புதிய வழங்கல்கள் காணப்பட்டன. இதேவேளை வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை 1991 இன் 121 இலட்சத்திலிருந்து 1992 இன் 782 இலட்சத்திற்கு அதிகரித்த வேளையில் அத்தகைய பங்குகளின் பெறுமதி 1991 இன் ரூ. 1,215 இலட்சத்திலிருந்து, 1992 இல் ரூ. 14,745 இலட்சத்திற்கு 10 மடங்கிற்கு மேலாக அதிகரித்தது. இவற்றில் வரையறுக்கப்பட்ட இலங்கை வடிசாலைகள் கம்பெனி மொத்த எண்ணிக்கையில் ஏறக்குறைய 57 சதவீதத்திற்கும் புதிய வழங்கல்களின் மொத்தப் பெறுமதியில் 36 சதவீதத்திற்கும் வகை கூறின.

**இரண்டாந்தரப் பங்குச் சந்தை**

முதலாந்தரப் பங்குச் சந்தையில் அவதானிக்கப்பட்ட துரிதமான வர்த்தகத்திற்கு மாறாக இரண்டாந்தரச் சந்தை 1992 இல் வர்த்தக நடவடிக்கைகளில் கணிசமான சுருக்கத்தினைப் பிரதிபலித்தது. சந்தை மூலதனவாக்கம் 1991 இன் ரூ. 810,840 இலட்சத்திலிருந்து 1992 இல் ரூ. 646,550 இலட்சத்திற்கு வீழ்ச்சியடைந்து கொ.ப.ப. இன் எல்லாப் பங்கு விலைச் சுட்டெண் கொ.ப.ப. இன் அடிக்கடி மாறும் விலைச் சுட்டெண் ஆகிய இரண்டும் இவ்வாண்டுக் காலத்தில் கணிசமான வீழ்ச்சியைப் பதிவு செய்தன. எனினும் 1992 இல் மொத்தப் புரழ்வு 16 சதவீதத்தால் அதிகரித்து ரூ. 49,690 இலட்சமாக விளங்கியது. இப்போக்கினைத் தொடர்ந்து பங்கு கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை 1991 இன் 91,571 இலிருந்து 1992 இல் 109,701 இற்குக் கணிசமபக அதிகரித்த வேளையில் விற்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை 790 இலட்சத்திலிருந்து 880 இலட்சத்திற்கு அதிகரித்தது. மேலும் இலங்கையரல்லாதோரின் பங்குக் கொள்வனவுகள் 4 சதவீதத்தால் ரூ. 18,710 இலட்சத்திற்கு அதிகரித்தன.

முந்திய ஆண்டினைப் போன்று வங்கித் தொழில் நிதியிடலும் காப்புறுதியும் பிணைத்துறை ஆகக்கூடிய புரள்வினைப் பதிவு செய்த வேளையில் குடிவகை, உணவும், புகையிலையும் மற்றும் தயாரிப்புத் துணைத் துறைகள் அடுத்த பெரும் வர்த்தகத் தொகைகளைக் கொண்டிருந்தன. வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையின் நியதியில் குடிபானங்கள், உணவும் புகையிலையும் முன்னணியில் விளங்கும் துணைத் துறையாக விளங்கி முந்திய ஆண்டினைப் போன்று பெருந்தொகையான கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்தன.

அட்டவணை 1.72

## 1992 இல் கூட்டுநிலையங்களின் புதிய பங்கு வழங்கல்கள்

| கூட்டு நிலையங்களின் பெயர் | பங்குகளின் எண்ணிக்கை | முகப்புப் பெறுமதி (ரூ) | கட்டணம் (ரூ) | பங்குகளின் பெறுமதி | வழங்கப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை | உதவுநர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| புளூ டயமண்ட் ... ... ... | 9,000,000 | 10 | 2 | 108,000,000 | 9,000,000 | வி.கி. |
| கேலிஸ் எக்ஸ்போட்ஸ் ... ... ... | 625,000 | 10 | 35 | 28,125,000 | 9,968,700 | 31,221 |
| போகல கிறபயிட் ... ... ... | 11,184,400 | 10 | — | 111,844,000 | 15,895,335 | 30,591 |
| எயிற்கன்ஸ்பென்ஸ் கொட்டேல் ... ... ... | 3,856,772 | 10 | 40 | 192,838,600 | 3,856,772 | வி.கி. |
| சோய்வூட்ஸ் ... ... ... | [illegible]62,500 | 10 | 40 | 28,125,000 | 1,293,200 | 5,416 |
| கொம்பக் மொறிசன் ... ... ... | 1,050,000 | 10 | — | 10,500,000 | 13,069,900 | 21,962 |
| கேலிஸ் போட்டோ பிறின்ற் ... ... ... | 375,000 | 10 | 45 | 20,625,000 | 1,057,800 | 4,591 |
| டிஸ்டிலறிஸ் ... ... ... | 45,000,000 | 1 | 10 | 495,000,000 | 149,136,145 | 30,471 |
| குருவித்த டெக்ஸ்டயில்ஸ் ... ... ... | 1,250,000 | 10 | 40 | 62,500,000 | 1,250,000 | 371 |
| கொமர்சல் லீசிங் ... ... ... | 1,833,334 | 10 | 50 | 110,000,040 | 1,883,334 | வி.கி. |
| ஜேம்ஸ் பினாலி ... ... ... | 2,500,000 | 10 | 55 | 162,500,000 | 2,500,000 | வி.கி. |
| றேனுகா கொட்டேல்ஸ் ... ... ... | 1,000,000 | 10 | 30 | 40,000,000 | 1,000,000 | வி.கி. |

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

அட்டவணை 1.73

## 1992 இல் இரண்டாந்தர பங்குச்சந்தையில் வர்த்தகம் செய்யப்பட்ட பங்குகளின் வகைப்படியான பரம்பல்

| முதலீட்டு வகை | கொடுக்கல் வாங்கல்களின் எண்ணிக்கை | பங்குகளின் எண்ணிக்கை | பெறுமதி |
|---|---|---|---|
| வங்கிகள், நிதி, காப்புறுதி ... | 25,815 | 15,071,731 | 1,539,630,478.25 |
| குடிபானங்கள், உணவு, புகையிலை ... | 17,839 | 23,979,830 | 625,759,465.25 |
| இரசாயனமும், மருந்தகங்களும் ... | 2,271 | 912,853 | 79,654,820.75 |
| கட்டிடவாக்கமும், பொறியியலும் ... | 3,548 | 4,203,537 | 102,638,501.50 |
| காலணிகளும், புடவைகளும் ... | 9,126 | 2,755,988 | 134,591,948.50 |
| உணவகங்களும் பயணங்களும் ... | 7,910 | 14,227,830 | 547,224,376.75 |
| முதலீட்டுப் பொறுப்பாண்மை ... | 2,417 | 2,145,348 | 472,460,982.50 |
| காணியும் சொத்தும் ... | 2,894 | 6,717,058 | 138,929,181.00 |
| தயாரிப்பு ... | 28,035 | 14,765,421 | 567,638,970.25 |
| உந்திகள் ... | 2,476 | 3,410,256 | 298,280,636.50 |
| ஒயில் பாம் ... | 15 | 7,124 | 3,746,735.00 |
| பணிகள் ... | 1.338 | 1,180,602 | 325,220,136.00 |
| களஞ்சியங்களும் நிரம்பல்களும் ... | 277 | 242,563 | 30,100,569.50 |
| வர்த்தகம் ... | 5,744 | 1,349,434 | 235,063,900.00 |

மூலம்: கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

### கூறு நம்பிக்கைகள்

1992 இல் சீபாங்க் கூறு நம்பிக்கை, கொம் றஸ்ற் ஒப்புரவு நிதியம் என்பன நிறுவப்பட்டதுடன் நாட்டில் தொழிற்படும் கூறு நம்பிக்கைகளின் எண்ணிக்கை நான்காக உயர்வடைந்தது. 1991 இல் நிறுவப்பட்ட முதல் இரு கூறு நம்பிக்கைகளும் தேசிய ஒப்புரவு நிதியமும் பிரமிட் கூறு நம்பிக்கையும் ஆகும். கூறு நம்பிக்கைகளின் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி 1992 இறுதியில் ரூ. 19,430 இலட்சமாக விளங்கியது. இதில் ரூ. 14,050 இலட்சம் அல்லது 72 சதவீதம் தேசிய ஒப்புரவு நிதியத்திற்கும் சீ பாங்க் கூறு நம்பிக்கைக்கும் உரியதாக விளங்கியது. கூறு நம்பிக்கைகளின் மொத்தச் சொத்துக்களில் ரூ. 7,800 இலட்சம் அல்லது 40 சதவீதம் மட்டுமே பங்குச் சந்தையில் முதலீடு செய்யப்பட்டது. திறைசேரி உண்டியல்கள், பணச் சந்தைக் கருவிகள் என்பன மீதான முதலீடுகள் ரூ. 11,630 இலட்சமாக விளங்கின. கூறு நம்பிக்கைகள் நிறுவப்பட்ட வேளையில் நிலவிய சூடுபிடித்த சந்தை நிலைமைகளும் அதைத் தொடர்ந்து வந்த காலத்தில் பங்குச் சந்தையின் மந்தமான நிலைமைகளும் நம்பிக்கைக் கூறுகள் அவற்றின் முதலீட்டுக் கொள்கைகளில் அவதானமாக இருக்கவும் குறுங்காலப் பணச்சந்தைக் கருவிகளில் முதலிடுவதற்கு முக்கிய இடம் வழங்கவும் தூண்டியதாகத் தெரிகின்றது.